# தமிழ்

## சிகரம்

முதல் பருவம்





தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை – 600025.
www.tamilvu.org

# தமிழ்

## சிகரம்

## முதல் பருவம்

தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600025.

**தமிழ்நாடு அரசு**

**முதல்பதிப்பு** - 2025

விலை: ரூ. 320.00

**பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்**

தமிழ் இணையக் கல்விக்கழகம்

**நூல் அச்சாக்கம்**

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in


| ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும் (18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24×7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்) |
|---|
| குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?<br>மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?<br>பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?<br>அழையுங்கள் குழந்தை உதவி எண் 1098<br>உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்<br>CHILD LINE 1098 NIGHT & DAY |
| மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?<br>பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?<br>தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா?<br>அழையுங்கள் 14417<br>உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்<br>14417 கல்வித் தகவல் மையம் |

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்

சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்

தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்

தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!

அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற

எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

தமிழணங்கே!

உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

வாழ்த்துதுமே!

வாழ்த்துதுமே!

-'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.

# தமிழ்த்தாய் வாழ்த்து - பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும் பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப்பெண்ணே! தமிழ்ப்பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன்வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

| பாடம் | | பாடப்பொருள் | பக்க எண் |
|---|---|---|---|
| 1 | செய்யுள் | தமிழ்விடு தூது | 1 |
| | உரைநடை | தமிழரின் கொடைத்தன்மை | |
| | தெரிந்துகொள்வோம் | மொழிமுதல் எழுத்துகள் | |
| | கேட்டல் கருத்தறிதல் | சார்லி சாப்ளின் | |
| 2 | செய்யுள் | பாரதிதாசன் கவிதைகள் | 14 |
| | உரைநடை | உலகத் தமிழ் மாநாடு | |
| | தெரிந்துகொள்வோம் | மொழியிறுதி எழுத்துகள் | |
| | கேட்டல் கருத்தறிதல் | பி. ஆர். ராஜம் | |
| 3 | செய்யுள் | திருக்குறள் | 27 |
| | உரைநடை | கம்பராமாயணம் காட்டும் நாட்டுவளம் | |
| | தெரிந்துகொள்வோம் | இலக்கண வகைச் சொற்கள் | |
| | கேட்டல் கருத்தறிதல் | துமி | |
| 4 | செய்யுள் | நாடு | 40 |
| | உரைநடை | பிரேசில் | |
| | தெரிந்துகொள்வோம் | இலக்கிய வகைச் சொற்கள் | |
| | கேட்டல் கருத்தறிதல் | நாமக்கல் கவிஞர் | |
| 5 | செய்யுள் | தனிப்பாடல் | 52 |
| | உரைநடை | பண்படுத்தும் பழமொழிகள் | |
| | தெரிந்துகொள்வோம் | வல்லினம் மிகும் இடங்கள் | |
| | கேட்டல் கருத்தறிதல் | ஔவையார் | |

| பாடம் | | பாடப்பொருள் | பக்க எண் |
|---|---|---|---|
| 6 | செய்யுள் | பூமியின் முற்றம் முழுவதும் சுற்றும் | 65 |
| | உரைநடை | ஆதிச்சநல்லூர் | |
| | தெரிந்துகொள்வோம் | வல்லினம் மிகா இடங்கள் | |
| | கேட்டல் கருத்தறிதல் | கரிக்கையூர் பாறை ஓவியம் | |
| 7 | செய்யுள் | முத்தொள்ளாயிரம் | 78 |
| | உரைநடை | கடல்சார் வாழ்வியல் | |
| | தெரிந்துகொள்வோம் | எழுத்துப்போலி | |
| | கேட்டல் கருத்தறிதல் | உப்பு | |
| 8 | செய்யுள் | பூக்கும் மரங்களின் ரகசியம் | 90 |
| | உரைநடை | இயற்கைப் பாதுகாப்பு | |
| | தெரிந்துகொள்வோம் | பகுபதம், பகாப்பதம் | |
| | கேட்டல் கருத்தறிதல் | பனைமரம் | |
| | மீள்பார்வை – பயிற்சிகள் | | 102 |
| 9 | செய்யுள் | சீவக சிந்தாமணி | 107 |
| | உரைநடை | தமிழ் இலக்கியத்தில் கல்வியின் சிறப்பு | |
| | தெரிந்துகொள்வோம் | பகுபத உறுப்புகள் | |
| | கேட்டல் கருத்தறிதல் | திருவள்ளுவர் சிலை | |
| 10 | செய்யுள் | கல்வி செழித்தால்... | 121 |
| | உரைநடை | வலைப்பூவில் பதிவேற்றம் | |
| | தெரிந்துகொள்வோம் | மூவகை மொழி | |
| | கேட்டல் கருத்தறிதல் | வை. மு. கோதைநாயகி | |

| பாடம் | | | பாடப்பொருள் | பக்க எண் |
|---|---|---|---|---|
| 11 | செய்யுள் | : | பட்டினப்பாலை | 134 |
| | உரைநடை | : | தமிழரின் அயல்நாட்டு வணிகம் | |
| | தெரிந்துகொள்வோம் | : | திணை, பால், எண், இடம் | |
| | கேட்டல் கருத்தறிதல் | : | தொழிற்பாடல்கள் | |
| 12 | செய்யுள் | : | தொழிலின் சிறப்பு | 146 |
| | உரைநடை | : | வாரன் எட்வர்ட் பஃபெட் | |
| | தெரிந்துகொள்வோம் | : | வினையாலணையும் பெயர் | |
| | கேட்டல் கருத்தறிதல் | : | உழைப்பின் பலன் | |
| 13 | செய்யுள் | : | சிலப்பதிகாரம் | 158 |
| | உரைநடை | : | தெருக்கூத்து | |
| | தெரிந்துகொள்வோம் | : | வழக்கு | |
| | கேட்டல் கருத்தறிதல் | : | கைத்தறி நெசவுக்கலை | |
| 14 | செய்யுள் | : | காஃபித் தோட்டப் பாட்டு | 173 |
| | உரைநடை | : | தமிழர் கூத்துக் கலைகள் – பொம்மலாட்டம் | |
| | தெரிந்துகொள்வோம் | : | ஆகுபெயர் | |
| | கேட்டல் கருத்தறிதல் | : | தஞ்சாவூர் ஓவியம் | |

மீள்பார்வை – பயிற்சிகள் 188

பாடம் 1

## 1.1 பேசுவோம்

తెలుగు

ગુજરાતી

मराठी

ଓଡ଼ିଆ

தமிழ்

English

മലയാളം

हिंदी

### கலந்துரையாடுவோம்

உங்கள் வகுப்பு நண்பர்களுடனும் உங்கள் வகுப்பு ஆசிரியருடனும் நீங்கள் அறிந்த வெவ்வேறு மொழிகளில் கலந்துரையாடுக.

## 1.2 படிப்போம்

# தமிழ்விடு தூது

ஒருவர் தன் எண்ணத்தை இன்னொருவருக்குத் தெரிவிக்க மனிதரையோ பிற உயிரினங்களையோ அல்லது பொருள்களையோ அனுப்புவதற்குத் தூது என்று பெயர். தூது என்பது தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. இது 'வாயில் இலக்கியம்', 'சந்து இலக்கியம்' என்னும் வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. தமிழ் மொழியையே தூதுவிடுவதாக அமைத்து இயற்றப்பட்ட தமிழ்விடு தூது என்னும் இலக்கியத்திலிருந்து சில பகுதிகளைக் காண்போம்.



நாடவரும் கல்லாதார் சிங்கமெனக் கல்வி கேள்விக்குரியர்
எல்லாரு நீயாய் இருந்தமையால் – சொல்லாரும் (15)

என்னடிகளே உனைக்கண்டு ஏத்தின் இடர்தீருமென்று உன்
பொன்னடிகளே புகலாப் போற்றினேன். (16)

இளங்கனியாய்த் தித்திக்கும் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான

முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள் (69)

உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்து உரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக் கேள் (70)

இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் (151)

## பாடல் விளக்கம்

எல்லாப் புலவர்களிடமும், அவர்களை நாடிவரும் கல்லாதவர்களிடமும், கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கும் எல்லோரிடமும் தமிழையே காண்கிறேன். உன்னைக் கண்டு துதித்தால் என் குறைகள் எல்லாம் நீங்கும் என்று கருதி உன் பொன் போன்ற திருவடிகளையே புகலாகக் கொண்டு போற்றுகிறேன். இனிக்கும் தெளிவான அமுதமாகி அந்த அமுதினும் மேலான முத்தியைத் தரும் கனி போன்ற தமிழே! இயல், இசை, நாடகம் என்ற மூவகையான தமிழ் மொழியே! அறிவால் உண்ணப்படும் தேன் போன்ற தமிழே! உன்னோடு மகிழ்ந்து கூறும் வேண்டுகோள் ஒன்று உள்ளது. அதனை நான் சொல்ல நீ கேட்பாயாக. நீ எனக்குத் துணையாய் இருப்பதால் நான் இதுவரை வாழ்ந்து வருகிறேன். தேவர்கள் உண்ணும் உணவாகிய அமுதத்தையே தந்தாலும் அதை விரும்ப மாட்டேன். இவ்வாறு தமிழ் மொழி மீது தான் கொண்ட பற்றை எடுத்துக்கூறுகிறார் ஆசிரியர்.

## நூலைப் பற்றி

தமிழ்விடு தூது 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. தூது இலக்கியங்களுள் புகழ்பெற்றது தமிழ்விடு தூது. இந்நூல் மதுரை சோமசுந்தரக் கடவுளிடம் காதல் கொண்ட தலைவி தம் எண்ணத்தை எடுத்துக்கூறத் தமிழைத் தூது அனுப்புவதாக அமைந்தது. இதன் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. இது கலிவெண்பா எனும் பா வகையால் ஆனது. இந்நூல் 268 கண்ணிகளை உடையது. (கண்ணி – இரண்டு அடிகளைக் கொண்டது.)

**தூது இலக்கியங்களில் தூதாக அனுப்பப்படும் பொருள்கள் சில**

| | |
|---|---|
| அன்னம் | மேகம் |
| மயில் | குயில் |
| கிளி | வண்டு |

**புகழ்பெற்ற சில தூது நூல்கள்**

| | |
|---|---|
| நெஞ்சுவிடு தூது | காக்கைவிடு தூது |
| மேகவிடு தூது | பணவிடு தூது |
| கிள்ளைவிடு தூது | விறலிவிடு தூது |

## பொருள் அறிவோம்

1. முத்தமிழ் – இயல், இசை, நாடகம்
2. புத்தி – அறிவு
3. விண்ணப்பம் – வேண்டுகோள்
4. விளம்பல் – சொல்லுதல்
5. இடர் – துன்பம்
6. கல்லாதார் - கல்வி அறிவற்றவர்

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சிற்றிலக்கிய வகைகள் மொத்தம் எத்தனை?

   அ) 86 ஆ) 96 இ) 76 ஈ) 66

2. தமிழ்விடு தூது நூலின் ஆசிரியர் யார்?

   அ) ஒட்டக்கூத்தர் ஆ) காளமேகப்புலவர்

   இ) செயங்கொண்டார் ஈ) அறியப்படவில்லை

3. தமிழ்விடு தூது எந்தப் பாவகையினால் ஆனது?

   அ) கலிவிருத்தம் ஆ) கலிப்பா இ) கலிவெண்பா ஈ) கலித்தாழிசை

4. விளம்பல் என்னும் சொல்லின் பொருள் என்ன?

   அ) பாடுதல் ஆ) சொல்லுதல் இ) ஆடுதல் ஈ) ஓடுதல்

5. கண்ணி என்பது எத்தனை அடிகளைக் கொண்டது?

   அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

### ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

(அன்னம், மேகவிடு தூது, கனி, தூது, அமுதம்)

1. ______________ இலக்கியங்களுள் புகழ்பெற்றது தமிழ்விடு தூது.
2. அமுதினும் மேலான முத்தியைத் தரும் ______________ போன்ற தமிழே!
3. தேவர்கள் உண்ணும் உணவாகிய ______________ தந்தாலும் அதையும் விரும்ப மாட்டேன்.
4. தூதுவிடப்படும் பொருள்களுள் ஒன்று ______________.
5. தூது நூல்களுள் ஒன்று ______________.

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தூதுரைக்கும் பொருள்கள் சிலவற்றைக் கூறுக.
2. எவையேனும் இரண்டு தூது நூல்களை எழுதுக.
3. முத்தமிழ் எனப்படுபவை யாவை?


### ஈ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக.

1. தமிழின் சிறப்புகளாகத் தமிழ்விடு தூது கூறுவனவற்றை எழுதுக.

## 1.3 படிப்போம்

### தமிழரின் கொடைத்தன்மை

தமிழ்ச் சமூகத்தில் புலவர்களுக்குப் பரிசளித்து வள்ளல்களாக விளங்கிய அரசர்களுள் ஒருவர் குமணன். இவர் முதிரி மலைத்தொடரை ஆண்டு வந்தார். தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் தன் உயிரெனப் போற்றினார். இச்செயலைப் பொறுக்காத அவருடைய தம்பி இளங்குமணன் ஆட்சியைக் கைப்பற்றுகிறார். குமணனோ நாட்டை விடுத்துக் காட்டிற்குச் சென்று வாழ்கிறார். இருப்பினும் குமணனின் புகழையும் பெருமையையும் கண்டு பொறுக்காத இளங்குமணன், குமணனின் தலையைக் கொய்து வருபவருக்கு நூறாயிரம் பொற்காசுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கிறார். இதைக் கேட்ட பெருந்தலைச் சாத்தனார் காட்டிற்குச் சென்று குமண வள்ளலைக் காண்கிறார்.



**காட்சி –1**

**இடம் : காடு நேரம் : காலை**

**பங்கேற்போர் : குமணன், புலவர் பெருந்தலைச் சாத்தனார்.**

**குமணன்** : வாருங்கள். புலவர் பெருமகனாரே! உங்களைக் காண்பதில் மகிழ்ச்சி.

**பெ.சாத்தனார்** : முன்பு அரண்மனையில் வள்ளலாகிய நீவிர் இருந்தீர். புலவர்களாகிய நாங்கள் நின்புகழைப் பாடிப் பரிசில் பெற்று மகிழ்ந்திருந்தோம். இப்போது கொடுங்கோல் ஆட்சியால் வறுமையில் வாடுகின்றோம்.

**குமணன்** : புலவரே! நான் அரசாட்சியில் இருக்கும்போது நீங்கள் வந்திருக்கக் கூடாதா? இப்போது என்னிடம் கொடுப்பதற்கு எதுவும் இல்லையே. இது, என் தாயை இழந்த துன்பத்தைவிடப் பெருந்துன்பம் அளிக்கிறது. புலவரே! உங்களுக்குப் பரிசில் கிடைக்க வழிவகை உண்டு. அதைக் கூறுகிறேன் கேளுங்கள். என் தலையினைக் கொய்து சென்றால் நூறாயிரம் பொன் பரிசாகக் கிடைக்கும்.

**பெ.சாத்தனார்** : என்ன? தலையில் இடி விழுவது போன்ற செய்தியாக உள்ளதே. உங்களுடைய வாளை மட்டும் தாருங்கள்!

## காட்சி – 2

**இடம் : அரண்மனை நேரம் : காலை**

**பங்கேற்போர் : பெருந்தலைச் சாத்தனார், இளங்குமணன்**

**பெ.சாத்தனார்** : வாயிற்காப்போனே! என்னைத் தடுக்காதே. அரசனிடம் கூற முக்கியமான தகவல் கொண்டுவந்துள்ளேன். விரைவாக வழிவிடு!

**இளங்குமணன்** : நீங்கள் யார்? ஏன் வந்தீர்கள்?

**பெ.சாத்தனார்** : மன்னா! ஒரு நற்செய்தி கொண்டுவந்துள்ளேன். இங்கே பாருங்கள்! இந்த உடைவாள் யாருடையது என்று தெரிகிறதா?

**இளங்குமணன்** : இது குமணனின் வாளல்லவா! அது எப்படி உங்கள் கையில்?

**பெ.சாத்தனார்** : மன்னா, குமண வள்ளலிடம் பரிசு பெறச் சென்றேன்! அவர் தன்னிடம் பரிசளிக்க ஒன்றும் இல்லாததால், தன் தலையினைக் கொய்து, இளங்குமணனிடம் கொடுத்து நூறாயிரம் பொற்காசுகள் பரிசு பெற்றுக்கொள் என்று தன் உடைவாளைத் தந்தார்.

**இளங்குமணன்** : ஆ! என்ன செயல் செய்துவிட்டீர். தமிழ்ப் புலவருக்குப் பரிசளிக்கத் தன் தலையையே கொடுத்த என் அண்ணனை இனி எப்போது காண்பேன்? நான் மிகப் பெரிய தவறு இழைத்துவிட்டேன்.

**பெ.சாத்தனார்** : மன்னா! உங்கள் அண்ணன் இன்னும் இறக்கவில்லை. காட்டில்தான் வாழ்கிறார்.

**இளங்குமணன்** : புலவரே! மிக்க நன்றி. மிகப் பெரிய பாவச்செயல் செய்ய இருந்த என்னைக் காப்பாற்றி உள்ளீர்கள். இப்போதே காட்டிற்குச் சென்று அரசுரிமையை அவரிடமே தந்துவிடுகிறேன். இனி குமண வள்ளலே இந்நாட்டு மன்னர்.

**முரசு அறைவோன்** : நாடு மறுமலர்ச்சி பெற்றது. குமண வள்ளலே இனி நாட்டை ஆள்வார்.

வாழ்க செங்கோல் ஆட்சி! வளர்க குமண வள்ளல்!

திரை விழுகிறது.

## பொருள் அறிவோம்

1. கொய்து – துண்டித்து
2. கொடுங்கோல் ஆட்சி – நீதியற்ற ஆட்சி
3. பரிசில் – பரிசு
4. வள்ளல் – பரிசை வாரி வழங்குபவர்

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. குமண வள்ளலின் தம்பி யார்?

   அ) பேகன் ஆ) இளங்குமணன் இ) நள்ளி ஈ) ஆய்

2. குமண வள்ளல் ஆண்ட மலைத்தொடர் எது?

   அ) முதிரி ஆ) பொதிகை இ) கொல்லி ஈ) பறம்பு

3. குமண வள்ளலின் தலையைக் கொய்து வருபருக்குக் கிடைக்கும் பொற்காசுகள் எவ்வளவு?

   அ) ஆயிரம் ஆ) நூறு இ) பத்து ஈ) நூறாயிரம்

4. புலவரிடம் குமண வள்ளல் கொடுத்தது எது?

   அ) அம்பு ஆ) உடைவாள் இ) ஈட்டி ஈ) வேல்

5. தமிழ்ப் புலவருக்குப் பரிசளிக்கத் தன் தலையைக் கொடுக்கத் துணிந்தவர் யார்?

   அ) குமணன் ஆ) இளங்குமணன் இ) பேகன் ஈ) நள்ளி

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. குமண வள்ளலிடம் பரிசு பெற்ற புலவரின் பெயர் என்ன?
2. இளங்குமணனின் இயல்பை எழுதுக.
3. இளங்குமணன் வெளியிட்ட அறிவிப்பு என்ன?
4. குமண வள்ளலிடமிருந்து பெருந்தலைச் சாத்தனார் எதைப் பெற்றுச் சென்றார்?
5. தமிழ்ச் சமூகத்தில் அரசர்கள் எத்தகைய பண்பில் வள்ளல்களாகத் திகழ்ந்தனர்?

### இ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக.

1. இளங்குமணனின் மனத்தைப் பெருந்தலைச் சாத்தனார் மாற்றிய விதம் குறித்து எழுதுக.
2. குமண வள்ளலின் பண்பு குறித்து விளக்குக.

## 1.4 தெரிந்துகொள்வோம்

### மொழிமுதல் எழுத்துகள்

சொல்லுக்கு (மொழிக்கு) முதலில் வரும், அதாவது ஒரு சொல்லில் முதல் எழுத்தாக இடம்பெறும் எழுத்துகள் மொழிமுதல் எழுத்துகள்.

சான்று: அண்ணன், காடு, கடல், மீன். இவற்றில் முறையே அ, கா, க, மீ ஆகியவை மொழிமுதல் எழுத்துகளாகும்.

க் (கா → க் + ஆ); க் (க → க் + அ); ம் (மீ → ம் + ஈ)

### மொழிமுதல் உயிரெழுத்துகள்:

உயிரெழுத்துகள் பன்னிரண்டும் மொழிக்கு முதலில் வரும்.

எ.கா:

| | |
|---|---|
| அ | அம்மா |
| ஆ | ஆடு |
| இ | இலை |
| ஈ | ஈட்டி |
| உ | உடை |
| ஊ | ஊர் |

| | |
|---|---|
| எ | எலி |
| ஏ | ஏணி |
| ஐ | ஐந்து |
| ஒ | ஒன்று |
| ஓ | ஓடு |
| ஔ | ஔவை |

### மொழிமுதல் மெய்யெழுத்துகள்:

மெய்யெழுத்துகளுள் க், ங், ச், ஞ், த், ந், ப், ம், ய், வ் ஆகிய பத்து மட்டுமே மொழிக்கு முதலில் வரும். மெய்யெழுத்துகள் தனித்து மொழிக்கு முதலில் வருவதில்லை. உயிரெழுத்துகளுடன் சேர்ந்தே வரும்.

க், த், ந், ப், ம் ஆகிய ஐந்தும் உயிரெழுத்து பன்னிரண்டுடனும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.

ங், ச், ஞ், ய், வ் ஆகிய ஐந்தும் சில உயிரெழுத்துகளோடு மட்டும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.

### ஙகர மெய்யெழுத்து:

'ங்' என்னும் மெய்யெழுத்து 'அ' என்னும் உயிரெழுத்தோடு மட்டும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.

எ.கா: ஙனம் (விதம்)

## சகர மெய்யெழுத்து:

'ச்' என்னும் மெய்யெழுத்து அ, ஐ, ஔ ஆகிய உயிர் எழுத்துகளுடன் சேர்ந்து வராது. ஆனால் தற்போது சங்கு, சக்கரம் போன்ற சொற்கள் வழக்கில் உள்ளன.

## ஞகர மெய்யெழுத்து:

'ஞ்' என்னும் மெய்யெழுத்து அ, ஆ, எ, ஒ ஆகிய நான்கு எழுத்துகளுடன் மட்டுமே வரும்.

எ.கா:

| | |
|---|---|
| ஞ | ஞமலி |
| ஞா | ஞாயிறு |

| | |
|---|---|
| ஞெ | ஞெகிழி |
| ஞொ | ஞொள்ளுதல் |

## யகர மெய்யெழுத்து:

'ய்' என்னும் மெய்யெழுத்து அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ ஆகிய உயிர் எழுத்துகளுடன் மட்டுமே வரும்.

எ.கா:

| | |
|---|---|
| ய | யவனர் |
| யா | யானை |
| யு | யுகம் |

| | |
|---|---|
| யூ | யூகி |
| யோ | யோகம் |
| யௌ | யௌவனம் |

## வகர மெய்யெழுத்து:

'வ்' என்னும் மெய்யெழுத்து அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ ஔ ஆகிய எட்டு உயிர் எழுத்துகளுடன் மட்டுமே வரும்.

எ.கா:

| | |
|---|---|
| வ | வணக்கம் |
| வா | வாழ்த்து |
| வி | விழி |
| வீ | வீடு |

| | |
|---|---|
| வெ | வெள்ளை |
| வே | வேம்பு |
| வை | வைகை |
| வௌ | வௌவால் |

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடத்தை நிறப்புக

(பன்னிரண்டு, மொழிமுதல் எழுத்துகள், பத்து, நான்கு, அ)

1. ஒரு சொல்லில் முதல் எழுத்தாக இடம்பெறும் எழுத்துகள் ________________.
2. மொழிக்கு முதலில் வரும் மெய்யெழுத்துகள் மொத்தம் ________________.
3. 'ங்' என்னும் மெய்யெழுத்து ________________ என்னும் உயிரெழுத்தோடு மட்டும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.
4. மொழிக்கு முதலில் வரும் உயிரெழுத்துகள் மொத்தம் ________________.
5. 'ஞ்' என்னும் மெய்யெழுத்து மொத்தம் ________________ எழுத்துகளுடன் மட்டுமே மொழிக்கு முதலில் வரும்.

### ஆ) விடுபட்ட சரியான மொழிமுதல் எழுத்தை எழுதுக.

1. __ப்பல்.
2. __மானம்.
3. __தில்.
4. __ங்கம்.


### இ) மொழிக்கு முதலில் வரும் உயிர், உயிர்மெய் எழுத்துகளை வட்டமிடுக.

| | | | |
|---|---|---|---|
| ஆ | கா | டா | ழ |
| ய | ற | ண | மா |
| ர | வீ | ல | ஐ |
| ன | ஞ | ஔ | ள |

### ஈ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. மொழிக்கு முதலில் வரும் உயிர் எழுத்துகள் யாவை?
2. சகர மெய்யெழுத்து எந்தெந்த உயிர் எழுத்துகளுடன் சேர்ந்து வராது?
3. யகர மெய்யெழுத்து எந்தெந்த உயிர் எழுத்துகளுடன் சேர்ந்து வரும்? இரண்டு எடுத்துக்காட்டு தருக.
4. வகர மெய்யெழுத்து மொத்தம் எத்தனை உயிர் எழுத்துகளுடன் சேர்ந்து வரும்?
5. மொழிக்கு முதலில் வரும் மெய் எழுத்துகளைக் குறிப்பிடுக.

## 1.5 மொழியோடு விளையாடுவோம்




### மேலிருந்து கீழ்:

1. மழலை- வேறு சொல் (4)

5. ஆதி மனிதன் முதன்முதலில் கண்டுபிடித்த கருவி (5)

6. அரிமா வேறு சொல் (4)

### இடமிருந்து வலம்:

2. விலை உயர்ந்த உலோகங்களுள் ஒன்று (4)

3. விளையாட்டுப் பொருள்களுள் ஒன்று (3)

7. ஜல்லிக்கட்டில் இதனை அடக்குவர் (2)

10. இந்தப் பழம் முக்கனிகளுள் ஒன்று. (5)

### கீழிருந்து மேல்:

2. செல்வத்துள் செல்வம்
செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் _____. (2)

4. வில்லிலிருந்து எய்யப்படுவது (3)

9. நேரம் காட்டும் கருவி (5)

### வலமிருந்து இடம்:

1. இது கூவும் பறவை (3)

5. இது கடலில் இருக்கும்; போரைத் துவக்கி வைக்கும் (3)

8. கூடி உண்ணும் பறவை (3)

## தகவல் துளி

**தமிழில் பிறந்தநாள் வாழ்த்துப் பாடல்**

நீண்ட நீண்ட காலம் – நீ, நீடு வாழ வேண்டும்!
வானம் தீண்டும் தூரம் – நீ, வளர்ந்து வாழ வேண்டும்
அன்பு வேண்டும்! அறிவு வேண்டும்! பண்பு வேண்டும்! பணிவு வேண்டும்
எட்டுத்திக்கும் புகழ வேண்டும், எடுத்துக்காட்டு ஆக வேண்டும்!
உலகம் பார்க்க உனது பெயரை, நிலவுத்தாளில் எழுத வேண்டும்
சர்க்கரைத் தமிழ் அள்ளி, தாலாட்டு நாள் சொல்லி வாழ்த்துகிறோம்!
பிறந்தநாள் வாழ்த்துகள்! பிறந்தநாள் வாழ்த்துகள்.
இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்.

-கவிஞர் அறிவுமதி

## 1.6 கேட்டல் கருத்தறிதல்

### சார்லி சாப்ளின்

சார்லி சாப்ளின் புகழ்மிக்க நகைச்சுவை நடிகரும் திரைப்பட இயக்குநரும் ஆவார். மௌனப்படங்களைத் தயாரித்தவர். 1927இல் பேசும் திரைப்படங்கள் வெளிவரத் தொடங்கி மிகவும் பரவலானாலும் 1930 வரை சாப்ளின் அதிலிருந்து ஒதுங்கியே இருந்தார். சாப்ளினிடம் அமெரிக்க செய்தியாளர்கள், "எல்லோரும் பேசும் படங்களைத் தயாரிக்கிறார்கள், நீங்கள் ஏன் மௌனப்படங்களையே தயாரிக்கிறீர்கள்?" எனக் கேட்டார்கள். அதற்கு, "என் படங்களை மௌனப்படங்கள் என்று கூறுவதை எதிர்க்கிறேன். அந்தப் படங்கள் கூறும் செய்தி உங்களுக்குப் புரிகிறதல்லவா? அவ்வாறெனில், அந்தப் படங்கள் பேசுகின்றன என்றுதானே பொருள்? என் திரைப்படங்கள், திரைக்கே உரிய மொழியில் பேசுகின்றன. என் திரைப்படக் கதாபாத்திரங்கள் ஆங்கில மொழியில் மட்டும் பேசியிருந்தால் அது ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கு மட்டுமே புரிந்திருக்கும். ஆனால், என் படங்கள் உலகப் பொது மொழியில் பேசும் படங்களாகும்" என்று கூறினார்.

### வினாக்கள்

1. சார்லி சாப்ளின் எவ்வகையான படங்களைத் தயாரித்தார்?
2. சார்லி சாப்ளினிடம் அமெரிக்கச் செய்தியாளர்கள் என்ன கேள்வி கேட்டனர்?
3. சார்லி சாப்ளின் குறித்த உங்கள் கருத்துகளைப் பதிவிடுக.
4. சார்லி சாப்ளின் தன் படங்களை மௌனப்படங்கள் எனக் கூறுவதை ஏன் எதிர்த்தார்?
5. தமது படங்கள் எந்த மொழியில் பேசுவதாக சார்லி சாப்ளின் கூறினார்?

## 1.7 மொழிபெயர்ப்போம்

Tamil is a classical language and one of the major languages of the Dravidian language family. It is spoken by Tamils in many countries like India, Sri Lanka, Malaysia, Singapore etc. This language is one of the longest surviving classical languages in the world. It has a rich literary and grammatical tradition.

## 1.8 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | கொடுங்கோல் ஆட்சி | - | Tyrannical rule |
| 2. | கைப்பற்று | - | Seize |
| 3. | புலவர் | - | Poet |
| 4. | காட்சி | - | Scene |
| 5. | அரண்மனை | - | Palace |
| 6. | பாவச்செயல் | - | Sin |
| 7. | மறுமலர்ச்சி | - | Revival |

## 1.9 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் கவிதையைப் படித்து, அதன் உட்பொருளைக் கூறுக.**

**Unfolding Bud**

One is amazed
By a water – lily
Unfolding
With each passing day,
Taking on a richer colour
And new dimensions

One is not amazed
At a first glance,
By a poem
Which is as tight-closed
As a tiny bud

Yet one is surprised
To see the poem
Gradually unfolding,
Revealing its rich inner self,
As one reads it
Again
And over again.

- Naoshi Koriyama

## 1.10 செயல் திட்டம்

குமண வள்ளல் நாடகக்கதையை வரைகதையாக (Cartoon) உருவாக்கி, வகுப்பில் காட்சிப்படுத்துக.

பாடம் 2

## 2.1 பேசுவோம்

| | தொடர்கள் | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| 1 | தமிழ் மொழி தமிழர்களின் தனித்துவமான அடையாளத்தை வெளிப்படுத்த உதவுகிறது. | | |
| 2 | உலகின் மிகத் தொன்மையான மொழிகளுள் ஒன்றான தமிழ் மொழியை நான் கற்றுக்கொள்வதில் பெருமை அடைகிறேன். | | |
| 3 | நான் தமிழர்களுடன் பேசும்போது தமிழ் மொழியில்தான் பேசுவேன். | | |
| 4 | தமிழ் மொழியைக் கற்றுக்கொள்வதன் மூலம் நான் தமிழர்களின் பண்பாட்டையும் மரபையும் கற்றுக்கொள்கிறேன். | | |
| 5 | எனது தமிழ் மொழி ஆளுமையை மேம்படுத்த நான் நிறைய தமிழ் நூல்களைப் படிப்பேன். | | |
| 6 | மின்னஞ்சல், வலைப்பூ, புலனம் போன்றவற்றில் எனது கருத்துகளைத் தமிழ் மொழியிலேயே பதிவிடுவேன். | | |

### கலந்துரையாடுவோம்

தமிழ் மொழி கற்றதனால் உங்களுக்கு ஏற்பட்ட தமிழ்ப் பற்று குறித்து மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளித்து வகுப்பு ஆசிரியர்களுடன் கலந்துரையாடுக.

## 2.2 படிப்போம்

### பாரதிதாசன் கவிதைகள்

கவிஞர் தமது கருத்துகளை உணர்ச்சிகளோடு வெளிப்படுத்தும் வடிவமே கவிதை. அக்கவிதையை மெருகேற்ற வெவ்வேறு இலக்கிய உத்திகளைக் கவிஞர்கள் பயன்படுத்துகின்றனர். இவ்வகையில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தமிழ்மீது கொண்ட காதலைக் கவிதை நயத்தோடு மிக அழகாக வெளிப்படுத்துவதைக் காணலாம்.

### எங்கள் தமிழ்

தமிழ் எங்கள் உயிர் என்பதாலே – வெல்லுந்
தரமுண்டு தமிழருக்கு இப்புவி மேலே
தமிழ் என்னில் எம்முயிர்ப் பொருளாம் – இன்பத்
தமிழ் குன்றுமேல் தமிழ்நாடெங்கும் இருளாம்

தமிழுண்டு தமிழ் மக்களுண்டு – இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு
தமிழ் என்று தோள்தட்டி ஆடு! நல்ல
தமிழ் வெல்க வெல்க என்றே தினம் பாடு!

### தமிழ் வளர்ச்சி

எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்.
இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்.
வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாம் கண்டு

தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்.
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்
இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும்.

– பாவேந்தர் பாரதிதாசன்

## பாடலின் பொருள்:

தமிழ் மொழி எங்களுக்கு உயிர் போன்றது. இவ்வுலகில் தமிழை உயிராகக் கொண்ட தமிழர்கள், மிக எளிதாக வெற்றி பெறுவர். தமிழ் என்பது, எமக்கு உயிர்ப்பொருளாகும். அத்தகைய இனிமை வாய்ந்த தமிழின் வளம் குறைந்தால், தமிழ்நாடு எங்கும் இருள் சூழும். தமிழ் உண்டு. தமிழ் மக்களும் உண்டு. ஆகையால், நாம் இன்பத்தமிழுக்கு நாளும் தொண்டு செய்வோம். தமிழ் எங்கள் மொழி என்று பெருமிதம் கொள்வோம். நல்ல தமிழ் வெல்ல வேண்டும் என நாள்தோறும் பாடி மகிழ்வோம்.

அனைவருக்கும் புரியும் எளிய நடையில் தமிழ் நூல்கள் எழுதப்பட வேண்டும். தமிழ் இலக்கண நூல்கள் புதிதாக இயற்றப்பட வேண்டும். உலகினில் புதிதாகத் தோன்றிய சிந்தனைகளையும், புதிய கண்டுபிடிப்புகளையும் தமிழில் இடம்பெறச் செய்து தமிழைச் செழுமையாக்க வேண்டும். புதிய கலைச்சொற்களை உருவாக்குதல் வேண்டும்; தெளிவான படங்களோடு பாடநூல்கள் அமைத்தல் வேண்டும். வறுமையால் ஒரு தமிழர் படிக்கவில்லை என்று கூறினால் தமிழர்கள் அனைவரும் வெட்கப்படுதல் வேண்டும்.

## நூலைப் பற்றி

'பாரதிதாசன் கவிதைகள்' என்னும் கவிதைத்தொகுப்பில் இக்கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இக்கவிதைகளை எழுதிய பாவேந்தர் பாரதிதாசனின் இயற்பெயர் கனக சுப்புரத்தினம். இவர் 1891 ஏப்ரல் 29 அன்று புதுவையில் பிறந்தார். தந்தை கனகசபை, தாய் இலக்குமி. இவர் பாவேந்தர், புரட்சிக்கவிஞர் எனச் சிறப்பிக்கப்படுகிறார். 'குடும்ப விளக்கு', 'இருண்ட வீடு', 'தமிழியக்கம்', 'பாண்டியன் பரிசு', 'அழகின் சிரிப்பு' உள்ளிட்ட பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்.

## பொருள் அறிவோம்

1. தெளிவுறுத்தும் - விளக்கமாய்க் காட்டும்
2. சுவடி - நூல்
3. இயற்றுதல் – எழுதுதல்
4. நாணிடவும் – வெட்கப்படவும்

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தமிழ் எங்கள் ____________

அ) காற்று ஆ) உலகம் இ) உயிர் ஈ) வலிமை

2. தெளிவுறுத்தும் படங்களோடு ____________ செய்ய வேண்டும்.

அ) பாடல் ஆ) சுவடி இ) கவிதை ஈ) தமிழ்

3. தமிழுக்கு நாளும் ____________ செய்வோம்.

அ) சிறப்பு ஆ) தொண்டு இ) அழகு ஈ) தொழுகை

4. புதிதாக இயற்றபட வேண்டிய நூல்?

அ) இலக்கியம் ஆ) இலக்கணம் இ) கதை ஈ) கவிதை

5. செந்தமிழைச் ____________ செய்ய வேண்டும்.

அ) இன்பத்தமிழாகச் ஆ) செழுந்தமிழாய்ச் இ) தீந்தமிழாய்ச் ஈ) தேன்தமிழாய்ச்

## ஆ) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

1. தரமுண்டு – ______________________

2. எம்முயிர் - ______________________

3. தெளிவுறுத்தும் - ______________________

4. செந்தமிழ் - ______________________

5. செழுந்தமிழ் - ______________________

## இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. 'எங்கள் தமிழ்' என்னும் கவிதையில் தமிழ் மொழி எவ்வாறு போற்றப்பட்டுள்ளது?

2. பாரதிதாசன் எழுதிய நூல்கள் யாவை?

3. தமிழ் வளர்ச்சி பெறத் தமிழர்கள் என்ன செய்ய வேண்டும்?

4. வெளியுலகிலிருந்து தமிழுக்குக் கொண்டுவர வேண்டியவை யாவை?

5. பாரதிதாசன் எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறார்?

## ஈ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக.

1. பாரதிதாசனின் தமிழ்ப்பற்றைத் தொகுத்து எழுதுக.

2. 'தமிழ் வளர்ச்சி' கவிதை அடிகளை எழுதுக.

3. கவிதையைக் கவிஞர்கள் எவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள்?

## உ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

(பாரதிதாசன், வளம், வெட்கப்பட, கவிதை, பாரதிதாசன் கவிதைகள் )

1. இன்பத் தமிழ் ____________ குறைந்தால் தமிழ்நாடு எங்கும் இருள் சூழும்.

2. தமிழ் உணர்வை வெளிப்படுத்துபவர் ____________.

3. பாடப்பகுதியிலுள்ள கவிதை இடம்பெற்றுள்ள நூல் ____________.

4. கவிஞர் தம் கருத்துகளை உணர்ச்சிகளோடு வெளிப்படுத்தும் வடிவம் ____________.

5. வறுமையால் தமிழர் படிக்கவில்லை எனில் தமிழர்கள் அனைவரும் ____________ வேண்டும்.

## 2.3 படிப்போம்

### உலகத் தமிழ் மாநாடு

மொழியும் பண்பாடும் தமிழர்களை ஒருங்கிணைக்கின்றன. இத்தகைய ஒருங்கிணைப்பில் உலகத் தமிழ் மாநாடுகள் இன்றியமையாப் பங்கு வகிக்கின்றன. அத்தகைய மாநாடுகள் குறித்து மலேசியாவில் வாழும் காவ்யாவிற்குச் சிகாகோவிலிருந்து அவரது தோழர் ஆதவன் அனுப்பும் மின்னஞ்சல்.

15/06/2023

சிகாகோ

அன்புத் தோழி காவ்யாவிற்கு,

ஆதவன் எழுதுவது. நலம், நலமறிய ஆவல். இக்கடிதத்தில் உலகத் தமிழ் மாநாடு குறித்துப் பகிர விரும்புகிறேன்.

காலத்திற்கு ஏற்ப தமிழ் மொழி தன்னைப் புதுப்பித்துக் கொண்டே வருகிறது. அது கல்வெட்டு முதல் கணினி வரை தனக்கான இடத்தை உருவாக்கிக் கொண்டுள்ளது. தமிழர்களாகிய நாம், பல்வேறு காரணங்களால் உலகமெங்கும் புலம்பெயர்ந்துள்ளோம். வாழிடத்தால் நாம் வேறுபட்டிருக்கிறோம். இருப்பினும் மொழியாலும் பண்பாட்டாலும் ஒன்றிணைந்தே உள்ளோம். அதனால், மொழியையும் பண்பாட்டையும் காப்பது நம் கடமை. அதற்காக நடத்தப்படுவதே உலகத் தமிழ் மாநாடு ஆகும். உலகத் தமிழ் மாநாடுகளில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தமிழ் அறிஞர்களும் ஆர்வலர்களும் கலந்துகொள்வார்கள்.

தனிநாயகம் அடிகள், 1964இல் தில்லியில் உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தைத் தொடங்கினார். அம்மன்றத்தின் வழி, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை 'உலகத் தமிழ் மாநாடு' நடத்தத் திட்டமிடப்பட்டது.

காவ்யா, நீங்கள் வாழும் மலேசியாவிற்குத் தனிச்சிறப்பு உண்டு. அங்குதான் 1966இல் முதல் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டை முழு முயற்சியுடன் முன்னின்று நடத்தியவர் தனிநாயகம் அடிகளார். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் புறநானூற்றுப் பாடல் அடி, அந்த மாநாட்டின் குறிக்கோள் தொடராகும். அதுபோல ஒவ்வொரு மாநாடும் ஒரு குறிக்கோள் தொடரைக் கொண்டு நடைபெற்றது.

பல்வேறு நாடுகளில், உலகத் தமிழ் மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. பத்தாவது உலகத் தமிழ் மாநாடு, நான் வாழும் சிகாகோவில் 2019இல் நடைபெற்றது.

இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு சென்னையில் 1968இல் நடைபெற்றது. அந்த மாநாட்டின் நினைவாகச் சென்னை மெரினா கடற்கரையில் தமிழறிஞர்களின் சிலைகளும் பண்பாட்டுச் சின்னங்களும் நிறுவப்பட்டுள்ளன. அவை திருவள்ளுவர், ஔவையார், கம்பர், வீரமாமுனிவர், கால்டுவெல், ஜி.யு.போப், பாரதியார், பாரதிதாசன், கண்ணகி ஆகியோரின் சிலைகளாகும்.

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு தமிழ்நாட்டில் 1981இல் மதுரை மாநகரில் நடைபெற்றது. அதன் பயனாக மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கமும் தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக்கழகமும் உருவாகின.

2010இல் தமிழ்நாட்டில் 'உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு' நடைபெற்றது.

உலகத் தமிழறிஞர்கள் பலரும் உலகத் தமிழ் மாநாட்டில் ஒன்றுகூடுவர்; தமிழ் வளர்ச்சி குறித்த திட்டங்கள் உருவாக்கப்படும்; தமிழரின் பண்பாட்டுக்கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்; மாநாட்டு மலர் வெளியிடப்படும். இந்த மாநாடு, உலகத் தமிழர்கள் அனைவராலும் கொண்டாடப்படும் மொழி விழா ஆகும்.

அடுத்த உலகத் தமிழ் மாநாடு விரைவில் நடக்க உள்ளது. கண்டிப்பாக அந்த மாநாட்டில் நாம் கலந்துகொள்ள வேண்டும். உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ளும் உனது திட்டம் குறித்து எனக்கு மின்னஞ்சல் அனுப்பு. அதற்கேற்ப எனது பயணத்தையும் வடிவமைத்துக் கொள்கிறேன். உனக்கு எனது அன்பும் வாழ்த்துகளும் காவ்யா.

அன்புடன்
ஆதவன்.

## பயிற்சிகள்

### அ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக.

1. தில்லியில் உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தைத் தொடங்கியவர் கால்டுவெல். (சரி/தவறு)
2. முதல் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற ஆண்டு 1966. (சரி/தவறு)
3. இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு மதுரையில் நடைபெற்றது. (சரி/தவறு)
4. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010 ஆம் ஆண்டு நடைபெற்றது. (சரி/தவறு)
5. ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு தமிழ்நாட்டில் 1981இல் நடைபெற்றது. (சரி/தவறு)

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. முதல் உலகத் தமிழ் மாநாட்டின் குறிக்கோள் தொடர் யாது?
2. இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது மெரினா கடற்கரையில் யார் யாருடைய சிலைகள் நிறுவப்பட்டன?
3. ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் பயனாக உருவாகியவை யாவை?

### இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. உலகத் தமிழ் மாநாடுகள் முன்னெடுக்கும் முக்கியப் பணிகள் யாவை?

## 2.4 தெரிந்துகொள்வோம்

### மொழியிறுதி எழுத்துகள்

சொல்லுக்கு (மொழிக்கு) இறுதியில் வரும், அதாவது ஒரு சொல்லில் இறுதி எழுத்தாக இடம்பெறும் எழுத்துகள் மொழியிறுதி எழுத்துகள். மொழியிறுதி எழுத்துகள், அவற்றின் தன்மையைப் பொறுத்து மூன்றாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவை,

1. மொழிக்கு இறுதியில் வரும் உயிரெழுத்துகள் (உயிரீறு)
2. மொழிக்கு இறுதியில் வரும் குற்றியலுகரம் (குற்றியலுகர ஈறு)
3. மொழிக்கு இறுதியில் வரும் மெய்யெழுத்துகள் (மெய்யீறு)

### உயிரீறு

உயிரெழுத்துகள் பன்னிரண்டும் மொழிக்கு இறுதியில் வரும்.

(எகரக் குறில் அளபெடையாக மட்டும் மொழிக்கு இறுதியில் வரும்)

| | | | |
|---|---|---|---|
| அ | பல | எ | சேஎ |
| ஆ | பலா | ஏ | தே (தெய்வம்/தலைவன்) |
| இ | பனி | ஐ | அன்னை |
| ஈ | தேனீ | ஒ | நொ (துன்பம், நோய்) |
| உ | ஆறு | ஓ | போ |
| ஊ | பூ | ஔ | வெள (கைப்பற்று, திருடு) |

### குற்றியலுகர ஈறு

| | |
|---|---|
| பழகு | அழகு |
| மாசு | காசு |
| பட்டு | ஆடு |
| பந்து | சந்து |
| பாம்பு | வேம்பு |
| புற்று | காற்று |

**மெய்யீறு**

மெய்யெழுத்துகள் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகைப்படும். இவற்றுள் வல்லின மெய்கள் ஆறும் மொழிக்கு இறுதியில் வருவதில்லை. மெல்லின மெய்யெழுத்துகளில் (ஞ், ண், ந், ம், ன்) ஐந்தும், இடையின எழுத்துகள் (ய், ர், ல், வ், ழ், ள்) ஆறும் ஆகிய பதினொன்றும் மொழிக்கு இறுதியில் வரும்.

**மெல்லின மெய்கள்**

| | |
|---|---|
| ஞ் | உரிஞ் (உராய்தல்) |
| ண் | மண் |
| ந் | வெரிந் (முதுகு) |
| ம் | அன்னம் |
| ன் | கண்ணன் |

**இடையின மெய்கள்**

| | |
|---|---|
| ய் | தாய் |
| ர் | வேர் |
| ல் | வேல் |
| வ் | தெவ் (பகை) |
| ழ் | புகழ் |
| ள் | வாள் |

| | |
|---|---|
| மொழியிறுதி உயிரெழுத்துகள் | 12 |
| மொழியிறுதி மெய்யெழுத்துகள் | 11 |
| மொழியிறுதி குற்றியலுகரம் | 01 |
| ஆக, மொழியிறுதி எழுத்துகள் மொத்தம் | 24 |

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மொழியிறுதி எழுத்துகள் எத்தனை வகைப்படும்?

அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

2. மொழிக்கு இறுதியில் வரும் மெய்யெழுத்துகள் எத்தனை?

அ) 24 ஆ) 18 இ) 11 ஈ) 12

3. மொழிக்கு இறுதியில் வராத மெய்யெழுத்துகள் எவை?

அ) ஞ், ந் ஆ) ய், ர் இ) ண், ன் ஈ) க், ச்

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. சொல்லுக்கு வழங்கப்படும் வேறு பெயர்களை எழுதுக.

2. மொழியிறுதி எழுத்துகள் என்றால் என்ன?

3. மொழியை ஆள்வோம்

i. மொழிக்கு இறுதியில் வரும் மெல்லின எழுத்துகளை வட்டமிடுக.

ஞ் ய் ப் ழ்

ii. மொழிக்கு இறுதியில் வரும் இடையின எழுத்துகளை வட்டமிடுக.

ண் ன் ல் ம்

iii. விடுபட்ட மொழியிறுதி எழுத்தை நிரப்புக.

1. மன்ன _
2. பாம் _
3. அன் _

### இ) பின்வரும் கட்டங்களை நீங்கள் அறிந்த சொற்களைக் கொண்டு நிரப்புக.

| வ. எண் | உயிரீறு | மெய்யீறு | குற்றியலுகர ஈறு |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

## 2.5 கருத்து விளக்கப்படம்

### உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற்ற நாடுகள்

| மாநாடு | நகரம் | நாடு | ஆண்டு |
|---|---|---|---|
| 1 ஆம் உலகத் தமிழ் மாநாடு | கோலாலம்பூர் |  மலேசியா | 1966 |
| 2 ஆம் உலகத் தமிழ் மாநாடு | சென்னை |  இந்தியா | 1968 |
| 3 ஆம் உலகத் தமிழ் மாநாடு | பாரிஸ் |  பிரான்ஸ் | 1970 |
| 4 ஆம் உலகத் தமிழ் மாநாடு | யாழ்ப்பாணம் |  இலங்கை | 1974 |
| 5 ஆம் உலகத் தமிழ் மாநாடு | மதுரை |  இந்தியா | 1981 |
| 6 ஆம் உலகத் தமிழ் மாநாடு | கோலாலம்பூர் |  மலேசியா | 1987 |
| 7 ஆம் உலகத் தமிழ் மாநாடு | போர்ட் லூயிஸ் |  மொரிசியஸ் | 1989 |
| 8 ஆம் உலகத் தமிழ் மாநாடு | தஞ்சாவூர் |  இந்தியா | 1995 |
| 9 ஆம் உலகத் தமிழ் மாநாடு | கோலாலம்பூர் |  மலேசியா | 2015 |
| 10 ஆம் உலகத் தமிழ் மாநாடு | சிகாகோ |  அமெரிக்கா | 2019 |

### வினாக்கள்

1. முதல் உலகத் தமிழ் மாநாடு எங்கு நடைபெற்றது?
2. கோலாலம்பூரில் எத்தனை மாநாடுகள் நடைபெற்றன?
3. மொரிசியஸில் எந்த ஆண்டு உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது?
4. இந்தியாவில் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடங்களை எழுதுக.
5. நான்காம் உலகத் தமிழ் மாநாடு எங்கு எப்போது நடைபெற்றது?

## தகவல் துளி



ஜி.யு.போப்
(1820–1908)

கனடாவைச் சேர்ந்த ஜி.யு.போப் 1839ஆம் ஆண்டில் தமது பத்தொன்பதாவது வயதில் தமிழ்நாட்டுக்கு வந்தார். எட்டு மாதக் கப்பல் பயணத்தைத் தமிழ் கற்பதற்காகப் பயன்படுத்திக் கொண்டார். தமிழ்நாடு வந்த பிறகும் செழுமையான தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டினார். பின்னர், தமிழுக்காக அரும்பணி ஆற்றினார்.

ஆங்கில இதழ்களில் தமிழ் குறித்து ஆய்வுக் கட்டுரைகள் எழுதினார். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். நாலடியார், திருவாசகம், புறநானூறு என மொழிபெயர்ப்புப் பணி தொடர்ந்தது. மொழிபெயர்ப்பதோடு நிறுத்திவிடாமல், ஆராய்ச்சிக் கட்டுரைகள், அகராதித் தொகுப்பு, பதிப்பு முதலிய பணிகளிலும் ஈடுபட்டார். பிற்காலத்தில் இங்கிலாந்து திரும்பிய பிறகு அங்கே மாணவர்களுக்குத் தமிழ் கற்றுக்கொடுத்தார். ஜி.யு.போப்பின் தமிழ்ப்பணி போற்றுதலுக்கு உரியதாகும்.

## 2.6 கேட்டல் கருத்தறிதல்

### பி. ஆர். ராஜம்
### (ஜனவரி 25, 1872 – மே 13, 1898)

பி. ஆர். ராஜம் தமிழ் நவீன இலக்கியத்தின் முன்னோடிப் படைப்பாளி ஆவார். எழுத்தாளர், நாவலாசிரியர், கட்டுரையாசிரியர், பத்திரிகையாசிரியர், ஆன்மிகம் மற்றும் தத்துவ வேட்கை கொண்ட சிந்தனையாளர் எனப் பன்முக ஆளுமையாகத் திகழ்ந்தார். இவர் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள வத்தலகுண்டு என்ற ஊரில் ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். திண்ணைப் பள்ளி, உள்ளூர்ப் பள்ளி, மதுரை பாண்டித்தியப் பாடசாலை ஆகியவற்றில் கல்வி கற்றார். பின்னர், சென்னை கிறிஸ்த்துவக் கல்லூரியில் சேர்ந்து வரலாற்றில் இளங்கலைப் பட்டம் பெற்றார். சட்டம் பயிலும் ஆசையும் இவருக்கு இருந்தது. சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். ஆனால், இறுதித் தேர்வில் வெற்றி பெறவில்லை. வரலாறும் சட்டமும் படித்திருந்தாலும் இலக்கியத்தில் இவருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது.

'விவேக சிந்தாமணி' மாத இதழில் 'கமலாம்பாள் சரித்திரம்' நாவலைத் தொடராக 3 ஆண்டுகளுக்கு எழுதினார். இதுதான் தமிழில் வெளியான முதல் தொடர்கதை ஆகும். தமிழில் வெளியான ஆரம்ப கால நாவல்களுள் ஒன்றாக இது கருதப்படுகிறது. இந்த நாவலை எழுதியபோது இவருக்கு வயது 21. சமூகம், பெண்கள் நலன், நகைச்சுவை, ஆன்மிகம் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த நாவலில், பல்வேறு பழமொழிகளையும் குட்டிக் கதைகளையும் ஆன்மிகக் கருத்துகளையும் எளிய நடையில் எழுதினார்.

வாசகர்களிடம் பெரும் வரவேற்பை பெற்ற இந்நாவல், 1896இல் நூல் வடிவம் பெற்றது. தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் அங்கீகாரம் பெற்று, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களுக்குப் பாடநூலாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தாயுமானவர் எழுதிய நூல்கள் இவரை நிலையாமை குறித்து ஆழமாகச் சிந்திக்கத் தூண்டின. மேலும், ஆன்மிகம் சார்ந்த பாடல்கள் இவரை ஞான மார்க்கத்துக்கு வழிநடத்தின. சுவாமி விவேகானந்தரின் ஆதரவுடன் தொடங்கப்பட்ட 'பிரபுத்தபாரதா' ஆங்கில இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார். குடற்சிக்கல் நோயின் காரணமாகத் தன்னுடைய 26-ஆவது வயதில் (1898) மறைந்தார்.

**வினாக்கள்**

1. தமிழ் நவீன இலக்கியத்தின் முன்னோடி யார்?
2. பி. ஆர். ராஜம் எந்த ஊரில் பிறந்தார்?
3. பி. ஆர். ராஜம் அவர்களுக்கு எதன் மீது ஆர்வம் இருந்தது?
4. பி. ஆர். ராஜம் அவர்கள் எந்த இதழில் எந்த நாவலைத் தொடராக 3 ஆண்டுகளுக்கு எழுதினார்?
5. சுவாமி விவேகானந்தரின் ஆதரவுடன் தொடங்கப்பட்ட எந்த இதழில் பி. ஆர். ராஜம் ஆசிரியராகப் பணியாற்றினார்?

## 2.7 மொழிபெயர்ப்போம்

புதுக்கவிதை படிப்பதற்கு எளிமையாகவும், வாசிப்பவர்களுக்கு எளிதில் புரிவதாகவும் இருக்க வேண்டும். இன்றைய இளம் தலைமுறையினரின் உணர்வு வெளிப்பாட்டு வடிவமாகப் புதுக்கவிதை அமைந்திருக்கிறது.

## 2.8 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆவல் | - | Eagerness |
| 2. | உலகத் தமிழ் மாநாடு | - | World Tamil Conference |
| 3. | புதுப்பித்தல் | - | Update |
| 4. | புலம்பெயர்தல் | - | Migration |
| 5. | தனிச்சிறப்பு | - | Uniqueness |
| 6. | குறிக்கோள் | - | Aim/ Goal |

## 2.9 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் பாரதிதாசனின் பாடலைப் படித்து, அதன் கருத்தை எழுதுக.**

**சிரித்த முல்லை**

மாலைப் போதில் சோலையின் பக்கம்
சென்றேன். குளிர்ந்த தென்றல் வந்தது.
வந்த தென்றலில் வாசம் கமழ்ந்தது.
வாசம் வந்த வசத்தில் திரும்பினேன்.
சோலை நடுவில் சொக்குப் பச்சைப்
பட்டுடை பூண்டு படர்ந்து கிடந்து
குலுக்கென்று சிரித்த முல்லை
மலர்க்கொடி கண்டேன் மகிழ்ச்சிகொண்டேனே!

- பாவேந்தர் பாரதிதாசன்

## 2.10 செயல்திட்டம்

தமிழ் மொழியின் சிறப்புகளை எடுத்துக்கூறும் விதமாக உங்கள் வகுப்பறையில் ஒரு தமிழ் மாநாடு நடத்துக.

## 3.1 பேசுவோம்

பாடம் 3




### கலந்துரையாடுவோம்

தமிழ்நாட்டின் வளங்கள் குறித்தும் அதற்கான காரணங்கள் குறித்தும் வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 3.2 படிப்போம்

### திருக்குறள்

சங்க காலத்திலிருந்தே புலவர்கள் தங்கள் நூல்களில் உயரிய அறக் கருத்துகளைக் கூறுவதற்குத் தவறவில்லை. சமூகப் போக்கில் மாறுதல்கள் விளைய வேண்டும் என விரும்பிய சான்றோர்கள் அவ்வப்போது அறநூல்களைப் படைத்தனர். தமிழரின் அறவாழ்வைக் காட்டும் நூல்களுள் திருக்குறளின் பங்கு மிகவும் உயரியது. இது உலக மக்கள் அனைவருக்குமான வாழ்க்கைக் கருத்துகளைக் கூறுவதால் உலகப்பொதுமறை என்று அழைக்கப்படுகிறது.

அதிகாரம் : 74 தலைப்பு : நாடு

1. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு. (734)

மிகுந்த பசியும், தீராத நோயும், அழிவு செய்யும் பகையும் இல்லாத நாடே சிறந்த நாடாகும்.

2. கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை. (736)

எந்த வகையிலும் கெடுதலை அறியாமலும் ஒருவேளை கெடுதல் ஏற்படினும் அதனைச் சீர்செய்யும் அளவிற்கு வளம்குன்றாத நிலையிலும் உள்ள நாடுதான் சிறந்த நாடாகும்.

3. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு. (737)

ஊற்றுநீரும் மழைநீரும், வளம் வாய்ந்த மலைகளும், அந்த மலைகளிலிருந்து வருகின்ற ஆற்றுநீரும், சிறந்த பாதுகாப்பு அரண்களும் ஒரு நாட்டிற்கு இன்றியமையாதவையாகும்.

4. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு. (739)

ஒரு சிறந்த நாடு, தம்முடைய தேவைகளுக்கு எந்த நாட்டையும் சார்ந்திராத வளமுடையது; தம் நாட்டின் தேவைக்குப் பிற நாட்டைச் சார்ந்திருக்கும் நாடு, நாடென்று கருதப்படாது.

5. ஆங்கமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமைவு இல்லாத நாடு. (740)

நல்ல ஆட்சியாளர்களால் ஆளப்படாத நாடு, அனைத்து வளங்களைக் கொண்டிருந்தாலும் அவற்றால் எந்தப் பயனும் இல்லாமல் போகும்.

## நூலைப் பற்றி

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று திருக்குறள். இது குறள் வெண்பாக்களால் ஆனது. அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்ற மூன்று பிரிவுகளை உடையது. இதில் 9 இயல்களும் 133 அதிகாரங்களும் உள்ளன. அதிகாரத்துக்குப் பத்துக் குறள்கள் வீதம் 1330 குறட்பாக்கள் இந்நூலில் உள்ளன. முப்பால், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொருளுறை, முதுமொழி, தெய்வநூல் போன்ற பல பெயர்களால் இது அழைக்கப்படுகிறது. திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவர் பொய்யில் புலவர், செந்நாப்போதார், முதற்பாவலர், மாதானுபங்கி, தெய்வப்புலவர், நாயனார், நான்முகனார், பெருநாவலர் போன்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகிறார்.

## தெரிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| திருக்குறளில் இடம்பெறும் இருமலர் | – | அனிச்சம், குவளை |
| திருக்குறளில் இடம்பெறும் ஒரே பழம் | – | நெருஞ்சிப்பழம் |
| திருக்குறளில் இடம்பெறும் இரண்டு மரம் | – | பனை, மூங்கில் |
| திருக்குறளில் இருமுறை இடம்பெற்றுள்ள அதிகாரத்தின் பெயர் | – | குறிப்பறிதல் |
| திருக்குறளில் இடம்பெறாத ஒரே உயிரெழுத்து | - | ஔ |

## பொருள் அறிவோம்

1. உறுபசி - மிகுதியான பசி
2. ஓவாப்பிணி - தீராத நோய்
3. செறுபகை - அழிவு தரும் பகை
4. கேடு - தீங்கு
5. புனல் - நீர்
6. வேந்தன் - அரசன்

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பிணி என்ற சொல்லின் பொருள்

அ) மருந்து ஆ) நோய் இ) பகை ஈ) நாடு

2. பின்வருவனவற்றுள் திருவள்ளுவரைக் குறிக்காத சிறப்புப்பெயர் எது?

அ) பொய்யில்புலவர் ஆ) செந்நாப்போதார் இ) மாதானுபங்கி ஈ) உரையாசிரியர்

3. திருக்குறளில் இருமுறை இடம்பெற்றுள்ள அதிகாரத்தின் பெயர்.

அ) காலமறிதல் ஆ) இடனறிதல் இ) குறிப்பறிதல் ஈ) வலியறிதல்

4. திருக்குறளில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை எத்தனை?

அ) 3 ஆ) 9 இ) 133 ஈ) 1330

5. 'இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்' என்பதில் இருபுனலும் என்பது

அ) ஊற்றுநீரும் மழைநீரும் ஆ) ஏரிநீரும் குளத்துநீரும்

இ) மழைநீரும் ஆற்றுநீரும் ஈ) இவை அனைத்தும்

## ஆ) கீழே கொடுக்கப்பட்டுள்ள பெயர்களிலிருந்து திருக்குறள், திருவள்ளுவருக்கான பெயர்களை அட்டவணைப்படுத்துக.

| | | | |
|---|---|---|---|
| நாயனார் | வாயுறைவாழ்த்து | முதற்பாவலர் | முப்பால் |
| பொதுமறை | செந்நாப்போதார் | பொய்யாமொழி | பொய்யில்புலவர் |
| நான்முகனார் | தமிழ்மறை | மாதானுபங்கி | பொருளுறை |
| பெருநாவலர் | முதுமொழி | தெய்வப்புலவர் | தெய்வநூல் |

## இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. எது சிறந்த நாடு?

2. திருக்குறள் எத்தனை பிரிவுகளை உடையது? அவை யாவை?

3. எது நாடென்று கருதப்படாது?

4. ஒரு நாட்டிற்கு இன்றியமையாதவை எனக் குறிப்பிடப்படுபவை யாவை?

5. திருக்குறள் குறித்து நீங்கள் அறிந்தவற்றை எழுதுக.

## ஈ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. வள்ளுவர் கூறும் நாட்டின் சிறப்புகளை விவரித்து எழுதுக.

## 3.3 படிப்போம்

### கம்பராமாயணம் காட்டும் நாட்டு வளம்

நிலவளமும் நீர்வளமும் மலைவளமும் கவின்மிகு காடுகளும் அமையப் பெற்றிருப்பதே ஒரு நாட்டிற்குப் பெருமையாகும். காடுகளும் மலைகளும் இயற்கை வடித்த இன்பக் கலைகள் என்பதைக் கம்பராமாயணம் குறிப்பிடுகிறது. இப்பாடப் பகுதியில் கம்பர் காட்டும் நாட்டு வளத்தைப் படித்தறிவோம்.

### நாட்டுவளம்

கோசல நாடு குறித்துப் பாடும்போது கம்பர் இப்படிச் சொல்கிறார்: அங்கு மக்களிடம் எந்தக் குற்றமும் இல்லாததால் அவர்களுக்கு இயற்கையால் ஏற்படும் மரணம் தவிர இளம் வயது மரணம் இல்லை. ஏனென்றால் அங்கு வாழ்வோர், மனத்தில் எந்தக் குற்ற எண்ணமும் இல்லாத தூய்மையான உள்ளம் உடையவர்கள்; அவர்கள் மனத்தில் சிறிதளவும் சினம் இல்லை; சினம் இல்லாத காரணத்தால் பெரிய குற்றங்கள் இல்லை; அதோடு நல்ல அறங்களையே செய்வதால் அவர்களிடம் தவறுகள் இல்லை.



## நிலவளம்

கோசல நாட்டு வயலின் வரப்புகளில் முத்துகளும், தண்ணீர் பாயும் மடைகளில் சங்குகளும், மிகுந்த நீர்ப்பெருக்குடைய நிலங்களில் செம்பொன்னும் நிறைந்திருக்கின்றன. எருமைகள் படிகின்ற இடங்களில் செங்கழுநீர் மலர்களும், பரம்படித்த இடங்களில் பவளங்களும், நெற்பயிர் நிறைந்த வயல்களில் அன்னங்களும் இருந்தன. பயிரிடப்படாத நிலமெங்கும் செந்தேனும், அழகிய சோலைகளெங்கும் தேன் உண்டு மகிழும் வண்டுகளும் உள்ளன என்று கம்பர் புகழ்ந்துரைக்கிறார்.

நிலவளமே, நாட்டின் பல்வேறு வளங்களைத் தீர்மானிக்கிறது. நிலவளம் சிறப்பாக அமைந்திருக்கிறது என்றால் அங்கு நீர்வளமும் சிறந்தே காணப்படும். இந்நிலவளமும் நீர்வளமும் மக்களின் வாழ்க்கைக்கான அடிப்படைத் தேவையை நிறைவு செய்யும்.

## பொருள் அறிவோம்

1. சினம் - கோபம்
2. மடை - நீரணை
3. கவின் - அழகு
4. வரப்பு - வயல் எல்லை
5. பரம்படித்தல் - நிலத்தைச் சமப்படுத்துதல்

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சினம் இல்லாத மக்கள் வாழும் நாடு எது?

அ) இலங்கை ஆ) கோசலம் இ) சாவகம் ஈ) புட்பகம்

2. கோசல நாட்டு வயலின் வரப்புகளிலெல்லாம் எது நிறைந்திருந்தது?

அ) முத்து ஆ) தேன் இ) வண்டு ஈ) சங்கு

3. நிலத்தைச் சமப்படுத்துதலை இவ்வாறு அழைப்பர்?

அ) பரம்படித்தல் ஆ) ஏறு உழுதல் இ) மண்ணடித்தல் ஈ) உரமிடுதல்

4. நாட்டின் பல்வேறு வளங்களைத் தீர்மானிப்பது எது?

அ) நிலவளம் ஆ) நீர்வளம் இ) மலைவளம் ஈ) காற்றுவளம்

5. கோசல நாட்டுத் தண்ணீர் பாயும் மடைகளில் எது நிறைந்திருந்தது?

அ) முத்து ஆ) தேன் இ) வண்டு ஈ) சங்கு

## ஆ) பொருத்துக.

1. எருமை - நீர் நிறைந்த இடம்
2. அன்னம் - சோலைகள்
3. வண்டுகள் - நெல் வயல்
4. செம்பொன் - செங்கழுநீர் மலர்
5. சங்குகள் - மடைகள்

## அ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக.

1. கோசல நாட்டு மக்களிடம் எந்தக் குற்றமும் இருப்பதில்லை. (சரி/தவறு)
2. கோசல நாட்டு மக்களுக்கு இளம் வயதிலேயே மரணம் ஏற்படும். (சரி/தவறு)
3. கோசல நாட்டில் எருமைகள் படிகின்ற இடங்களில் செங்கழுநீர் மலர்கள் இருக்கின்றன. (சரி/தவறு)
4. மனிதவளமே, நாட்டின் பல்வேறு வளங்களைத் தீர்மானிக்கிறது. (சரி/தவறு)
5. நீர்வளமும் மக்களின் வாழ்க்கைக்கான அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்யும். (சரி/தவறு)

## இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. கோசல நாட்டு மக்களின் இயல்பு குறித்து எழுதுக.
2. கோசல நாட்டில் எவையெல்லாம் இல்லை?
3. மக்களின் வாழ்க்கைக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது எது?
4. ஒரு நாட்டின் வளங்களைத் தீர்மானிப்பது எது?
5. எத்தகைய காரணத்தால் கோசல நாட்டு மக்களுக்கு இளம் வயது மரணம் இல்லை என்று கம்பர் கூறுகிறார்?

## ஈ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. கம்பர் காட்டும் நாட்டுவளம் குறித்துக் கட்டுரை எழுதுக.

## 3.4 தெரிந்துகொள்வோம்

### இலக்கண வகைச் சொற்கள்

இலக்கண அடிப்படையில் சொற்கள் நான்கு வகைப்படும்.

1. பெயர்ச்சொல் 2. வினைச்சொல் 3. இடைச்சொல் 4. உரிச்சொல்

**பெயர்ச்சொல்**

பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் ஆகும். பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப்பெயர், தொழிற்பெயர் எனப் பெயர்ச்சொல் ஆறு வகைப்படும்.

எ.கா:

| பொருட் பெயர் | இடப் பெயர் | காலப் பெயர் | சினைப் பெயர் | பண்புப் பெயர் | தொழிற் பெயர் |
|---|---|---|---|---|---|
| புத்தகம் | சென்னை | மாதம் | கண் | வட்டம் | பாடுதல் |

**வினைச்சொல்**

ஒரு செயலை அல்லது வினையைக் குறிக்கும் சொல் வினைச்சொல் ஆகும். ஒரு செயல் முடிவு பெற்றால் அது வினைமுற்று அல்லது முற்றுவினை எனவும், செயல் முடிவு பெறாமல் இருந்தால் அது எச்சவினை எனவும் வழங்கப்படும்.

**வினைமுற்று**

எ.கா: கேட்டான், பார்த்தாள்.

**எச்சவினை**

எ.கா: கேட்டு, பார்த்து (வினையெச்சம்)

கேட்ட, பார்த்த (பெயரெச்சம்)

**இடைச்சொல்**

தனித்து இயங்காமல் பெயர்ச்சொல்லையோ வினைச்சொல்லையோ சார்ந்து வருவது இடைச்சொல் ஆகும்.

எ.கா: அவர் + ஏ = அவரே (இங்கு 'ஏ' என்னும் எழுத்து இடைச்சொல்லாக வந்துள்ளது.)

வேற்றுமை உருபுகளும் உவம உருபுகளும் ஏ, ஓ, யா முதலிய வினா எழுத்துகளும் சுட்டு எழுத்துகளும் இடைச்சொற்களாக வரும்.

எ.கா: அவளா பேசினாள்? இங்கு அவளா என்னும் சொல்லில் 'ஆ' என்னும் வினா எழுத்து இடைச்சொல்லாக வந்துள்ளது. (அவள் + ஆ = அவளா)

**உரிச்சொல்**

செய்யுளுக்கு மட்டும் உரிய சொல் உரிச்சொல். இது இரண்டு வகைப்படும்.

1. ஒரு பொருள் தரும் பல உரிச்சொல்.

எ.கா: 'மிகுதி' என்னும் பொருளைத் தரக்கூடிய உரிச்சொற்கள் சால, தவ, உறு, நனி, கூர், கழி ஆகியன.

சாலச் சிறந்தது, தவச் சிறிது, நனி நன்று.

2. பல பொருள் தரும் ஓர் உரிச்சொல்.

எ.கா: 'கடி' என்னும் சொல்லானது காப்பு, கூர்மை, மணம், விரைவு, சிறப்பு, மிகுதி, புதுமை போன்ற பல பொருள்களைத் தரும்.

## பயிற்சிகள்

### அ) பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர்ச்சொல் | - | போல |
| 2. | வினையெச்சம் | - | பார்த்தான் |
| 3. | இடைச்சொல் | - | வனம் |
| 4. | உரிச்சொல் | - | பார்த்து |
| 5. | வினைமுற்று | - | நனி |

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இலக்கண அடிப்படையில் சொற்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?.

அ) ஐந்து ஆ) நான்கு இ) மூன்று ஈ) ஆறு

2. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்?

அ) ஐந்து ஆ) நான்கு இ) மூன்று ஈ) ஆறு

3. பின்வருவனவற்றுள் பல பொருள் தரும் உரிச்சொல் எது?

அ) சால ஆ) கடி இ) தவ ஈ) நனி

4. உரிச்சொல் எத்தனை வகைப்படும்?

அ) ஐந்து ஆ) இரண்டு இ) மூன்று ஈ) ஆறு

## இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. இடைச்சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
2. உரிச்சொல் - விளக்குக.
3. வினைமுற்றை ஓர் எடுத்துக்காட்டுடன் விளக்குக?
4. பெயர்ச்சொல் என்றால் என்ன? இரண்டு எடுத்துக்காட்டு தருக.
5. இலக்கண அடிப்படையில் சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## ஈ) கீழ்க்காணும் சொற்றொகுதிகளிலுள்ள பெயர்ச்சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

1. உறு, மேசை, கேட்டான் ______________________
2. கேட்ட, தவ, கணினி ______________________
3. புத்தகம், எழுது, நனி ______________________
4. சால, தமிழ், கடி ______________________
5. மாதம், விளையாடி, வளர்ந்த ______________________

## உ) உரிச்சொற்களைக் கண்டுபிடித்து வட்டமிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| ப | ட | ம் | ந | னி |
| த | டி | க | கொ | டு |
| வ | ட் | ட | ல | சா |
| கா | ற் | று | வ | த |
| டு | உ | று | தே | ர் |


## ஊ) பின்வரும் உரைப் பகுதியில் இடம்பெற்றுள்ள பெயர்ச்சொல், வினைச்சொல் இடைச்சொல், உரிச்சொல் ஆகியவற்றைக் கண்டு வகைப்படுத்துக.

தமிழ்நாட்டு மன்னர்கள் சாலச்சிறந்த ஆட்சியைப் புரிந்தனர். வேளாண்மையும் வணிகமும் நனிசிறக்க உதவினர். புலவர்களைப் போற்றும் புரவலர்களாக வாழ்ந்து தமிழ் வளர்த்தனர்.

| பெயர்ச்சொல் | வினைச்சொல் | இடைச்சொல் | உரிச்சொல் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

## 3.5 மொழியோடு விளையாடுவோம்

**குறிப்புகளைக் கொண்டு சொற்கோபுரத்தை நிறைவு செய்வோம்.**




**எடுத்துக்காட்டு:**

1. வா என்பதன் எதிர்ச்சொல் போ (1)
2. எண்ணும் எழுத்தும் ____________ எனத் தகும் (2)
3. காடும் காடு சார்ந்த இடமும் ____________ நிலம் (3)
4. கம்பராமாயணத்தின் ஆசிரியர் ____________ (4)
5. மின்விளக்கு எரிய ____________ தேவை (5)
6. உலகப்பொதுமறை என்று அழைக்கப்படும் நூல் ____________ (6)

### தகவல் துளி

சங்க காலத்தில், சேரநாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்று தமிழ்நாடு மூன்று பிரிவுகளாக இருந்தது. வடவேங்கடமும் தென்குமரியும் தமிழகத்தின் எல்லைகள் எனத் தொல்காப்பியத்தின் வழி அறிகிறோம். தமிழ்நாடு ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் மெட்ராஸ் மாகாணம் என்று அழைக்கப்பட்டது. விடுதலைக்குப் பிறகு, 1956 நவம்பர் 1 அன்று மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. அதுவரை 'மெட்ராஸ் மாகாணம்' என அழைக்கப்பட்டு வந்த பகுதியில், தமிழர்கள் வாழ்ந்த பகுதி மட்டும் 'மெட்ராஸ் ஸ்டேட்' ஆனது. இதனை தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்யக்கோரி விடுதலைப் போராட்ட வீரர் சங்கரலிங்கனார் 76 நாள்கள் தொடர் உண்ணாவிரதம் இருந்து, உயிர்நீத்தார். பின்னர், பல்வேறு போராட்டங்களுக்குப் பிறகு 1967-இல் சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டுவரப்பட்டு 1969 ஜனவரி 14 முதல் 'தமிழ்நாடு' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

## 3.6 கேட்டல் கருத்தறிதல்

### துமி

கம்பராமாயணம் அரங்கேற்றப்படும்போது கம்பர் எழுதிய 'துமி' என்ற சொல்லைக் கேட்ட புலவர் ஒட்டக்கூத்தர் 'துமி' என்ற சொல்லே தமிழில் கிடையாது என்று கூறினார்.

கம்பரிடம் மன்னர் இது பற்றிக் கேட்டார். "மன்னா! மக்கள் மத்தியில் புழக்கத்தில் உள்ள வட்டார வழக்குச்சொல்தான் துமி" என்று கம்பர் பதில் சொன்னார். ஆனால் ஒட்டக்கூத்தரோ தமிழில் 'துமி' என்கிற சொல் கிடையவே கிடையாது என்று வாதிட, கம்பரின் காவிய அரங்கேற்றம் நிறுத்தப்பட்டுவிட்டது.

மன்னர் மறுநாள் நகர்வலம் செல்லும்போது, கம்பரும் ஒட்டக்கூத்தரும் உடன் சென்றனர். அப்போது ஒரு வீட்டிலிருந்து ஒரு வினோத ஓசை வந்தது. "இது என்ன சத்தம்?" என்று மன்னர் கேட்டார். கம்பர் உடனே "மத்தினால் தயிர் கடையும் சத்தம் மன்னா" என்று சொன்னார். மன்னரை இந்த ஓசை மகிழ்ச்சியில் ஆழ்த்த, "கொஞ்ச நேரம் நின்று கேட்போமே" என்று சொன்னார்.

அந்த வீட்டினுள்ளிருந்து ஒரு பெண்ணின் குரல் கேட்டது: "குழந்தைகளா! கொஞ்சம் தள்ளி நில்லுங்கள், துமி தெறிக்கும்!"... இந்தச் சொற்களைக் கேட்டு, கம்பர் துள்ளிக் குதித்தார்! மகிழ்ச்சி பொங்க, "மன்னா! இதோ, துமி என்று சொல் இருக்கிறதே!" அதாவது குழந்தைகளின் உடல்மீது தயிர்த்துளி தெறித்து விடும் என்று அந்தப் பெண்மணி எச்சரிக்கிறாள் என்பதைக் கம்பர் விளக்கினார். மறுநாள் கம்பராமாயணம் மீண்டும் அரங்கேற்றப்பட்டது.

### வினாக்கள்

1. 'துமி' என்னும் சொல்லே தமிழில் கிடையாது என்று கூறிய புலவர் யார்?
2. கம்பர் எச்சொல்லை வட்டார வழக்குச்சொல் என்று கூறினார்?
3. ஒட்டக்கூத்தரும் கம்பரும் யாருடன் நகர்வலம் சென்றனர்?
4. 'துமி' என்னும் சொல்லின் பொருள் யாது?
5. 'துமி' என்னும் சொல்லால் எந்நூலின் அரங்கேற்றம் நிறுத்தி வைக்கப்பட்டது?

## 3.7 மொழிபெயர்ப்போம்

இயற்கை நமக்களித்த அற்புதப் படைப்புகளில் காடுகள் முதல் இடத்தைப் பெறுகின்றன. புவியின் மேற்பரப்பில் மூன்றில் ஒரு பகுதி காடுகளே ஆகும். ஒரு நாட்டில் காட்டுவளம் செழிப்பாக இருந்தால் நாடு வளம் பெறும். காடுகளைப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும். உலக வெப்பத்தைக் குறைக்கவும் பசுமையைப் பேணவும் காடுகள் பெரிதும் உதவுகின்றன.

## 3.8 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | நிலவளம் | - | Land Resources |
| 2. | நீர்வளம் | - | Water Resources |
| 3. | மலைவளம் | - | Mountain Resources |
| 4. | கவின் | - | Beauty |
| 5. | அறச்செயல் | - | Act of Charity |
| 6. | பவளங்கள் | - | Corals |
| 7. | நெற்பயிர் | - | Rice Crop |
| 8. | அன்னப்பறவை | - | Swan |
| 9. | அழகிய சோலை | - | Beautiful Garden / Grove |
| 10. | தீர்மானம் | - | Resolution |

## 3.9 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் படத்தைப் பார்த்து, எட்டு அடிகளில் பாடல் ஒன்றை எழுதுக.**



## 3.10 செயல்திட்டம்

மலை/ அருவி/ சோலை/ கடல் ஆகியவற்றுள் நீங்கள் கண்டுகளித்த ஏதேனும் ஒன்று குறித்துச் செய்தி விளக்கப்படம் தயாரித்து வருக,

## 4.1 பேசுவோம்

பாடம்
4



### கலந்துரையாடுவோம்

வெவ்வேறு நாடுகளுக்கு நீங்கள் சென்றுவந்த பயண அனுபவம் குறித்து வகுப்பு நண்பர்களுடனும் வகுப்பு ஆசிரியருடனும் கலந்துரையாடுக.

## 4.2 படிப்போம்

### நாடு

இக்காலக் கவிஞர்களின் பாடுபொருள்கள் நாடு, இனம், மொழி எனத் தொடங்கி அன்றாட வாழ்க்கைவரை நீள்கின்றன. நாமக்கல் கவிஞரும் மேற்கண்ட பாடுபொருள்களில் பல கவிதைகள் இயற்றியுள்ளார். இவர் காந்தியக் கொள்கைகள் மீது கொண்ட பற்றால், நாட்டின் சிறப்பை உணர்த்தும் கவிதைகள் பலவற்றை எழுதியுள்ளார்; இதனால் காந்தியக் கவிஞர் என்றும் அழைக்கப்படுகிறார்.

நிலவளம் நீர்வளம் நிறைந்ததுன் நாடு;
நீண்டஉன் பரப்பிலும் வேறிலை ஈடு;
விலையிலும் விளைவிலும் மலிந்ததுன் தேசம்;
வேண்டிய யாவும்உன் எல்லையில் வாசம்.

முப்பதும் பத்துமாம் கோடிஉன் மக்கள்;
மூவுல கத்தையும் ஆண்டிடத் தக்கார்;
அற்புத மாகிய ஆற்றல்கள் நிறைந்தாய்
அறியாத் தனத்தால் அடிமையில் இருந்தோம்.

படையெடுத் தவரும் பசியெடுத் தவரும்
பற்பல நாட்டார் உனையடுத் தவரை
அடைவுடன் அத்தனை பெயரையும் தாங்கி
ஆதரித் தாண்டஉன் அருங்குணம் ஓங்க

ஞானமுங் கலைகளுக் கிருப்பிட மாவாய்
நாகரி கத்தின் பிறப்பிட மாவாய்
தானமும் தவங்களைத் தாங்கின துன்கை
தருமம் யாவையும் தழைத்தது மிங்கே.

- நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்.

## பாடல் விளக்கம்

என் தாய் நாடே! நீ நிலவளமும் நீர்வளமும் நிரம்பப் பெற்றிருக்கிறாய்; உன்னைப் போல் நீண்ட நிலப்பரப்பு மிக்க நாடு வேறில்லை; மக்களுக்குரிய மதிப்பும், உற்பத்திப் பொருள்களும் உன்னிடம் மிகுதியாய்க் கிடைக்கின்றன.

சிறப்புமிக்க நீ நாற்பது கோடி குடிமக்களைப் பெற்றிருக்கிறாய்; அக்குடிமக்கள் யாவரும் மூவுலகையும் ஆளும் ஆற்றல் பெற்றவர்கள்; இதுபோன்ற பல அற்புத வளங்களைப் பெற்றிருந்தும், உன் மக்களாகிய நாங்கள் சில காலம் அடிமையாய் இருந்ததற்குக் காரணம் எங்கள் அறியாமையே.

வளங்களைச் சுரண்ட வந்தவர்களையும் வறுமையென வந்தவர்களையும் பிற நாட்டினர் என எண்ணாது வாரியணைத்து, தம் மக்கள்போல் காத்த உன் உயர்குணம் வாழ்க!

அறிவும், கலைகளும் நிலைத்துத் தங்கியிருக்கும் இருப்பிடமாவாய்; உலகமனைத்தும் தோன்றிச் சிறந்த நாகரிகம் அனைத்திற்கும் பிறப்பிடம் ஆவாய்; தானம், தவம் இரண்டும் தவறாது நடைபெறச் செய்த உன் கைகளால் அறச்செயல் அனைத்தையும் நடைபெறச் செய்தாய்.

## நூலைப் பற்றி

இப்பாடல் 'நாமக்கல் கவிஞர் பாடல்கள்' என்னும் கவிதைத்தொகுப்பில் 'இசைமலர்' என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது. இப்பாடலை எழுதியவர் வெ.இராமலிங்கனார். இவர் நாமக்கல் மாவட்டத்தில் பிறந்ததனால் 'நாமக்கல் கவிஞர்' என்று அழைக்கப்படுகிறார். 'என் கதை' (சுயசரிதம்), 'அவளும் அவனும்', 'மலைக்கள்ளன்', 'தமிழன் இதயம்', 'சங்கொலி', 'காந்தி அஞ்சலி' போன்ற நூல்களை இயற்றியுள்ளார். தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞர் என்ற பெருமைக்குரியவர். இந்திய அரசு இவருக்கு பத்ம பூஷண் (தாமரைச் செவ்வணி) விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளது.

## பொருள் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | தேசம் | – | நாடு |
| 2. | வாசம் | – | வசித்தல் |
| 3. | தக்கார் | – | தகுதியுடையோர் |
| 4. | மூவுலகம் | – | விண்ணுலகம், மண்ணுலகம், பாதாள உலகம் |
| 5. | அருங்குணம் | – | சிறந்த குணம் |
| 6. | ஓங்குக | - | வாழ்க |
| 7. | தானம் | – | ஈதல் |
| 8. | தவம் | – | வருந்தித் துறத்தல் |
| 9. | தருமம் | – | அறம் |

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நாமக்கல் கவிஞர் என்று அழைக்கப்படுபவர் யார்?

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்

இ) கவிமணி ஈ) வெ. இராமலிங்கனார்

2. ஞானம் என்ற சொல்லின் பொருள் என்ன?

அ) அறிவு ஆ) செல்வம்

இ) வெற்றி ஈ) கடமை

3. நாமக்கல் கவிஞருக்கு இந்திய அரசு வழங்கிய விருது என்ன?

அ) பத்மஸ்ரீ ஆ) பாரத ரத்னா

இ) பத்மபூஷண் ஈ) பத்ம விபூஷண்

4. நாமக்கல் கவிஞர் எழுதிய சுயசரித நூலின் பெயர்

அ) அக்னிச் சிறகுகள் ஆ) என் கதை

இ) என் சரிதம் ஈ) சத்திய சோதனை

5. 'தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞர்' என்ற பெருமைக்குரியவர் யார்?

அ) பாரதிதாசன் ஆ) வெ.இராமலிங்கனார்

இ) கண்ணதாசன் ஈ) பாரதியார்

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தன் தாய்நாட்டு மக்களின் திறமை குறித்து, கவிஞர் வெ. இராமலிங்கனார் யாது கூறுகிறார்?

2. தமிழ்நாடு அரசும் இந்திய அரசும் நாமக்கல் கவிஞரைச் சிறப்பித்துள்ள முறை குறித்து எழுதுக.

3. நாமக்கல் கவிஞர் எழுதிய நூல்களுள் நான்கினை எழுதுக.

4. மூவுலகங்களின் பெயர்களை எழுதுக.

5. பொருள் தருக.

1. தேசம் 2. தானம் 3. தவம் 4. தருமம்

### இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. காந்தியக் கவிஞர் தன் நாட்டின் வளத்தை எவ்வாறு புகழ்ந்து பாடியுள்ளார்?

## 4.3 படிப்போம்

### பிரேசில்




அன்புக் குழந்தைகளே! வணக்கம். யாரோ பேசுவதுபோல் இருக்கிறதா? நீங்கள் சுழற்றிப் பார்த்துக்கொண்டிருக்கும் உலக உருண்டையிலுள்ள பிரேசில்தான் பேசுகிறேன்.

நான் தென் அமெரிக்கா, இலத்தீன் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுக்கிடையே காணப்படும் மிகப் பெரிய நிலப்பரப்பாவேன். நிலப்பரப்பின் அடிப்படையில் உலகின் ஐந்தாவது பெரிய நாடாவேன். என் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள உலகின் மிகப் பெரிய காடுகளான அமேசான் உள்ளிட்ட அடர்ந்த காடுகளால் பிரபலமாக அறியப்படுகிறேன். அக்காடுகளின் வழி வருகின்ற அமேசான் ஆறு ஒரு தனி ஆறல்ல. பல நூற்றுக்கணக்கான நீர்வழிகளின் சங்கமம் ஆகும். என் நிலப்பரப்பு மிகவும் மாறுபட்டது.

என் மக்கள் மூன்று இனக்குழுக்களில் இருந்து வந்தவர்களாக அறியப்படுகிறார்கள். இவர்கள் அமெரிண்டியர்கள், ஐரோப்பியக் குடியேறிகள் (போர்ச்சுக்கீசியத்திலிருந்து வந்தவர்கள்), ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவர்கள் என அழைக்கப்படுகின்றனர். என் நாடு முழுக்கப் பேசப்படுகின்ற தேசிய மொழியாகப் போர்ச்சுக்கீசியம் திகழ்கிறது. இப்படிப் பல இனக்குழு மக்கள் கூடி வாழ்வதால் பண்பாடு, இசை, உணவுமுறை ஆகியன பன்முகத் தன்மை கொண்டவையாகக் காணப்படுகின்றன.

எம் மக்களில் பலரும் கால்பந்து விளையாட்டின் மீது தீராக்காதல் கொண்டுள்ளனர். பீலே, நெய்மர் போன்ற சிறந்த வீரர்கள் உருவாகியுள்ளனர், கால்பந்துப் போட்டியில் ஐந்து முறை உலகக் கோப்பையை வென்றிருக்கிறோம்.

என் வனப்பகுதிகளில் பல விதமான விலங்கினங்களும், ஆறுகளில் பல அரியவகை மீனினங்களும் காணப்படுகின்றன. நான் பலவிதமான மண்வகைகளைக் கொண்டிருக்கிறேன். கரும்பு, மரப்பால், சோயா பீன்ஸ், கோகோ பீன்ஸ், காஃபி, பருத்தி, அரிசி, வெப்ப மண்டலப் பழங்கள் ஆகியவற்றை விளைவித்து அதன் மூலம் பெருமளவு வருமானத்தைப் பெறுகின்றேன்.

வேதிப்பொருள்கள், உரங்கள், இரும்புச்சாதனங்கள், விமானம் மற்றும் கார் உற்பத்தியில் தன்னிகரற்று விளங்குகின்றேன். ஆகவே நான் தென் அமெரிக்காவின் தொழில் உற்பத்தி மையமாகத் திகழ்கின்றேன்.

எனது அரசு கூட்டாட்சித் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. பிரேசிலியாவைத் தலைநகராகக் கொண்டு குடியரசுத் தலைவரின் தலைமையில் அரசு நடத்தப்படுகிறது.

இசையும் கவிதையும் பாடலும் என் நாட்டு மக்களின் வாழ்வோடு கலந்திருப்பவை. அவை என் மக்களின் மன உணர்வின் அடிப்படையில் அமைகின்றன. அவை மட்டுமன்றி மண்பாண்டக் கலைகளிலும், ஓவியக் கலைகளிலும் என் மக்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவர்கள்.

இவ்வாறாக மக்கள் வாழ்வதற்கான அனைத்துக் கட்டமைப்புகளும் கொண்ட நாடாக நான் இருக்கின்றேன். சில இடர்களைக் களைந்தும், கடந்தும் உலகம் போற்றும் நாடாகத் தலைசிறந்து நிற்கின்றேன். ஆகவே மாணவர்களே நீங்களும் உங்கள் தாய்த்திரு நாட்டைச் சிறப்புறச் செய்யுங்கள்..!

அடுத்த முறை சந்திப்போம்! அதுவரை நாடு முன்னேறச் சிந்திப்போம்!

## பொருள் அறிவோம்

1. இடர்கள் – துன்பம்
2. இனக்குழு – ஒரு இனத்தினர் குழுவாகச் சேர்ந்து வாழ்தல்
3. சங்கமம் - இணைப்பு

## அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பிரேசிலின் எந்தப் பகுதியில் அமேசான் காடுகள் அமைந்துள்ளன?

அ) கிழக்கு ஆ) தெற்கு இ) மேற்கு ஈ) வடக்கு

2. பிரேசிலின் மிகச் சிறந்த கால்பந்தாட்ட வீரர் யார்?

அ) மரடோனா ஆ) மெஸ்ஸி இ) பீலே ஈ) ரொனால்டோ

3. பிரேசில் நாட்டில் விளையும் பொருள்களில் பொருந்தாதது?

அ) அரிசி ஆ) கோதுமை இ) பருத்தி ஈ) காஃபி

4. பிரேசில் மக்களின் தேசியமொழி எது?

அ) உருசியம் ஆ) ஸ்பானிஷ் இ) தமிழ் ஈ) போர்ச்சுக்கீசியம்

## ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக.

1. அமேசான் ஆறு பிரேசிலில் பாய்கிறது. (சரி/தவறு)
2. பிரேசில் ஒரு கூட்டாட்சி நாடு. (சரி/தவறு)

## இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பிரேசிலின் மிகப் பெரிய ஆறு மற்றும் காட்டின் பெயரை எழுதுக.
2. பிரேசிலின் வேளாண் உற்பத்திப் பொருள்கள் சிலவற்றைக் கூறுக.
3. பிரேசில் மக்களின் தனிச்சிறப்பு மிக்க கலைகள் யாவை?

## ஈ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. வற்றாத வளமுடைய நாடு பிரேசில் என்பதைப் பாடப்பகுதி கொண்டு விளக்குக.

## 4.4 தெரிந்துகொள்வோம்

### இலக்கிய வகைச் சொற்கள்

இலக்கிய வகையால் சொற்களை நான்காகப் பிரிக்கலாம். அவை,

1. இயற்சொல் 2. திரிசொல் 3. திசைச்சொல் 4. வடசொல்

**இயற்சொல்**

கற்றவர், கல்லாதவர் ஆகிய அனைவருக்கும் எளிதில் பொருள் புரியும் வகையிலுள்ள சொல் இயற்சொல் எனப்படும். இயற்சொல் இரண்டு வகைப்படும். அவை,

1. பெயர் இயற்சொல் (எ.கா) மண்

2. வினை இயற்சொல் (எ.கா) ஓடினான்

| வ.எண் | பெயர் இயற்சொல் | வினை இயற்சொல் |
|---|---|---|
| 1. | கல் | படித்தாள் |
| 2. | கடல் | தாவியது |
| 3. | மரம் | நடந்தான் |

**திரிசொல்**

கற்றவர் மட்டும் பொருள் உணர்ந்துகொள்ளும் வகையில் அமைந்துள்ள சொல் திரிசொல் எனப்படும்.

எ.கா: பீலி , வினவினான்

இதில் 'பீலி' என்பது மயில்தோகை, 'வினவினான்' என்பது கேட்டான் என்று பொருள்படும். இதனைக் கற்றவர் மட்டுமே புரிந்துகொள்வர். அதனால் இச்சொற்கள் திரிசொற்கள் ஆகும்.

**திரிசொல் வகைகள்**

திரிசொல்லை இரண்டு வகைப்படுத்தலாம். அவை,

1. பெயர்த் திரிசொல் 2. வினைத் திரிசொல்

**ஒரு பொருள் குறித்த பல பெயர்த் திரிசொல்**

தத்தை, கிள்ளை, அஞ்சுகம் ஆகியவை கிளி என்னும் ஒரே பொருளை உணர்த்தும் பல பெயர்த் திரிசொற்களாகும்.

**பல பொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல்**

ஆழி என்பது கடல், மோதிரம், சக்கரம், வட்டம் போன்ற பல பொருளை உணர்த்தும் ஒரு பெயர்த் திரிசொல் ஆகும்.

### ஒரு பொருள் குறித்த பல வினைத் திரிசொல்

செப்பினான், உரைத்தான், மொழிந்தான், இயம்பினான் ஆகியவை சொன்னான் என்னும் ஒரே பொருளை உணர்த்தும் பல வினைத் திரிசொற்களாகும்.

### பல பொருள் குறித்த ஒரு வினைத் திரிசொல்

வீசு என்பது எறி, சிதறு, பரவச்செய், ஆட்டு போன்ற பல பொருளை உணர்த்தும் ஒரு வினைத் திரிசொல் ஆகும்.

### திசைச்சொல்

பிற மொழிகளிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொற்கள் திசைச்சொற்கள் எனப்படும்.

எ.கா : வாடகை, அசல், தயார்

இவற்றுள் வாடகை என்பது தெலுங்கு மொழிச் சொல். அசல் என்பது உருது மொழிச் சொல். தயார் என்பது பாரசீக மொழிச் சொல். இவை போன்று பல்வேறு சொற்கள் தமிழில் கலந்து தமிழ்ச் சொற்கள் போலவே பேசப்பட்டு வருகின்றன.

**திசைச்சொற்களுள் சில**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அல்வா | - | அரபி | கோப்பை | - | போர்த்துக்கீசியம் |
| ஆசாமி | - | உருது | சட்னி | - | ஹிந்தி |
| கம்மி | - | பெர்சியன் | பப்பாளி | - | மலாய் |
| சேமியா | - | பஞ்சாபி | சாம்பார் | - | மராத்தி |
| கொலுசு | - | தெலுங்கு | | | |

### வடசொல்

வடமொழி என்று குறிப்பிடப்படும் சமஸ்கிருத மொழியிலிருந்து தமிழ் மொழியில் கலந்து வரும் சொற்கள் வடசொற்கள் எனப்படும்.

எ.கா : கமலம், புஷ்பம்

### வடசொல் இரண்டு வகைப்படும். அவை

1. தற்சமம்
2. தற்பவம்

### 1) தற்சமம்

வடமொழிச் சொற்கள் தமிழ் மொழியில் தமிழ்ச் சொற்கள் போன்றே மாற்றமின்றி வருவது தற்சமம் எனப்படும்.

எ.கா : காரணம், குங்குமம், நியாயம்

**2) தற்பவம்**

வடமொழிக்குரிய சிறப்பு எழுத்துகள் தமிழ் எழுத்துகளுக்கு ஏற்ப மாறி வருவது தற்பவம் எனப்படும்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா : | ஹரி | - | அரி |
| | வருஷம் | - | வருடம் |
| | சரஸ்வதி | - | சரசுவதி |

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுவோம்.

1. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்துப் பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. இயற்சொல் | - | அ) விஷம் |
| 2. திரிசொல் | - | ஆ) வானம் |
| 3. திசைச்சொல் | - | இ) களிறு |
| 4. வடசொல் | - | ஈ) கேணி |

அ) 1-இ, 2-ஆ, 3-ஈ, 4-அ    ஆ) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-அ

இ) 1-ஆ, 2-ஈ, 3-இ, 4-அ    ஈ) 1-அ, 2-இ, 3-ஈ, 4-ஆ

2. இலக்கிய வகைச் சொற்கள் எத்தனை வகைப்படும்?

அ) 2    ஆ) 3    இ) 4    ஈ) 5

3. கீழ்க்காண்பனவற்றுள் எது வினை இயற்சொல்?

அ) கடல்    ஆ) படித்தான்    இ) மொழிந்தான்    ஈ) கமலம்

4. 'வாடகை' என்பது எம்மொழிச் சொல்?

அ) தமிழ்    ஆ) பாரசீகம்    இ) தெலுங்கு    ஈ) உருது

5. சமஸ்கிருத மொழியிலிருந்து தமிழ் மொழியில் வழங்கி வரும் சொல்

அ) வடசொல்    ஆ) திசைச்சொல்    இ) இயற்சொல்    ஈ) திரிசொல்

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. இலக்கிய வகைச் சொற்களை எத்தனை வகையாகப் பகுக்கலாம்? அவை யாவை?
2. திசைச்சொல் என்றால் என்ன?
3. தற்சமம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

### இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. திரிசொல் குறித்து விவரிக்க.

## 4.5 கருத்து விளக்கப்படம்




### வினாக்கள்

1. தமிழ்க் கற்றல் கற்பித்தல் பணியை மேற்கொண்டுள்ள கழகம் எது?
2. தமிழ்ப் பரப்புரைக்கழகம் எத்தனை மொழிகளில் தமிழ்ப் பாடநூல்களை உருவாக்குகிறது?
3. தமிழ்ப் பரப்புரைக்கழகத்தின் பாடநூல்கள் எத்தனை நாடுகளில் பின்பற்றப்படுகின்றன?
4. தமிழ்ப் பரப்புரைக்கழகத்தின் பாடநூல்களில் பயன்படுத்தப்படும் துணைக் கருவிகளைப் பட்டியலிடுக.

## தகவல் துளி

பல மொழிகள் பேசப்படுவதால் இந்திய நாடு 'மொழிகளின் காட்சி சாலை' என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவில் நான்கு மொழிக்குடும்பங்கள் உள்ளன. இங்கு 1600க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. இந்தியாவில் மக்கள் பேசும் மொழியின் அடிப்படையில் மொழி வாரியாகப் பல மாநிலங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. இங்கே பேசப்படும் மொழிகள் பலவாயினும், வேற்றுமையில் ஒற்றுமை என்ற உயரிய கொள்கை பின்பற்றப்படுகிறது. 'இமயமலைச் சாரலில் ஒருவன் இருமினால், குமரிமுனையில் வாழ்பவன் மருந்து கொண்டோடுவான்' என்னும் பாரதிதாசனின் பாடலடிகள் இதனை உறுதி செய்கிறன.

## 4.6 கேட்டல் கருத்தறிதல்

### நாமக்கல் கவிஞர்

நாமக்கல் இராமலிங்கனார் ஒரு கவிஞர் மட்டுமல்லர்; சிறந்த ஓவியரும்கூட. ஒரு முறை நாமக்கல் வந்த சிம்சன் என்ற ஆங்கிலேயர் நாமக்கல் கவிஞரின் ஓவியத்தைப் பார்த்து வியந்து அவரைச் சந்தித்தார். இறந்துபோன தன் ஒரே குழந்தையின் படத்தைக் கவிஞரிடம் தந்து, அதை ஓவியமாகத் தீட்டித்தர வேண்டும் என்றும் அதற்கு ஐம்பது ரூபாய் பரிசாகத் தருவதாகவும் ஓவியம் தனக்குப் பிடித்தால் மேற்கொண்டு பணம் அதிகமாகத் தருவதாகவும் கூறினார். அதை ஏற்றுக்கொண்ட கவிஞர், குழந்தையின் ஓவியத்தை வரைந்து சிம்சனிடம் தந்தார். அப்படத்தை வாங்கி ஒரு மேசை மேல் வைத்து சற்று விலகி நின்று பல கோணங்களில் அந்த ஓவியத்தைப் பார்த்தார் சிம்சன். அவர் நெடுநேரம் இப்படிப் பார்த்து "ஓவியரே நீர் வெற்றி பெற்றுவிட்டீர். என் குழந்தையின் படம் உயிர்த்துடிப்போடு இருக்கிறது. இதை என் மனைவி பார்த்தால் அழுதுவிடுவாள்" என்று கவிஞரைப் பாராட்டி, ஒரு கட்டு நோட்டை உருவி, அதைக் கவிஞரிடம் கொடுத்தார்.

நோட்டுகளை எண்ணிப் பார்த்த கவிஞர் 675 ரூபாய் இருப்பதைப் பார்த்து வியந்து 'இவ்வளவு அதிகமாகக் கொடுத்திருக்கிறாரே' எனச் சந்தேகித்து அந்த நோட்டுக்களை அப்படியே மேஜை மேல் வைத்தார். "ஏன்?" என்று கேட்டார் சிம்சன். "இல்லை, மிகவும் அதிகமாக இருக்கிறது" என்றார் கவிஞர். சிம்சன் நோட்டுக்களை எண்ணிப் பார்த்து, நண்பர் ஒருவருக்குக் கொடுக்க வைத்திருந்த பணமும் கூடுதலாகச் சேர்ந்துவிட்டதை அறிந்தார். எனினும் அதற்காக அவர் தயங்காமல், "நீங்கள் வரைந்த, விலைமதிப்பற்ற இந்த ஓவியத்துக்கு இவ்வளவு பணம் தகும். எனவே இந்தப் பணத்தை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்" என்றார்.

### வினாக்கள்

1. கவிதையிலும் ஓவியத்திலும் சிறந்து விளங்கிய கவிஞர் யார்?
2. ஆங்கிலேயர் சிம்சன் யாருடைய படத்தைக் காட்டி நாமக்கல் கவிஞரிடம் வரையச் சொன்னார்?
3. ஓவியத்திற்கு சிம்சன் தருவதாகச் சொன்ன பணம் எவ்வளவு? அவர் கொடுத்தது எவ்வளவு?
4. சிம்சன் தன் குழந்தையின் ஓவியம் எவ்வாறு இருந்ததாகக் கூறினார்?
5. கவிஞரின் நேர்மை மாறாக் குணம் பற்றி எழுதுக.

## 4.7 மொழிபெயர்ப்போம்

Human migration is the movement by people from one place to another with the intention of settling temporarily or permanently in the new location. The movement is typically over long distances and from one country to another, but internal migration is also possible. Migration may be as individuals, family units or large groups.

________________________________________

________________________________________

________________________________________

## 4.8 அறிந்துகொள்வோம்

1. உலக உருண்டை - Globe
2. உலகக் கோப்பை - World Cup
3. வருமானம் - Income
4. வேதிப்பொருள்கள் - Chemicals
5. உரங்கள் - Fertilizer
6. இரும்பு - Iron
7. கூட்டாட்சித் தத்துவம் - Federalism
8. குடியரசுத் தலைவர் - President
9. விருப்பம் - Desire
10. ஓவியக்கலை - Painting
11. இடர் - Distress, Affliction
12. முன்னேற்றம் - Progress

## 4.9 உயர்நிலைத்திறன்

**'நாடு' என இறுதியில் முடியும்படி, மூன்று சீர் கொண்ட பாடல் உருவாக்குக.**

நான் வாழும் நாடு

நல்ல வளமுடைய நாடு

____________________ நாடு

____________________ நாடு

____________________ நாடு


____________________ நாடு

## 4.10 செயல்திட்டம்

நீங்கள் வாழும் நாட்டின் நிலவளம், நீர்வளம், மலைவளம் குறித்த செய்திகளைத் திரட்டித் தொகுப்பேடு உருவாக்கி வருக.

பாடம் 5

## 5.1 பேசுவோம்




## கலந்துரையாடுவோம்

ஒரு தனி மனிதன் சமூகத்தோடு ஒன்றிணைந்து வாழ்வதற்கான காரணங்கள் குறித்து வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 5.2 படிப்போம்

### தனிப்பாடல்

சமூக வாழ்வில் இளமைக்காலம் முதல் முதுமைக்காலம் வரை பல உறவுகளோடு சேர்ந்து வாழ்கிறோம். அவ்வாறு சேர்ந்து வாழும்போது உறவினர்களிடமும் நண்பர்களிடமும் கிடைக்கும் அனுபவங்கள் பல. இவ்வனுபவங்கள்தான் உறவுகளிடம் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதைக் கற்றுத்தருகின்றன. தனிப்பாடல் ஒன்றில், உறவுகளைப் பற்றியும் அவர்களிடம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றியும் ஔவையார் குறிப்பிட்டுள்ளார்.

மதியாதார் முற்றம் மதித்தொரு கால்சென்று
மிதியாமை கோடி பெறும்;

உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்;

கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்;

கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும்.

- ஔவையார்

## பாடல் விளக்கம்

தம்மை மதியாதார் வீட்டிற்குச் செல்லாமல் இருப்பது கோடி செல்வம் பெற்றதற்குச் சமமாகும்.

'உண்ணுங்கள்! உண்ணுங்கள்!' என்று அழைக்காதவர்களின் வீட்டில் உணவு உண்ணாமல் இருப்பது கோடி செல்வம் பெற்றதற்குச் சமமாகும்.

கோடி செல்வத்தைக் கொடுத்தாவது பண்பட்ட நற்குடியில் பிறந்தவரோடு சேர்ந்து இருப்பது கோடி செல்வம் பெற்றதற்குச் சமமாகும்.

கோடி செல்வம் கிடைப்பதாக இருந்தாலும் சொன்ன சொல்லிலிருந்து தவறாமல் இருப்பது கோடி செல்வம் பெற்றதற்குச் சமமாகும்.

## நூலைப் பற்றி

சங்க காலத்தில் தொகுக்கப்பட்ட பாடல்களின் தொகுப்பு சங்க இலக்கியம். பிற்காலத்தில் தொகுக்கப்படாமல் இருந்த பல பாடல்களைத் தொகுத்து அவற்றைத் 'தனிப்பாடல் திரட்டு' என்று அழைத்தனர். கம்பர், காளமேகப் புலவர், ஔவையார், இராமச்சந்திரக் கவிராயர் முதலான பல்வேறு புலவர்களால் வெவ்வேறு காலங்களில் பாடப்பட்ட பாடல்கள் இவை.

## பொருள் அறிவோம்

1. முற்றம் – வாசல்
2. நாக்கோடாமை – வாக்கு தவறாமை
3. மனை – வீடு

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுவோம்.

1. முற்றம் என்னும் சொல்லுக்கான பொருள்.

அ) வாசல் ஆ) கொல்லைப்புறம்

இ) உள் அறை ஈ) விளையாட்டுத் திடல்

2. எந்தக் குடியினருடன் நட்பு கொள்ள வேண்டும்?

அ) செல்வர் ஆ) தீய குடியினர்

இ) உறவினர் ஈ) நற்குடியினர்

3. உண்ணீர் உண்ணீர் என்று ________________ தம்மனையில் ________________ கோடி பெறும்;

அ) உபசரியார், மிதியாமை ஆ) உபசரியார், உண்ணாமை

இ) குடிபிறந்தார், உண்ணாமை ஈ) குடிபிறந்தார், மிதியாமை

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தனிப்பாடல்கள் பாடியுள்ள நான்கு புலவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. ஔவையார் பாடியுள்ள தனிப்பாடலில் யாருடைய உறவைப் பேண வலியுறுத்துகிறார்?
3. சொன்ன சொல்லிலிருந்து தவறாமல் இருப்பது எதற்குச் சமமாகும்?
4. தனிப்பாடல் திரட்டு என்று எதை அழைத்தனர்?
5. உறவுகளைப் பற்றியும் அவர்களிடம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றியும் ஔவையார் குறிப்பிடும் பாடலை எழுதுக.

### இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. எவ்வாறெல்லாம் இருந்தால் கோடி செல்வம் பெற்றதற்குச் சமமாகும் என ஔவையார் குறிப்பிடுகிறார்?

## 5.3 படிப்போம்

### பண்படுத்தும் பழமொழிகள்

### அறிமுகம்

உலக வாழ்க்கையில் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமான அனுபவத்தைப் பெறுகின்றனர். ஒரு செயலைச் செய்யும்போது தமக்குக் கிடைக்கும் அனுபவத்தை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ளுதல் நம் சமூகத்தின் இயல்பு. நம் முன்னோரின் வாழ்க்கை அனுபவமே பழமொழியாக வெளிப்படுகிறது. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலே பழமொழியின் முதன்மை நோக்கம்.

ஒவ்வொரு சூழலுக்கும் ஏற்பப் பழமொழிகள் சொல்லப்படுகின்றன. பழமொழிகள் கேட்போருக்குப் பயன்தரக்கூடியவை. கவனத்துடன் செயல்பட வழிகாட்டுபவை.

முகிலனும் கபிலனும் பேசிக்கொள்கின்றனர்.

**கபிலன்** : முகிலா! எங்கே செல்கிறாய்?

**முகிலன்** : நேற்றுப் படித்துக்கொண்டிருந்த புத்தகத்தை இன்னும் முழுமையாகப் படித்து முடிக்கவில்லை. நூலகத்திற்குச் செல்கிறேன்.

**கபிலன்** : அது என்ன புத்தகம்?

**முகிலன்** : பழமொழிகள் பற்றிய புத்தகம். அதனைப் படிக்க மிகவும் வியப்பாக இருக்கிறது.

**கபிலன்** : உன்னிடம் பழமொழிகளைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆர்வத்துடன் இருக்கிறேன்.

**முகிலன்** : நம் முன்னோர்களின் அனுபவங்களின்வழி பிறந்தவை பழமொழிகள். வாழ்க்கையைப் புரிந்துகொள்ளவும் சரியான பாதையில் செல்லவும் இப்பழமொழிகள் துணைபுரிகின்றன. பழமொழிகள் கருத்தாழம் மிக்கவை. இவை நேரடியாகப் பொருள் தருவதில்லை. படிக்கப் படிக்க சிந்தனையைத் தூண்டிடும் கருத்துக் கோவையாகப் பழமொழிகள் திகழ்கின்றன.


**கபிலன்** : அறிவுரை கூறும் வகையில் அமைந்த பழமொழிகள் உள்ளனவா?

**முகிலன்** : ஆம், இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, 'கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு' என்னும் பழமொழி ஒருவரால் உலகில் உள்ள அனைத்துத் துறை சார்ந்த செய்திகளையும் கற்றுக்கொள்வது மிக எளிதன்று; தாம் கற்றுக்கொண்டது உலகில் உள்ளவற்றுள் தம் கைம்மண்ணளவு மட்டுமே. அதாவது மிகவும் குறைவு. இன்னும் கற்றுக்கொள்ள நிறைய உள்ளன. எனவே கல்லாதது உலகளவு என அறிவுறுத்துகிறது.



**கபிலன்** : அருமை, சிறந்த பொருள் உணர்த்தும் பழமொழி.

**முகிலன்** : கபிலா, 'குறை குடம் கூத்தாடும்' என்றொரு பழமொழி உள்ளது. இப்பழமொழிக்கான பொருள் என்னவென்றால், குடம் நிறையத் தண்ணீர் இருந்தால் தண்ணீர் சிந்தாமல் எடுத்துச்செல்லலாம். குடத்திலுள்ள நீர் குறைவாக இருந்தால் எடுத்துச்செல்லும்போது தளும்பும். அதுபோல முழுமையான அறிவுடையவர்கள் அமைதியாக இருப்பர். அரைகுறை அறிவுடையவர்கள் தனக்கு மட்டுமே தெரியும் என்று நினைத்துக்கொண்டு பேசுவர்.



**கபிலன்** : அடக்கத்துடன் இருப்பது நிறை குடத்திற்கு ஒப்பானது என்னும் பழமொழி மிகச் சிறப்பு. முகிலா இன்னும் சில பழமொழிகளைச் சொல்.

**முகிலன்** : 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்னும் பழமொழியைப் படிக்கிறபோது அதில் பொதிந்துள்ள உட்கருத்தை அறிய முடிகிறது கபிலா. அறுவடை செய்த நெல் போன்ற தானியங்களைக் காற்று அடிக்கிறபோது, தூற்றினால்தான் தானியத்தோடு கலந்துள்ள தூசுகள் நீங்கும். அதுபோல வாய்ப்பு கிடைக்கும்போது செயலை உடனே



செய்திடல் வேண்டும். வாய்ப்பைத் தவறவிட்டால் மீண்டும் கிடைக்காது. காற்று வீசுகிறபோதே முறத்தில் தானியங்களை அள்ளி, அவற்றிலுள்ள தூசுகளை நீக்கிவிட வேண்டும் என்பது நேரடிப் பொருள். இந்தப் பழமொழி, நமக்கு வாய்ப்பு வருகிறபோது அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தவறவிட்டால் மறுபடியும் வாய்ப்பு கிடைக்காது என்னும் கருத்தாழம் மிக்க மறைமுகப் பொருளைத் தருகிறது.

**கபிலன்** : மிகவும் அருமை. பழமொழிகள் உண்மையிலேயே நம்மைப் பண்படுத்தக்கூடியவைதான். நானும் பழமொழிகளைப் படிக்க ஆவலாக இருக்கிறேன். இப்போது என் பாட்டி சொன்ன பழமொழி ஒன்று எனக்கு நினைவு வருகிறது. 'கடைசித் துளியில் பானை நிரம்பும்'. முகிலா, இந்தப் பழமொழிக்கு என்ன பொருள்?



**முகிலன்** : இந்தப் பழமொழி ஒவ்வொருவரின் வாழ்க்கைக்கும் பயன்படக்கூடியது கபிலா. வாழ்க்கையின் எந்தச் சூழலிலும் முயற்சி செய்வதை நிறுத்திவிடக் கூடாது; நம்பிக்கையை இழந்துவிடக் கூடாது. கடைசித் துளியில் பானை நிரம்பும் என்றால் ஒவ்வொரு துளியும் மிகவும் முக்கியமானதுதான். சிறு துளியாக இருந்தாலும் அலட்சியம் இல்லாமல் கவனமாகச் சேர்க்க வேண்டும் என்பதை இப்பழமொழி நமக்கு உணர்த்திவிடுகிறது. பழமொழிகள் நம் பண்பாட்டின் அடையாளமாய்த் திகழ்பவை. அவற்றைப் படித்து நாம் பயன்பெறுவோம். பலருக்கும் எடுத்துக்கூறுவோம்.

## பொருள் அறிவோம்

1. கல்லாதது – தெரிந்துகொள்ளாதது
2. பொதிந்துள்ள – மறைந்துள்ள
3. தளும்பும் – குடத்தில் உள்ள குறைந்த நீர் அசையும் போது வழிதல்
4. முறம் – நுனிப்பகுதி சற்று அகலமாக இருக்கும்படி மெல்லிய மூங்கில் பிளாச்சால் பின்னப்பட்ட தடித்த விளிம்புடைய சாதனம்
5. தூற்றுதல் – காற்று வீசும் திசையில் முறத்தில் உள்ள நெல் போன்ற தானியத்தை மேலிருந்து கீழாக மெதுவாகக் கொட்டுதல்
6. அலட்சியம் - பொருட்படுத்தாத போக்கு

## பயிற்சிகள்

### அ) கீழ்க்காணும் தொடர்களில் சரியான தொடரைக் கண்டறிக.

1. கற்றது உலகளவு கல்லாதது கைம்மண்ணளவு.
2. குறை குடம் கூத்தாடும்.
3. பழமொழிகள் நேரடியாகப் பொருள் தரக் கூடியவை.
4. அறிவுரை சொல்லும் வகையில் பழமொழிகள் அமைந்திருக்காது.
5. முன்னோர் சொன்ன பழமொழிகள் கருத்தாழம் மிக்கவை.

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. 'பழமொழிகள் நம்மைப் பண்படுத்துகின்றன' என்னும் கூற்றை விளக்குக.
2. 'ஆயிரம் வேரைக் கொண்டவன் அரை வைத்தியன்' – இப்பழமொழிக்கான விளக்கத்தை எழுதுக.

### இ) கலைந்துள்ள சொற்களில் மறைந்திருக்கும் பழமொழியைக் கண்டுபிடிக்க.

1. தெரியும் அழகு முகத்தில் அகத்தின்
2. உழு அகல ஆழ உழுவதைவிட
3. போடு அளந்து ஆற்றில் போட்டாலும்
4. வெயிலில் நிழலின் தெரியும் அருமை
5. ஆகாது மரம் தனி தோப்பு

### ஈ) விடுபட்ட சொற்களைக் கண்டுபிடித்துப் பழமொழியை நிறைவு செய்க.

1. இக்கரைக்கு ____________ பச்சை
2. ____________ வளையாதது ஐம்பதில் வளையாது.
3. தனிமரம் ____________ ஆகாது.
4. பசி வந்தால் பத்தும் ____________ போகும்.
5. ____________ தெரியாமல் காலை விடாதே.

## 5.4 தெரிந்துகொள்வோம்

### வல்லினம் மிகும் இடங்கள்

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது சில இடங்களில் வல்லினம் மிகுந்தும், சில இடங்களில் வல்லினம் மிகாமலும் வரும். அவற்றுள் வல்லினம் மிகும் இடங்களைப் பற்றி இங்கே காண்போம்.

வல்லெழுத்துகளில் உள்ள க், ச், த், ப் ஆகிய நான்கு மெய்களுள் ஒன்று வருமொழி முதலில் வந்து நிலைமொழியின் ஈற்றோடு புணரும்போது சில சூழல்களில் ஒற்று மிகும். இதை வல்லினம் மிகுதல் என்பர்.

சான்று

தமிழ் + காதல் = தமிழ்க்காதல்

தமிழ் + சான்றோர் = தமிழ்ச்சான்றோர்

தமிழ் + தாய் = தமிழ்த்தாய்

தமிழ் + பாடல் = தமிழ்ப்பாடல்

மேற்கண்ட சான்றுகளில் தமிழ் என்பது நிலைமொழி. காதல், சான்றோர், தாய், பாடல் என்பன வருமொழிகள் ஆகும்.

தமிழ்க்காதல், தமிழ்ச்சான்றோர், தமிழ்த்தாய், தமிழ்ப்பாடல் என்று வல்லினம் மிகுந்துள்ளது.

| வ. எண் | வல்லினம் மிகும் இடங்கள் | சான்றுகள் |
|---|---|---|
| 1. | அ, இ, அந்த, இந்த என்னும் சுட்டுகளுக்குப் பின் மிகும் | அக்காலம், இப்பறவை அந்தப் பக்கம், இந்தச் சாலை |
| 2. | எ, எந்த என்ற வினாக்களின் பின் மிகும் | எப்பொருள், எந்தத் தொடர் |
| 3. | 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு, 'கு' என்னும் நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படையாக வரும் இடங்களில் மிகும் | நூலைப் படி, பள்ளிக்குச் சென்றான் |
| 4. | எட்டு, பத்து என்னும் எண்ணுப்பெயர்களின் பின் மிகும் | எட்டுப் பேர், பத்துத் தலை |
| 5. | ஓரெழுத்து ஒருமொழிக்குப் பின் மிகும் | தைத்திங்கள் |
| 6 | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் மிகும் | எழுதாச் சொல் |

| | | |
|---|---|---|
| 7 | திசைப்பெயர்களின் பின் மிகும் | மேற்குத் தொடர்ச்சி, கிழக்குச் சீமை |
| 8 | உவமைத்தொகையில் மிகும் | மலர்க்கை |
| 9 | சால, தவ போன்ற உரிச்சொற்களின் பின் மிகும் | சாலச்சிறந்தது, தவப்பெரிது |
| 10 | ஆக, என போன்ற சொல்லுருபுகளின் பின் மிகும் | படிப்பதாகச் சொன்னாள், பாடெனக் கூறினார் |

## பயிற்சிகள்

### அ) பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. புணர்ச்சியில் மிகும் வல்லின எழுத்துகள்

   அ) க் ச் ட் ற் ஆ) த் ச் ற் ட்

   இ) க் ச் த் ப் ஈ) க் ங் ச் ஞ்

2. சந்திப் பிழையற்ற தொடரைத் தேர்க.

   அ) எட்டு பேர் மேற்குத் திசையில் சென்றதாகக் கூறினர்

   ஆ) எட்டுப் பேர் மேற்கு திசையில் சென்றதாக கூறினர்.

   இ) எட்டுப் பேர் மேற்கு திசையில் சென்றதாக கூறினர்.

   ஈ) எட்டுப் பேர் மேற்குத் திசையில் சென்றதாகக் கூறினர்.

3. தேவையான இடங்களில் உரிய வல்லின மெய்களை இட்டு எழுதுக.

   அ) எல்லோரும் ஒற்றுமையாக கூடி வளங்களை சமமாக பகிர்ந்து வாழும் வாழ்க்கையே சமூக வாழ்க்கை

   ஆ) மனிதன் நாகரிகம் பெற தொடங்கிய காலத்திலிருந்தே தன்னை காத்துகொள்ள சமூக உறவை அடிப்படையாக கொண்டான்.

### ஆ) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடை எழுதுக.

1. வல்லினம் மிகுதல் என்றால் என்ன?

2. இரண்டாம் வேற்றுமை உருபு மற்றும் நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படையாக வரும் இடங்களில் வல்லினம் மிகுவதற்கு இரண்டிரண்டு சான்றுகள் தருக.

## தகவல் துளி

சந்திரயான் என்பது இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் (ISRO) திட்டத்தின் கீழ் விண்வெளிக்குச் செலுத்தப்படும் விண்கலம். இதன் அடிப்படையில் சந்திரயான்-1 திட்ட இயக்குநராகப் பொள்ளாச்சியை அடுத்த கோதவாடியைச் சேர்ந்த மயில்சாமி அண்ணாதுரையும், சந்திரயான்-2 திட்ட இயக்குநராகச் சென்னையைச் சேர்ந்த முத்தையா வனிதா அவர்களும், அதனைத் தொடர்ந்து தற்போது சந்திரயான்-3 திட்ட இயக்குநராக விழுப்புரத்தைச் சேர்ந்த வீரமுத்துவேல் அவர்களும் பணியாற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் சந்திரயான்-3, 14 ஜூலை 2023 அன்று விண்ணில் ஏவப்பட்டது. சந்திரனின் சுற்றுப்பாதையில் ஆகஸ்ட் 5 அன்று இந்த விண்கலம் நுழைந்தது, மேலும் விக்கரம் லேண்டர் 23 ஆகஸ்ட் 2023 அன்று 12:32 மணியளவில் சந்திரனின் தென் துருவப் பகுதியை அடைந்தது. இதன் மூலம் சந்திரனுக்கு வெற்றிகரமாக விண்கலம் அனுப்பிய நான்காவது நாடு என்ற பெருமையையும் சந்திரனின் தென் துருவத்தில் கால்பதித்த முதல்நாடு என்ற பெருமையையும் இந்தியா பெற்றுள்ளது.

## 5.5 மொழியோடு விளையாடுவோம்

**கீழே கொடுக்கப்பட்டுள்ள தமிழ் எழுத்துகளை வைத்துக் குறைந்தது பத்து சொற்களை உருவாக்குக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சி | ம் | இ | க | |
| வை | ல | ந | ய | கு | று |
| | ல் | ம | லை | பா | |

| | | | |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

## 5.6 கேட்டல் கருத்தறிதல்

### ஔவையார்

தமிழ் மூதாட்டி எனப் புகழப்படுபவர் ஔவையார். 'அம்மை' என்ற சொல்லின் திரிபே 'அவ்வை' ஆகும். பழந்தமிழகத்தில் 'ஔவையார்' என்ற பெயருடைய பல பெண்பாற்புலவர்கள் இருந்தனர் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

இவர்களுள் முதன்மையானவர் சங்க காலத்தில் (இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு) வாழ்ந்தவர். அதியமானிடம் அன்பு காட்டி நெல்லிக்கனியைப் பெற்ற புறநானூற்று ஔவையாரே பழம்பெரும் ஔவையார். அவருடைய காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு.

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் கம்பர், ஒட்டக்கூத்தர் ஆகியோருடன் வாழ்ந்தவர் 'இடைக்கால ஔவையார்'. கம்பனிடம் கவிதைப்போர் நடத்திய இவர், பிற்காலச் சோழனின் ஆட்சியில் வாழ்ந்தவர். இவர் பாடிய தனிப்பாடல்கள் பல, இன்றும் இலக்கியச் சுவையுடன் திகழ்கின்றன.

'கானமயிலாட கண்டிருந்த வான்கோழி' என்னும் பாடலைப் பாடியவர் 'பிற்கால ஔவையார்'. 'வான்கோழி' இந்தியப் பறவை இனங்களைச் சார்ந்தது அல்ல. 'வான்கோழி' இந்தியாவிற்கு வந்தது ஐரோப்பியர் கடல்வழியைக் கண்டுபிடித்த பிறகே ஆகும். எனவே, பிற்கால ஔவையாரின் காலம் கி.பி. பதினாறாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாக இருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர். இவரே 'ஆத்திசூடி', 'கொன்றைவேந்தன்', 'மூதுரை', 'நல்வழி' ஆகிய நீதி நூல்களை இயற்றியவர். பிற்கால ஔவையார் 'ஆத்திசூடி' மூலம் உயர்ந்த கருத்துகளைக் கூறியவர். இவருடைய மொழிநடையைக் கருத்தில் கொண்டு, இவரை இருநூறு அல்லது முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவராகக் கருதலாம். இவ்வாறு 'ஔவை யார்?' என்னும் நூலில் ம.பொ.சிவஞானம் அவர்கள் குறிப்பிடுகிறார்.

### வினாக்கள்

1. 'அவ்வை' என்பது எச்சொல்லின் திரிபு?
2. அதியமானிடம் நெல்லிக்கனியைப் பெற்ற ஔவையாரின் காலம் எது?
3. 'ஔவை யார்?' என்னும் நூலின் ஆசிரியர் யார்?
4. கம்பனிடம் சொற்போர் நடத்திய ஔவையார் யாருடைய ஆட்சியில் வாழ்ந்தவர்?
5. பிற்கால ஔவையாரின் நூல் ஒன்றைக் கூறுக.

## 5.7 மொழிபெயர்ப்போம்

வாழ்க்கை அனுபவங்களின் வெளிப்பாடுகளே பழமொழிகள். அவை ஒரு சமுதாயத்தின் அறிவுக்கூர்மையை எடுத்து விளக்குவதாக அமைகின்றன. பழமொழிக்கு இரண்டு இன்றியமையாப் பண்புகள் உள்ளன. ஒன்று, சுருக்கம் மற்றும் செறிவு; மற்றொன்று, மக்களின் அன்றாட வாழ்க்கையில் பயன்படும் தன்மை.

______________________________

______________________________

______________________________

______________________________

## 5.8 அறிந்துகொள்வோம்

1. பழமொழிகள் - Proverbs
2. அனுபவம் - Experience
3. பகிர்தல் - Sharing
4. முன்னோர் - Ancestor
5. சூழல் - Situation
6. நூலகம் - Library
7. வியப்பு - Wonder
8. சிந்தனை - Thought
9. அறுவடை - Harvest
10. தானியங்கள் - Grains
11. வாய்ப்பு - Opportunity
12. துளி - Drop
13. அலட்சியம் - Unconcern/Indifference
14. கவனம் - Attention
15. அடையாளம் - Identity

## 5.9 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் நுண்கதையைப் படித்து, அதற்குப் பொருந்தும் பழமொழியைத் தேர்வு செய்க.**

அன்றுதான் விண்ணப்பம் அனுப்புவதற்கு இறுதி நாள். விண்ணப்பக் கட்டணத்திற்குத் தேவையானதைவிட மிகவும் குறைவாகவே கண்ணனிடத்தில் பணம் இருந்தது. நண்பர்களிடம் கேட்க அவனுக்குத் தயக்கமாக இருந்தது. அதனால் என்ன செய்வது எனத் தெரியாமல் கவலையில் ஆழ்ந்தான் கண்ணன். அப்போது, அவனுடைய தம்பி கபிலன் வந்தான். அண்ணன் கவலையுடன் இருப்பதை அறிந்தான். காரணத்தை அம்மாவிடம் கேட்டு அறிந்துகொண்டான். உடனே அவன் தன் அறைக்குச் சென்றான். பின்னர், கண்ணனிடம் சென்று, தன் கையில் இருந்த சிறு உண்டியலைக் கொடுத்தான். கண்ணன் நிமிர்ந்து பார்த்தான். "அண்ணா, இதில் இருநூறு ரூபாய் சேர்த்து வைத்துள்ளேன். இதை எடுத்துக்கொண்டு, உடனே சென்று விண்ணப்பப் படிவத்தை வாங்குங்கள்" என்றான் கபிலன். கபிலனின் உதவும் பண்பும் அவனது சேமிப்புப் பழக்கமும் தக்க சமயத்தில் கண்ணனுக்குக் கைக்கொடுத்து உதவின. இரு மாதத்திற்குப் பின், தன் முதல் மாதச் சம்பளத்தைக் கொண்டுவந்த கண்ணன் சிறிய அட்டைப்பெட்டி ஒன்றையும் வாங்கிவந்தான். அதில், அழகிய கண்கவர் வீடு போன்ற அமைப்பைக் கொண்ட உண்டியல் இருந்தது. அதனைக் கபிலனுக்குக் கொடுத்து, அவனை மகிழச்செய்தான் கண்ணன்.

**மேற்கண்ட நுண்கதைக்குப் பொருத்தமான பழமொழியைத் தேர்ந்தெடுக்க.**

1. பணம் பத்தும் செய்யும்
2. சிறு துளி பெருவெள்ளம்
3. பதறிய காரியம் சிதறிப்போகும்

## 5.10 செயல்திட்டம்

'அ' என்னும் எழுத்தில் தொடங்கும் பத்து தமிழ்ப் பழமொழிகளை எழுதி வருக.

பாடம்
6

## 6.1 பேசுவோம்




## கலந்துரையாடுவோம்

தமிழ்நாட்டின் தொல்லியல் ஆய்வுப் பகுதிகளுக்கு நீங்கள் சென்றுவந்த அனுபவம் பற்றி உங்கள் வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 6.2 படிப்போம்

### பூமியின் முற்றம் முழுவதும் சுற்றம்

சில கவிதைகளை வாசிக்கும்போது சமூகத்தின் மீது ஒருவிதப் பற்று ஏற்படுகிறது. நம்மால் இயன்றவரை சமூக வளர்ச்சிக்குத் துணைநிற்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது. கீழ்க்காணும் கவிதை மனிதநேயத்துடன் கூடிய சமூகச் சிந்தனையை வெளிப்படுத்துகிறது.

நாடு விட்டு நாடு
நதிநடந்து போனதென்று
நாடு கடத்திய துண்டா
நதிகளை எவரேனும்?

வேற்று நாட்டுப் பக்கம்
வேலி தாண்டிய தென்று
காற்றினை யாரேனும்
கைது செய்ததுண்டா?

மேலூரில் பொழிந்துவிட்டு
கீழூரில் பெய்யவரும்
சூல்மேகத் தைஎல்லைச்
சுவர்கள் தடுத்ததுண்டா?

எல்லைப் புறமரங்கள்
அண்டைநாட்டு நீர்க்குடித்தால்
வில்லங்கம் செய்ததென்று
வேர்களையா வெட்டுகிறோம்?

என்திக்கு இதுவென்று
எண்ணுவதேன் என்தோழா?
என்இலக்கு பொதுவென்று
எழுச்சிகொள், எழுந்துநில்!

- தாராபாரதி

### பாடல் விளக்கம்

நாடுவிட்டு நாடு செல்லும் நதிகளை எவரேனும் நாடு கடத்தியதுண்டா? வேற்று நாட்டுப்பக்கம் வேலி தாண்டி செல்கிறது என்று காற்றினைக் கைது செய்ததுண்டா? மேலூரில் மழையைப் பொழிந்துவிட்டு கீழூரில் பெய்ய வரும் நீர் கொண்ட மேகத்தை எல்லைச்சுவர்கள் தடுத்ததுண்டா? எல்லையில் நிற்கும் மரங்கள் அண்டை நாட்டின் நீரைக் குடிப்பதால் அவற்றின் வேர்களை வெட்ட முடியுமா? என் எல்லை இதுவென்று ஏன் எண்ணுகிறாய் தோழா? அனைவரும் பொது என்ற இலக்கோடு எழுச்சிகொள்! எழுந்து நில்!

## நூலைப் பற்றி

'கவிஞாயிறு தாராபாரதி கவிதைகள்' என்னும் கவிதைத்தொகுப்பில் 'பூமியின் முற்றம் முழுவதும் சுற்றம்' என்னும் தலைப்பில் இக்கவிதை இடம்பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் தாராபாரதி. இவரது இயற்பெயர் இராதாகிருஷ்ணன். 'கவிஞாயிறு' என்னும் சிறப்புப்பெயரால் அழைக்கப்படுகிறார். 'புதிய விடியல்கள்', 'இது எங்கள் கிழக்கு', 'விரல்நுனி வெளிச்சங்கள்', 'பூமியைத் திறக்கும் பொன்சாவி', 'இன்னொரு சிகரம்' போன்ற நூல்களை எழுதியுள்ளார்.

## பொருள் அறிவோம்

1. பற்று - பிடிப்பு
2. எண்ணி - நினைத்து
3. எழுச்சி - புறப்பாடு

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வேற்று நாட்டுப் பக்கம் வேலி தாண்டியதென்று தாராபாரதி எதனைக் குறிப்பிடுகிறார்?

   அ) நதி ஆ) மேகம் இ) காற்று ஈ) வேர்

2. தாராபாரதி எத்தகைய சிறப்புப்பெயரால் அழைக்கப்படுகிறார்?

   அ) கலைஞாயிறு ஆ) கவிஞாயிறு இ) மொழிஞாயிறு ஈ) ஒளிஞாயிறு

3. பாடப்பகுதியில் உள்ள கவிதை இடம்பெற்றுள்ள நூல் எது?

   அ) இது எங்கள் கிழக்கு ஆ) புதிய விடியல்கள்

   இ) விரல்நுனி வெளிச்சங்கள் ஈ) கவிஞாயிறு தாராபாரதி கவிதைகள்

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தாராபாரதி எழுதிய நூல்களை எழுதுக.
2. 'பூமியின் முற்றம் முழுவதும் சுற்றம்' என்னும் கவிதையின் வழியே எந்தெந்த இயற்கைப் பொருள்கள் சான்றாகக் காட்டப்படுகின்றன?
3. தாராபாரதி – சிறுகுறிப்பு வரைக.

### இ) பின்வரும் வினாவிற்கு விரிவான விடை எழுதுக.

1. தாராபாரதியின் கவிதை வழியே அறியலாகும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

## 6.3 படிப்போம்

### ஆதிச்சநல்லூர்

வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் வாழ்க்கைமுறையை அறிவதற்கு அகழாய்வுகள் பெரிதும் உதவுகின்றன. தமிழ்நாட்டின் ஆதிச்சநல்லூரில் நடைபெற்ற அகழாய்வில் கிடைத்த பொருள்கள் தமிழக வரலாற்றை அறிவதில் இன்றியமையாப் பங்காற்றுகின்றன.

தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றங்கரையில் ஆதிச்சநல்லூர் புதைமேடு அமைந்துள்ளது. இப்புதைமேட்டை முதலில் உலகறியச் செய்தவர் பெர்லினைச் சேர்ந்த எஃப். ஜகோர். இவர் ஸ்டூவர்ட்டுடன் இணைந்து இந்த அகழாய்வில் ஈடுபட்டார். பின்னர் அலெக்சாண்டர் ரியா, அங்கே பெரிய அளவிலான அகழாய்வுகளை மேற்கொண்டார். இந்த அகழாய்வுகளில் பல மட்பாண்டங்கள், பானை ஓடுகள், இரும்பினாலான பொருள்கள், எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன.

### முதுமக்கள் தாழி

பானைகளில் மடக்கி வைக்கப்பட்ட நிலையில் புதைக்கப்பட்ட பல மனிதர்களின் முழு எலும்புக்கூடுகள் பல ஆதிச்சநல்லூரில் நடைபெற்ற ஆய்வில் கண்டறியப்பட்டன. இது இறந்தவர்களைப் புதைக்கும் இடமாக இருந்துள்ளதை அறிய முடிகிறது.

இங்கு 178 முதுமக்கள் தாழிகள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் முதுமக்கள் தாழி உள்ள தொல்லியல் தலங்களில் மிகவும் பாதுகாக்கப்பட்ட நிலையில் இருப்பது ஆதிச்சநல்லூர்தான். அந்தப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தங்கள் வாழ்க்கை சார்ந்த பல அடையாளங்களை முதுமக்கள் தாழிகளுக்குள் விட்டுச்சென்றுள்ளனர்.



ஆதிச்சநல்லூர் புதைமேட்டில் இறந்தவர்களைப் புதைப்பது இரண்டு விதமாக நடந்திருக்கிறது. ஒன்று, இறந்தவர்களின் உடலை முழுமையாகப் புதைப்பது. இரண்டாவது, இறந்தவர்களை வேறு இடத்தில் புதைத்து, சில காலத்துக்குப் பிறகு அந்த உடலில் எஞ்சிய எலும்புகளைச் சேகரித்து மீண்டும் புதைப்பது.

மேலும், தாழிகளுக்குள் கண்டெடுக்கப்பட்ட அரிசி, நெல், பாசிப்பயறு போன்ற தானியங்களைக் கொண்டு பண்டைய கால வேளாண் சமூகத்தை அறிய முடிகிறது. தாழிகளுக்குள் குவார்ட்ஸ் மணிகள், அடுப்பு போன்ற பொருள்களும் கிடைத்துள்ளன. இவை ஆதிச்சநல்லூரில் சங்ககால மக்கள் வாழ்ந்ததையும் கடல்சார் வணிகம் நடந்ததையும் உறுதிப்படுத்துகின்றன.

## முதுமக்கள் தாழி ஓவியங்கள்




இங்கே கிடைத்த ஒரு பானையின் உட்புறத்தில் நடனமாடும் பெண்ணின் உருவம் வரையப்பட்டுள்ளது. அதன் பக்கத்தில் கரும்பு போன்ற தாவரம், கொக்கு, முதலை போன்றவை வரையப்பட்டுள்ளன. வரலாற்றுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த கலை வடிவங்கள் வெகு அரிதாகவே கிடைத்துள்ள நிலையில், மட்பாண்டங்களைச் சுடுவதற்கு முன்பாகவே மிக நுண்ணிய தூரிகையால் அவற்றில் வரையப்பட்டுள்ள சில வடிவங்கள் நமக்குப் பல அரிய தரவுகளை அளிக்கின்றன.

## கருவிகள்

ஆதிச்சநல்லூரில் பெரும் எண்ணிக்கையில் இரும்புப்பொருள்களும் குறைந்த எண்ணிக்கையில் தாமிரப்பொருள்களும் கிடைத்திருக்கின்றன. இரும்புப் பொருள்களைப் பொறுத்தவரை உழுவதற்கான கருவிகள், ஆயுதங்கள் போன்றவை கிடைத்துள்ளன.

## நாணயங்கள்



ஆதிச்சநல்லூரில் நடந்த அகழாய்வுப் பணியில் முதல்முறையாக சங்ககாலத்தைச் சேர்ந்த பாண்டிய மன்னர்களின் இரண்டு நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில், கடல் ஆமைகளின் உருவமும், மரம், யானை, மீன் ஆகியவற்றின் உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

ஆதிச்சநல்லூர் புதைமேட்டில் கிடைக்கும் சான்றுகள் வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் வாழ்க்கைமுறை, கலை, பண்பாடு, பழக்கவழக்கம் போன்றவற்றை அறிய உதவும் கருவூலமாக உள்ளன. இங்கே கிடைத்த சான்றுகள் சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் வாழ்க்கைமுறையை அறிவதற்கு உதவுவது எது?

   அ) தொல்லியல் ஆ) அகழாய்வு இ) ஆராய்ச்சி ஈ) நுட்பவியல்

2. ஆதிச்சநல்லூரில் எந்த மன்னருடைய நாணயங்கள் கிடைத்துள்ளன?

   அ) பாண்டியர் ஆ) சேரர் இ) சோழர் ஈ) பல்லவர்

3. எந்த ஆற்றங்கரையில் ஆதிச்சநல்லூர் அமைந்துள்ளது?

   அ) காவிரி ஆ) தாமிரபரணி

   இ) தென்பெண்ணை ஈ) திருமணிமுத்தாறு

4. ஆதிச்சநல்லூரில் தோண்டி எடுக்கப்பட்ட முதுக்கள் தாழிகளின் எண்ணிக்கை?

   அ) 175 ஆ) 178 இ) 176 ஈ) 179

### ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக.

1. திருமணிமுத்தாறின் கரையில் ஆதிச்சநல்லூர் அமைந்துள்ளது. (சரி/தவறு)
2. ஆதிச்சநல்லூரில் நடைபெற்ற அகழாய்வில் சோழர் கால நாணயங்கள் கிடைத்துள்ளன. (சரி/தவறு)
3. இறந்தவர்களின் உடல்களைப் புதைப்பதற்கு முதுமக்கள் தாழிகளைப் பயன்படுத்தினர். (சரி/தவறு)
4. ஆதிச்சநல்லூர் புதைமேட்டை முதலில் உலகறியச் செய்தவர் பெர்லினைச் சேர்ந்த எஃப். ஜகோர். (சரி/தவறு)
5. ஆதிச்சநல்லூரில் கிடைத்துள்ள ஒரு பானையின் உட்புறத்தில் நடனமாடும் ஆணின் உருவம் வரையப்பட்டுள்ளது. (சரி/தவறு)

### இ) பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடை எழுதுக.

1. முதுமக்கள் தாழிகள் பற்றி எழுதுக.
2. ஆதிச்சநல்லூரில் என்னென்ன கிடைத்துள்ளன?
3. ஆதிச்சநல்லூரில் கிடைத்த நாணயங்கள் பற்றி விளக்குக?
4. ஆதிச்சநல்லூர் எங்கு அமைந்துள்ளது?
5. ஆதிச்சநல்லூர் அகழாய்வுத் தளத்தை முதலில் உலகறியச் செய்தவர் யார்?

### ஈ) பின்வரும் வினாவிற்கு விரிவான விடை எழுதுக.

1. ஆதிச்சநல்லூரில் நடைபெற்ற அகழாய்வு குறித்து விரிவாக எழுதுக.

## 6.4 தெரிந்துகொள்வோம்

### வல்லினம் மிகா இடங்கள்

**வாளை கொண்டுவந்தான்**

என்ற தொடரில் வல்லினம் மிகாமல் **வாளைமீனைக் கொண்டுவந்தான்** என்று பொருள் தருகிறது.

**வாளைக் கொண்டுவந்தான்**

என்ற தொடரில் வல்லினம் மிகுந்து **வெட்டும் வாளைக் கொண்டுவந்தான்** என்று பொருள் தருகிறது.

மேற்கண்ட தொடர்களிலிருந்து வல்லினம் மிகுந்தால் ஒரு பொருளும் வல்லினம் மிகாமல் இருந்தால் வேறொரு பொருளும் வருவதை அறிந்துகொள்ள முடிகிறது. எனவே, மொழியைப் பிழையின்றி எழுத வல்லினம் மிகும்/மிகா இடங்களை அறிந்துகொள்வது மிகவும் இன்றியமையாதது.

**சான்று**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | குதிரை | + | கனைத்தது | = | குதிரை கனைத்தது |
| 2. | பள்ளி | + | சென்றாள் | = | பள்ளி சென்றாள் |
| 3. | எவ்வளவு | + | தந்தான் | = | எவ்வளவு தந்தான் |
| 4. | நல்ல | + | பையன் | = | நல்ல பையன் |
| 5. | ஆறு | + | பேர் | = | ஆறு பேர் |
| 6. | வளர்க | + | தமிழ் | = | வளர்க தமிழ் |
| 7. | புறா | + | பறந்தது | = | புறா பறந்தது |

மேற்கண்ட சான்றுகளில் **குதிரை, பள்ளி, எவ்வளவு, நல்ல** போன்ற சொற்கள் நிலைமொழி. **கனைத்தது, சென்றாள், தந்தான், பையன்** போன்ற சொற்கள் வருமொழி ஆகும். நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது வல்லினம் மிகவில்லை.

| வ. எண் | வல்லினம் மிகா இடங்கள் | சான்றுகள் |
|---|---|---|
| 1 | அது, இது, அவை, இவை என்னும் சுட்டுப்பெயர்களுக்குப் பின் மிகாது | அது பெரிது<br>இது சிறந்தது<br>அவை காகங்கள்<br>இவை தாளங்கள் |
| 2 | எது, யாது, எவை என்ற வினாப்பெயர்களின் பின் மிகாது. | எது சிறந்தது?<br>யாது செய்வேன்?<br>எவை தீயவை? |
| 3 | இரண்டாம் வேற்றுமைத்தொகை, நான்காம் வேற்றுமைத்தொகையில் மிகாது. | தண்ணீர் தந்தான்<br>சென்னை சென்றான் |
| 4 | எட்டு, பத்து என்னும் எண்ணுப்பெயர்கள் தவிர பிற எண்ணுப்பெயர்களின் பின் மிகாது | ஆறு பேர்<br>மூன்று தமிழ்<br>ஏழு கடல் |
| 5 | வியங்கோள் வினைமுற்றுத்தொடரில் மிகாது. | வளர்க தமிழ்<br>வாழ்க பல்லாண்டு |
| 6 | வினைத்தொகையில் மிகாது | திருவளர்செல்வன்<br>ஊறுகாய் |
| 7 | உம்மைத்தொகையில் மிகாது | இரவுபகல்<br>வெற்றிலைபாக்கு |
| 8 | எழுவாய்த் தொடரில் மிகாது | மலர் பூத்தது<br>புறா பறந்தது |
| 9 | சிறிய, பெரிய என்னும் சொற்களின் பின் மிகாது. | பெரிய காடு<br>சிறிய பாதை |
| 10 | அடுக்குத் தொடர், இரட்டைக்கிளவி ஆகியவற்றில் மிகாது. | பந்து பந்து<br>கலகல |

## பயிற்சிகள்

### அ) பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையை எழுதுக.

1. வல்லினம் வருமா?

அ) தோழி - கூற்று　　ஆ) எட்டு - பேர்

இ) சிறிய - பறவை　　ஈ) பழகு - தமிழ்

2. வல்லினம் இடலாமா?

அ) பேச்சு_தமிழ்　　ஆ) தமிழ்_புத்தகம்

இ) திருநிறை_செல்வன்　　ஈ) திருவளர்_செல்வி

3. எது சரி? எது தவறு? காரணம் கூறுக.

அ) அண்ணாமலைப் பல்கலைக் கழகம்　　ஆ) சென்னைப் பல்கலைக்கழகம்

இ) எடுத்துக்காட்டுகள்　　ஈ) சான்றோர் பேரவை

## ஆ) கீழ்க்காணும் தொடர்களில் வல்லினம் மிகும், மிகா இடங்களைக் கண்டறிந்து அதற்கான இலக்கணம் கூறுக.

அ) மாணாக்கருக்கு கொடுக்க வேண்டும்

ஆ) பழங்களை பறிக்காதீர்கள்

இ) சுடுச்சோறு எங்கு கிடைக்கும்?

ஈ) அரசு ஆணை பிறப்பித்தது

உ) தாய்த்தந்தை

ஊ) வேலையில்லா பட்டதாரி

எ) கொடுக்கொடு

## தகவல் துளி



பண்டைய காலத்தில் தமிழகத்தில் பல பெருவழிகள் இருந்துள்ளன. இவை இன்றைய தேசிய நெடுஞ்சாலைகள் போன்று பெருநகரங்களை இணைக்கும் வழிகளாக இருந்தன. எனவே இவை, பெருவழிகள் என அழைக்கப்படுகின்றன. இவற்றுள் மிகப் பெரியதும் பழமையானதுமான பெருவழி கொங்குப்பெருவழியாகும். இந்த நெடுஞ்சாலையானது கொங்குப்பகுதியில் அதிக தூரம் செல்வதால் கொங்குப்பெருவழி என அழைக்கப்படுகிறது. இந்தப் பெருவழியில் பல வணிக மையங்கள் இருந்துள்ளன. அங்கே வெளிநாட்டு வணிகர்கள் பலரும் வந்து வணிகம் செய்துள்ளனர் எனக் கல்வெட்டுச் செய்தி கூறுகின்றது. இப்பெருவழி அரபிக்கடல் பகுதியில் உள்ள பாலக்காட்டையும் வங்காள விரிகுடா பகுதியில் உள்ள பூம்புகாரையும் இணைக்கும் மிக நீண்ட பெருவழி. அதாவது, சேரநாட்டையும் சோழநாட்டையும் இணைக்கும் பெருவழியாகும். இவ்வழியை ஆதித்தசோழன் புனரமைத்ததால் இது இராஜகேசரி பெருவழி எனவும் அழைக்கப்படுகிறது.

## 6.5 கருத்து விளக்கப்படம்

# தமிழி (தமிழ் பிராமி)

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை குறியீடுகளுக்கு அடுத்து காணக்கிடைக்கின்ற வரிவடிவம் தமிழ் பிராமி எழுத்து வடிவமாகும். இவ்வெழுத்தைத் தமிழி என்றும் பண்டைத் தமிழ் எழுத்துகள் என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். 'பிராமி' எழுத்து வடிவத்திற்குக் காலத்தால் முற்பட்டது 'தமிழி' எழுத்து வடிவமாகும். தமிழகத்தில் வரலாற்றுத் தொடக்க காலத்தைச் சார்ந்த இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகளில் தமிழி (தமிழ் பிராமி) எழுத்துப் பொறிப்பு பானை ஓடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. தமிழி எழுத்துகள் பொறிக்கப்பட்ட மோதிரங்கள் முந்தைய அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்டன. தமிழகத்தில் 32க்கும் மேற்பட்ட ஊர்களில் சங்ககாலத்தைச் சார்ந்த தமிழ் பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட 110 கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. இவை பத்மஸ்ரீ ஐராவதம் மகாதேவன் அவர்களால் படித்தறியப்பட்டு நூலாக வெளியிடப்பட்டுள்ளன. கீழடி அகழாய்வில் தமிழி (தமிழ் பிராமி) எழுத்துப் பொறிக்கப்பட்ட 56 பானை ஓடுகள் தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறை மேற்கொண்ட அகழாய்வில் மட்டும் சேகரிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் குவிரன் ஆத[ன்], ஆதன் போன்ற ஆட்பெயர்களும், முழுமைபெறாத சில எழுத்துகளுடன் கூடிய உடைந்த பானை ஓடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. இதில் வரும் 'ஆதன்" என்ற பெயர் 'அதன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காலத்தால் முந்தைய தமிழியில் (தமிழ் பிராமியில்) உயிர்குறில் வடிவத்திலிருந்து உயில்நெடிலை வேறுபடுத்திக் காட்ட ஒலிக்குறியீடு இடும் வழக்கம் இல்லை என்பதை கா. இராஜன் தமது 'Early Historic Writing System : A Journey from Graffiti to Brahmi' என்ற நூலில் தெளிவுபடுத்தியுள்ளார். இந்நிலை உயிர் எழுத்துகளில் மட்டுமே காணப்படுகிறது. எனவே, கீழடி தமிழி (தமிழ் பிராமி) எழுத்து பொறிப்புகள் காலத்தால் முந்தையவை என்பதை நமக்கு உணர்த்துகின்றன.

## வினாக்கள்

1. தமிழ்நாட்டில் குறியீடுகளுக்கு அடுத்துக் கிடைத்த வரிவடிவம் எது?
2. தமிழ் பிராமி எழுத்துகளை எவ்வாறு அழைத்தனர்?
3. தமிழ் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட 110 கல்வெட்டுகளைப் படித்து நூலாக வெளியிட்டவர் யார்?
4. தமிழி எழுத்துப் பொறிக்கப்பட்ட 56 பானை ஓடுகள் எந்த அகழாய்வில் கிடைத்தன?
5. தமிழி எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளில் காணப்பட்ட ஆட்பெயர்களைக் கூறுக.

## 6.6 கேட்டல் கருத்தறிதல்

### கரிக்கையூர் பாறை ஓவியம்

பாறை ஓவியங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர்களால் செதுக்கப்பட்டவை. தாங்கள் வாழ்ந்த இடங்களில் உள்ள பாறைகளிலும் குகைகளிலும் ஓவியங்களை வரைந்து வைத்துள்ளனர். உலகின் பல நாடுகளில் இத்தகைய பாறை ஓவியங்கள் கிடைத்துள்ளன. இந்தியாவில் கிடைத்துள்ள பாறை ஓவியங்களுள் அளவில் மிகவும் பெரியது கரிக்கையூரில் கிடைத்த பாறை ஓவியமே.

கரிக்கையூர் நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமம். இவ்வூரிலிருந்து சுமார் 3.5 கி.மீ தொலைவில் 'பொறிவரை' எனும் பாறை ஒதுக்கு உள்ளது. இப்பாறை ஒதுக்கு சுமார் 500 அடி நீளமும் சுமார் 150 அடி உயரமும் கொண்டுள்ளது. இங்கே காணப்படும் ஓவியங்கள் தொல் பழங்கால வேட்டைச் சமூகத்தைச் சார்ந்த கலைஞர்களால் உருவாக்கப்பட்டவை.

இங்கு வாழ்ந்த மனிதர்கள் வேட்டைச் சமூகம், கால்நடைச் சமூகம், வேளாண்மைச் சமூகம் என ஐயாயிரம் வருடச் சமூக வாழ்க்கையை ஓவியமாகத் தீட்டியுள்ளனர். இங்கே சில சென்டி மீட்டர் அளவில் உள்ள சிறுவடிவ ஓவியங்கள் முதல் பெரிய அளவிலான ஓவியங்கள் வரை ஒரே இடத்தில் காணக்கிடைக்கின்றன. இங்குள்ள ஓவியங்கள் வெவ்வேறு ஓவியர்களால் பல்வேறு காலகட்டங்களில் வரையப்பட்டவை ஆகும். இவற்றுள் தொன்மையான ஓவியங்கள் புதிய கற்காலத்தில் வரையப்பட்டிருக்கக் கூடும். இவ்வோவியங்கள் பெரும்பாலும் அடர் சிவப்பு வண்ணத்தில் காணப்படுகின்றன. வரலாற்றுக்கு முந்தைய காலகட்டத்தைச் சேர்ந்த இக்கலை வடிவங்கள் அக்கால சமூக நிகழ்வுகள், பொருளாதாரம், கருத்தியல், அழகியல் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த தகவல்களை நமக்குத் தெரிவிக்கின்றன. பல ஆயிரம் ஆண்டுகளாக மனிதர்களின் வரலாற்றைச் சுமந்து நிற்கும் கரிக்கையூர் பாறை ஓவியத்தை ஓர் அதிசயம் என்றே கூறலாம்.

### வினாக்கள்

1. பாறை ஓவியங்கள் யாரால் செதுக்கப்பட்டவை?
2. கரிக்கையூர் ஓவியங்கள் எந்தக் காலகட்டத்தைச் சேர்ந்தவை?
3. இந்தியாவில் கிடைத்த பாறை ஓவியங்களில் அளவில் மிகப் பெரியது எது?
4. கரிக்கையூர் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?
5. கரிக்கையூர் பாறை ஓவியங்களின் அளவு குறித்து எழுதுக.

## 6.7 மொழிபெயர்ப்போம்

மனிதன் விட்டுச்சென்ற தொல் எச்சங்களை ஆராய்ந்து பண்பாட்டை அறிந்துகொள்வது தொல்லியல் எனப்படும். இதில் பழங்காலத்தைப் பற்றி அறிய உதவும் கருவிகள், கல்வெட்டுகள், பொருள்கள் பற்றிய ஆய்வு செய்வர். அகழாய்வுகள் மூலமாகத்தான் தொல்லியல் கண்டுபிடிப்புகள் கிடைக்கின்றன. அகழாய்வுகளை நிலத்திலும் குகைகளிலும் நீருக்கடியிலும் செய்யலாம்.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________


## 6.8 அறிந்துகொள்வோம்

1. அகழாய்வு - Excavation
2. ஆற்றங்கரை - River Bank
3. புதைமேடு - Burial Mound
4. எலும்புக்கூடுகள் - Skeletons
5. கடல் ஆமை - Sea Turtle
6. கடல் வணிகம் - Maritime Trade
7. நடனமாடும் பெண் - Dancing Woman
8. நாணயங்கள் - Coins
9. தரவுகள் - Data
10. தாமிரப் பொருள்கள் - Copper Metals
11. ஆயுதங்கள் - Weapons
12. முதுமக்கள் தாழி - Burial Urns
13. இரும்பு - Iron
14. தாமிரம் - Copper
15. அருங்காட்சியகம் - Museum

## 6.9 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் வட்ட வரைபடத்தைப் புரிந்துகொண்டு, வினாக்களுக்கு விடை எழுதுக.**

அருங்காட்சியம் ஒன்றில் ஒரு நாள் வருகை தந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை (விழுக்காடு)




### வினாக்கள்

1. உயிரியல் காட்சியகத்தைப் பார்வையிட்டவர்களின் விழுக்காட்டைக் குறிப்பிடுக.
2. மிகக் குறைவான அளவில் பார்வையிடப்பட்ட காட்சியகம் எது?
3. கைவினைப்பொருள் காட்சியகத்தைவிடப் பழங்காலப்பொருள் காட்சியகத்திற்குப் பார்வையாளர்களின் எண்ணிக்கை எத்தனை விழுக்காடு அதிகரித்துள்ளது?
4. மிகவும் அதிகமாகப் பார்க்கப்பட்ட காட்சியகம் எது?
5. அதிகமாகப் பார்க்கப்பட்ட காட்சியகத்திற்கும் மிகக் குறைவாகப் பார்க்கப்பட்ட காட்சியகத்திற்கும் எத்தனை விழுக்காடு வேறுபாடு உள்ளது?

## 6.10 செயல்திட்டம்

பழங்கால நாணயங்கள் பற்றிய செய்திகளை இணையத்திலிருந்து தேடித் தொகுத்து வருக.

## பாடம் 7

### 7.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

கிராமங்களுக்கு விடுமுறை நாள்களில் நீங்கள் சென்றுவந்த அனுபவம் பற்றி வகுப்பு நண்பர்களுடனும் வகுப்பு ஆசிரியருடனும் கலந்துரையாடுக.

## 7.2 படிப்போம்

### முத்தொள்ளாயிரம்

இயற்கைதான் பூமியின் ஆடை. உயிர்களுக்குக் கிடைத்த சிறந்த கொடை. சங்க காலம்முதல் தற்காலம்வரை இயற்கையைப் பாடாத கவிஞர்களே இல்லை எனலாம். புலவர் ஒருவர் சேரநாட்டின் இயற்கை வளத்தை முத்தொள்ளாயிரம் பாடல்வழி வெளிப்படுத்தும் பாங்கு அழகானது.

### சேரநாட்டின் இயற்கை வளம்

அள்ளல் பழனத்து அரக்கு ஆம்பல் வாய் அவிழ
வெள்ளம் தீப்பட்டது என வெரீஇ, - புள்ளினம் தம்
கைச்சிறகால் பார்ப்பு ஒடுக்கும் கௌவை உடைத்து அரோ
நச்சிலை வேல் கோக்கோதை நாடு.

## பாடலின் பொருள்



சேரநாடு சேறு நிறைந்த வயல்களை உடையது. அவ்வயல்களில் அரக்கு நிறம் கொண்ட செவ்வல்லி மலர்கள் பூத்துள்ளன. அவற்றைக் கண்ட நீர்ப்பறவைகள் வெள்ளத்தில் தீப்பிடித்துவிட்டது என்று அஞ்சின. தம் குஞ்சுகளைத் தீயிலிருந்து காப்பாற்ற நினைத்துத் தம் சிறகுகளால் படபடவென அடித்து அவற்றை அணைத்துக் கொண்டன. இந்த ஆரவாரம் தவிர, மக்கள் துயர் மிகுதியால் செய்யும் ஆரவாரத்தை, சேர நாட்டில் காண்பது அரிது. ஏனென்றால் சேர மன்னன் கையிலேந்திய வேலில் நஞ்சு பூசப்பட்டிருக்கும். இதனால் பகைவர் அவன்பால் பேரச்சம் கொண்டுள்ளனர் என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறது இப்பாடல்.

## நூலைப் பற்றி

மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியரின் புகழைப் பாடுவது முத்தொள்ளாயிரம் ஆகும். இது வெண்பாக்களால் ஆனது. இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. 'புறத்திரட்டு' என்னும் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்ட 108 செய்யுள்கள் இன்று முத்தொள்ளாயிரம் என்று குறிப்பிடப்படுகின்றது. இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. அவர் கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்று தி.வை. சதாசிவ பண்டாரத்தார் கூறுகிறார்.

## பொருள் அறிவோம்

1. அள்ளல் - சேறு
2. பழனம் - வயல்
3. வாய்அவிழ - விரிய
4. வெரீஇ - அஞ்சி
5. புள்ளினம் - பறவை இனம்
6. பார்ப்பு - குஞ்சு
7. கௌவை - ஒலி
8. கோதை நாடு - சேரநாடு

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பழனம் என்பதன் பொருள்

அ) சேறு  ஆ) வயல்  இ) ஒலி  ஈ) பறவை

2. கோதை நாடு என்பது எந்த நாட்டைக் குறிக்கும்?

அ) பாண்டிய நாடு  ஆ) தொண்டை நாடு  இ) சேர நாடு  ஈ) சோழநாடு

3. முத்தொள்ளாயிரம் எந்தப் பாவால் எழுதப்பட்டது?

அ) ஆசிரியப்பா  ஆ) வெண்பா  இ) கலிப்பா  ஈ) வஞ்சிப்பா

4. முத்தொள்ளாயிரத்தில் தற்போது கிடைத்துள்ள பாடல்களின் எண்ணிக்கை

அ) 900  ஆ) 2700  இ) 108  ஈ) 56

### ஆ) பின்வரும் வினாக்களுகு விடை எழுதுக.

1. பறவைகள் ஏன் அஞ்சின?
2. பகைவர் சேர மன்னனைக் கண்டு அச்சம்கொள்ளக் காரணம் என்ன?
3. மூவேந்தர் என்று அழைக்கப்படுபவர் யாவர்?

### இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. சேர நாட்டின் வளம் குறித்து முத்தொள்ளாயிரம் குறிப்பிடுவதை எழுதுக.

## 7.3 படிப்போம்

### கடல்சார் வாழ்க்கை

கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல் நிலமாகும். நீரின் அளவிற்கேற்ப வளரும் தன்மை கொண்டது நெய்தல் மலர். பண்டைத் தமிழர், இம்மலரின் பெயராலேயே கடல் சார்ந்த பகுதிக்கு நெய்தல் எனப் பெயரிட்டனர். இந்நிலத்தில் வாழும் மக்கள் 'பரதவர்' என்று அழைக்கப்பட்டனர். நெய்தல் நில மக்களின் வாழ்வாதாரமாகக் கடல் இருந்தது.



### வாழிடம்

நெய்தல் நிலக் குடிசைகளின் மேற்பகுதி புல், முள்ளிச்செடி, தாழை ஆகியவற்றால் அமைக்கப்பட்டிருக்கும். குடிசைகளின் முன்பகுதிகளில் ஓலைகளுடைய பனைமரங்கள் காணப்படும். இப்பனை மரங்களிலிருந்து கிடைக்கும் பொருள்களைக் கொண்டு வீட்டிற்கு வேலி அமைத்தனர்.

### உணவு மற்றும் உடை

நெய்தல் நில மக்களுக்கு அதிகளவு உணவாகப் பயன்படுவது மீன். உப்புக்கு மாற்றாகப் பெற்ற நெல்லைக் கொண்டு அரிசியாக்கிச் சமைத்தனர். சமைத்த சோற்றின் மீது அயிரை மீன் புளிக்குழம்பும் கருவாட்டுப் பொரியலும் சேர்த்து உண்டனர். நெய்தல் நில மகளிர் அழகிய பூக்களுடன் கூடிய, பசுமையான தழை உடையினை உடுத்திக்கொண்டு கானற்பூக்களை உடைய கடற்கரைச் சோலைக்கு அடிக்கடி விளையாடச் செல்வர்.

## தொழில்

நெய்தல் நிலத்தினரின் முதன்மைத் தொழில் மீன் பிடித்தல் ஆகும். பிடித்த மீன்களை மணற்பரப்பில் காய வைத்து விற்றனர். தாங்கள் பிடித்த மீன்களை மற்றவரிடம் கொடுத்து அவரிடமுள்ள வேறு பொருளைத் தம் தேவைக்கு ஏற்பப் பெற்றுக்கொண்டனர். கடல் நீரைத் தேக்கி உப்புத் தயாரித்தனர். கடலிலிருந்து கிடைத்த முத்து, பவளம், சங்கு முதலிய பொருள்களைக் கொண்டு அழகிய வேலைப்பாட்டுடன் கூடிய அணிகலன்களைச் செய்தனர். பழந்தமிழர் கடல் வணிகத்தில் சிறந்து விளங்கினர்.

## கலை மற்றும் பண்பாடு

பரதவப் பெண்கள் மணமிக்க நெய்தல் மலர்களைக் கொண்டு தங்கள் இல்லங்களை அழகுபடுத்தினர். இளமகளிர் கீழைக்காற்று குவித்த மணலிலே, ஆயத்தாருடன் கூடிக் குரவையாடுவர். மாலைநேரத்தில் தம் இல்லங்களில் மீன் கொழுப்பினைச் சேர்த்து உருக்கிய நெய்யைக் கொண்டு விளக்கேற்றினர். கடற்கரையில் எல்லையில்லாத பொருள்கள் குவிந்துகிடக்கும். நெய்தல்நில மக்கள் அவற்றை வந்த விருந்தினர்க்கெல்லாம் வாரி வழங்குவர். இத்தகைய சிறப்பினை உடையது நெய்தல் நிலச் சிற்றூர்.

## பொழுதுபோக்கு

நெய்தல்நிலச் சிறுமியர் மணலில் புன்னைக்காயை வைத்து விளையாடிக் கொண்டிருந்தனர். அதில் ஒரு சிறுமி வெள்ளிய மணலில் விளையாட்டாகப் புன்னைக் காயை அழுத்திப் புதைத்தாள். பின்னர் அது முளைக்க ஆரம்பித்தது. அச்செடிக்குப் பாலும் நெய்யும் ஊற்றி வளர்த்தாள். செடியும் மரமாக வளர்ந்தது. தலைவியும் வளர்ந்தாள். வளர்ந்த புன்னை மரத்தை நும்தங்கை என அறிமுகப்படுத்தினாள் தாய். இதன் மூலம் நெய்தல்நிலத்தினர் தாவரங்களுடனும் நல்லுறவு கொண்டிருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

நெய்தல்நில மக்களுக்குக் கடல் முக்கிய ஆதாரமாக இருந்துள்ளது. கடல்சார்ந்த வாழ்க்கையோடு இரண்டறக் கலந்து இயற்கையோடு இயைந்து வாழ்ந்துள்ளனர். தாவரங்களைத் தங்கள் குடும்ப உறுப்பினராகப் போற்றியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

## பொருள் அறிவோம்

1. ஓட்டுதல் - விரட்டுதல்
2. கீழைக்காற்று – கிழக்கிலிருந்து வீசும் காற்று
3. குரவை – பெண்கள் வட்டமாக நின்று விளையாடும் விளையாட்டு

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கடலும் கடல் சார்ந்த பகுதியும் ____________.

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

2. கிழக்கிலிருந்து வீசும் காற்றின் பெயர் ____________.

அ) கீழைக் காற்று ஆ) வாடைக் காற்று

இ) தென்றல் காற்று ஈ) மேலைக் காற்று

3. சிறுமி ____________ செடிக்குப் பாலும் நெய்யும் ஊற்றி வளர்த்தாள்.

அ) அவரை ஆ) புன்னை இ) துளசி ஈ) பனை

4. நெய்தல்நில மக்கள் ____________ என்று அழைக்கப்பட்டனர்.

அ) உழவர் ஆ) ஆயர் இ) பரதவர் ஈ) எயினர்

5. தாய் புன்னை மரத்தை ____________ என்று அறிமுகப்படுத்தினாள்.

அ) தமக்கை ஆ) தங்கை இ) தம்பி ஈ) தமையன்

### ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக.

1. கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல் ஆகும். (சரி/ தவறு)
2. நெய்தல் நிலத்து மக்களின் முதன்மைத் தொழில் வேட்டை ஆடுவது. (சரி/ தவறு)
3. நெய்தல்நில மக்கள் பரதவர் என்று அழைக்கப்பட்டனர். (சரி/ தவறு)
4. புன்னை மரத்தை உன் தம்பி என்று தாய் கூறினார். (சரி/ தவறு)
5. நெய்தல்நில மக்களுக்குக் கடல் முக்கிய ஆதாரமாக விளங்கியது. (சரி/ தவறு)

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. நெய்தல்நிலப் பகுதி எது?
2. நெய்தல்நிலப் பெண்களின் விளையாட்டுகள் இரண்டின் பெயர்களை எழுதுக.
3. நெய்தல்நில மக்களின் உணவு, உடை பற்றி எழுதுக.
4. நெய்தல்நில மக்களின் வாழ்விடம் பற்றி எழுதுக.
5. நெய்தல்நில மக்களின் தொழில் பற்றி எழுதுக.

### ஈ) பின்வரும் வினாவிற்கு விரிவான விடை எழுதுக.

1. நெய்தல்நில மக்களின் கடல்சார் வாழ்க்கை குறித்து எழுதுக.

## 7.4 தெரிந்துகொள்வோம்

### எழுத்துப்போலி

நலமா? நலனா?
நிலமா? நிலனா?

இவற்றில் எவை சரியானவை? இத்தகைய சொற்களை நீங்கள் அறிந்திருப்பீர்கள். 'நலம்', 'நிலம்' என வரவேண்டிய சொற்கள், 'நலன்', 'நிலன்' எனவும் வருகின்றன. இவ்வாறு ஒரு சொல்லில் வரவேண்டிய எழுத்துக்கு மாற்றாக வேறோர் எழுத்து மயங்கி வருவதனை 'எழுத்துப்போலி' என்கிறோம். இதனால், பொருள் மாற்றம் ஏற்படுவதில்லை. எழுத்துப்போலியில் மூவகை உண்டு. அவை முதற்போலி, இடைப்போலி, இறுதிப்போலி என்பனவாகும். மேலும் முற்றுப்போலி, முன்பின்னாகத் தொக்கபோலி என்பனவும் வழக்கில் உள்ளன.

### மொழி முதற்போலி

1. பசல் – பைசல்
2. மஞ்சு – மைஞ்சு
3. மயல் – மையல்

மேற்கண்ட எடுத்துக்காட்டில், **வண்ணமிட்ட எழுத்துகளில்** உள்ள சொற்கள் எழுத்துப்போலிகள். மொழிமுதல் எழுத்தான 'ப' எழுத்துக்கு, 'பை' என்பது போலி. இவ்வாறே, 'ம' எழுத்துக்கு 'மை' என்பது போலி. சகரம், ஞகரம், யகரம் ஆகிய எழுத்துகள் வரும்போது தான் இத்தகைய எழுத்துப்போலிகள் வருகின்றன.

### மொழி இடைப்போலி

1. அமச்சு – அமைச்சு
2. இலஞ்சி – இலைஞ்சி
3. அரயர் – அரையர்

மேற்கண்ட எடுத்துக்காட்டில், **வண்ணமிட்ட எழுத்துகளில்** உள்ள சொற்கள் எழுத்துப்போலிகள். இங்கு, எழுத்து மாற்றங்கள் மொழிக்கு இடையில் வந்துள்ளன.

### மொழி இறுதிப்போலி

1. அகம் – அகன்
2. பந்தல் – பந்தர்
3. சாம்பல் – சாம்பர்

மேற்கண்ட சொற்களில் **வண்ணமிட்ட எழுத்துகள்** கொண்டவை எழுத்துப்போலிகள். இவை சொல்லின் இறுதியில் வந்துள்ளன. இதனால், பொருள் மாற்றம் ஏற்படுவதில்லை

### முற்றுப்போலி

1. ஐந்து - அஞ்சு

மேற்கண்ட எடுத்துக்காட்டில், **வண்ணமிட்ட எழுத்துகளில்** உள்ள சொல் எழுத்துப்போலிகள்.

- ❖ மொழிமுதல் எழுத்தான 'ஐ' எழுத்துக்கு, 'அ' என்பது போலி.
- ❖ மொழி இடை எழுத்தான 'ந்' எழுத்துக்கு, 'ஞ்' என்பது போலி.
- ❖ மொழி இறுதி எழுத்தான 'து' எழுத்துக்கு, 'சு' என்பது போலி.

இவ்வாறு ஒரு மொழியில் உள்ள முதல், இடை, கடை ஆகிய மூன்று எழுத்துகளும் மாறுபட்டு வந்தும் பொருள் மாறாமல் இருந்தால் அது முற்றுப்போலி எனப்படும்.

### முன்பின்னாகத் தொக்கபோலி

1. கால்வாய் - வாய்க்கால்
2. தசை - சதை

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில் சொல்லின் பகுதிகள் முன்பின்னாக மாறியும் பொருள் மாறாமல் இருக்கின்றன. எனவே, இது முன்பின்னாகத் தொக்கபோலி என அழைக்கப்படுகிறது .

## பயிற்சிகள்

### அ) பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பின்வருவனவற்றுள் முதற்போலியைத் தேர்வு செய்க.

அ) அரையர் ஆ) அறன் இ) பைசல் ஈ) தசை

2. பின்வருவனவற்றுள் இடைப்போலியைத் தேர்வு செய்க.

அ) அரையர் ஆ) அறன் இ) கால்வாய் ஈ) ஐந்து

3. பின்வருவனவற்றுள் இறுதிப்போலியைத் தேர்வு செய்க.

அ) மையல் ஆ) அறன் இ) வஞ்சம் ஈ) தசை

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. போலி என்றால் என்ன?
2. போலி எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. முற்றுப்போலியைச் சான்றுடன் விளக்குக.
4. முன்பின்னதாகத் தொக்கபோலியைச் சான்றுடன் விளக்குக.

5. பின்வரும் கட்டங்களை உரிய சான்றுகளால் நிரப்புக.

| வ.எண் | முதற்போலி | இடைப்போலி | இறுதிப்போலி |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

### அறிவோம்! தெளிவோம்! சுவற்றிலா? சுவரிலா? – எது சரி?

சுவரில் என்பதே சரி. சுவல் என்பதன் எழுத்துப்போலி சுவர் என்பது. சுவல் என்பதற்குத் தோள் என்று பொருள். தோள் போல் தாங்கி நிற்பது என்னும் காரணப்பெயர் அடிப்படையில் சுவல் – சுவர் என வழங்குகிறது.

மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகளில் 'ற்' என்பது இல்லை. ஆகவே, 'சுவற்' என்று ஒரு சொல்லில்லை. இதிலிருந்து 'சுவற்றில்' என்பது எவ்வாறு உருவாகும்? சிந்தியுங்கள். பிழையின்றி எழுத முயல்வோம். எனவே, சுவர், சுவரை, சுவரில் என்று சரியாக எழுதுவோம்.

## தகவல் துளி

### மறைநீர் (VIRTUAL WATER)

மறைநீர் என்பது ஒரு நாட்டின் நீர்ப்பொருளாதாரம். ஒரு நாட்டின் மொத்த உற்பத்தியையும் பணத்தைக் கொண்டு மதிப்பிடுவதைப் போல, நீர்வளத்தைக் கொண்டு மதிப்பிடும் பொருளாதாரம்தான் மறைநீர்ப் பொருளாதாரம். பொருள்களின் உற்பத்திக்கு அதிக அளவில் நீர் தேவைப்படுகிறது. ஒரு கிலோ மாம்பழ உற்பத்திக்கு 1800 லிட்டர் நீர் தேவைப்படுகிறது. ஒரு கிலோ ஆப்பிளுக்கு 822 லிட்டர் நீர் தேவைப்படுகிறது. ஒரு கிலோ அரிசி உற்பத்திக்கு 2497 லிட்டர் நீர் தேவைப்படுகிறது. ஒரு லிட்டர் நீரைச் சுத்திகரிக்க 4 முதல் 5 லிட்டர் நீர் தேவை. 60 கிராம் கொண்ட ஒரு முட்டையை உற்பத்தி செய்ய 196 லிட்டர் நீர் தேவை. 1.1 டன் எடை கொண்ட ஒரு கார் உற்பத்திக்கான நீர்த் தேவை 4 லட்சம் லிட்டர்கள். எனவே நீரின் தேவையையும் பொருளின் தேவையையும் துல்லியமாக ஆராய்ந்து அதற்கு ஏற்ப உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கைகளை வகுக்க வேண்டும் என்கிறது மறைநீர்ப் பொருளாதாரம்.

## 7.5 மொழியோடு விளையாடுவோம்

**பின்வரும் வினாக்களில் பொருந்தாச் சொற்களை எடுத்து எழுதுக.**

| வ.எண் | சொற்கள் | பொருந்தாச் சொற்கள் |
|---|---|---|
| 1. | ஏரி, குளம், குட்டை, நிலம், கடல் | ________________ |
| 2. | கல், மலை, நிலம், மணல், மண், காற்று | ________________ |
| 3. | தீ, நீர், நெருப்பு, அனல், தணல், சூடு | ________________ |
| 4. | வீடு, பள்ளி, கூடு, பொந்து, குகை, ஏரி | ________________ |
| 5. | தங்கம், வெள்ளி, வைரம், இரும்பு, முத்து | ________________ |
| 6. | தாமரை, மல்லிகை, தாழை, வெண்டை | ________________ |

## 7.6 கேட்டல் கருத்தறிதல்

### உப்பு

மனித வாழ்வோடு மிக நெருங்கிய தொடர்பு உடையது உப்பு. உப்பில்லாத பண்டம் குப்பையிலே, உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்றெல்லாம் உப்பு சார்ந்த முதுமொழிகள் பல உள்ளன. சங்ககாலம் முதலே உப்பு வணிகம் கவனிக்கத்தக்க ஒன்றாக இருந்துள்ளது. உப்பு விளைவிப்பவர்களை உமணர்கள் என்று சங்க இலக்கியம் குறிப்பிட்டுள்ளது. உப்பின் விலையும் நெல்லின் விலையும் சமமாக இருந்ததை 'நெல்லின் நேரே வெண் கல் உப்பு' என்ற சங்க இலக்கிய வரிகள் உறுதிசெய்கின்றன. உழவர்களுக்குச் சமமாக உப்பு விளைவிப்பவர்களும் மதிக்கப்பட்டனர்.

உப்பு விளைவிக்கப்படும் களமே உப்பளம். களம் எனும் பாத்திகளில் கடல் நீரை அடைத்துச் சூரிய ஒளியில் நன்கு நீர் ஆவியாகிப் போகும் அளவுக்குக் காய்ச்சி எடுத்தால் உப்பு கிடைக்கும். இதுவே சோடியம் குளோரைடு எனும் சமையல் உப்பு. ஆனால், உப்பின் சுவைக்குப் பின்னால் உழைப்பாளர்களின் மிகக் கடினமான உழைப்பும் அதற்கேற்ற ஊதியம் இல்லாத சோகமும், உப்பளம் தரும் உடல் உபாதைகளால் உமணர்கள் வாடும் நிலையும் இன்று இருக்கின்றன.

இந்தியாவில் ஆண்டிற்கு 30 மில்லியன் டன் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. உலகளவில் உப்பு உற்பத்தியில் இந்தியா மூன்றாம் இடத்தில் உள்ளது. இந்தியாவில் குஜராத்தும் தமிழகமும் அதிக அளவில் உப்பு விளைவிக்கும் மாநிலங்கள் ஆகும். தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் அதிகமாக உப்பு விளைவிக்கப்படுவதால் 'உப்பளங்களின் ராணி' எனத் தூத்துக்குடி அழைக்கப்படுகிறது.

## வினாக்கள்

1. யாரை உள்ளளவும் நினைக்க வேண்டும்?
2. உப்பு விற்பவர்களைச் சங்க இலக்கியம் எவ்வாறு குறிப்பிட்டுள்ளது?
3. உப்பு விளைவிக்கப்படும் களத்தின் பெயர் என்ன?
4. 'உப்பளங்களின் ராணி' என அழைக்கப்படும் ஊர் எது?
5. உலக அளவில் இந்தியா உப்பு உற்பத்தியில் எந்த இடத்தில் உள்ளது?

## 7.7 மொழிபெயர்ப்போம்

Pollution has been the root cause of the destruction of our planet. From seas to land, and even mountains, every place has been covered with debris and litter. Our earth is chocking. We must act urgently to prevent earth from becoming a dead planet.

______________________________

______________________________

______________________________

## 7.8 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | வாழ்வாதாரம் | - | Livelihood |
| 2. | உயிரினங்கள் | - | Living things |
| 3. | புல் | - | Grass |
| 4. | குடிசை | - | Hut |
| 5. | ஓலை | - | Straw / Palm leaf |
| 6. | பனைமரம் | - | Palm tree |
| 7. | மணல் | - | Sand |
| 8. | கடற்கரை | - | Seashore |
| 9. | அணிகலன்கள் | - | Ornaments |
| 10. | நல்லுறவு | - | Rapport |

## 7.9 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் பாடலைப் படித்து, வினாக்களுக்கு விடை கூறுக.**

பச்சைக் கம்பளம் விரித்தாற்போல்
    பாரில் வளரும் பசும்புல்லே!
இச்சை மிகவே எங்கெங்கும்
    எழில்பெறப் பரவும் வகையென்ன?
பூமித்தாயின் பொன்னுடம்பைப்
    போர்த்துக் காக்கும் போர்வையென
நீமிக் கெங்கும் நிறைந்தனையோ?
    நேசங் கொள்ள வளர்புல்லே!

**– இளங்குமரன்**

### வினாக்கள்

1. பரந்து காணப்படும் பசும்புல்லுக்குக் கூறப்படும் ஒப்புமை யாது?
2. எழில் என்பதன் பொருள் என்ன?
3. 'பூமித்தாய்' என்று கவிஞர் எதனைக் கூறுகிறார்?
4. பூமித்தாயின் பொன்னுடம்பைப் போர்த்திக் காப்பது எது?
5. 'பார்' – இச்சொல்லுக்கு இருபொருள் கூறுக.

## 7.10 செயல்திட்டம்

நெய்தல் நிலக்காட்சியைப் படமாக வரைந்து, வகுப்பில் காட்சிப்படுத்துக.

பாடம்

# 8

## 8.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

பூமி வெப்பமடைவதற்கான காரணங்கள் குறித்து வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 8.2 படிப்போம்

### பூக்கும் மரங்களின் ரகசியம்

இயல்பாகத் தோன்றி மறையும் அனைத்தும் இயற்கையே. இதனைச் சார்ந்தே அனைத்து உயிர்களும் வாழ்கின்றன. நம்மைச் சுற்றி இருக்கும் இயற்கைப் பொருள்களைப் பாடுபொருளாகக் கொண்டு புதுக்கவிதைகள் பல படைக்கப்படுகின்றன. 'பூக்கும் மரங்களின் ரகசியம்' என்னும் தலைப்பில் மரங்களின் ரகசியத்தைப் பறைசாற்றுகிறார் கவிஞர் தேவதேவன்

நீரை நாடும் தேடலே வேர்கள்

சூழலை எதிர்கொள்ளும் மௌனமே அடிமரம்

ஒளியை நாடும் விழைவே கிளைகள்

உதிரும் இலைகளின் பிரிவே மரணம்

பிறப்பின் புதுமை பசுமையே தளிர்கள்

அறிந்தேன் பூக்கும் மரங்களின் ரகசியம்.

- தேவதேவன்

## பாடலின் பொருள்

மரங்கள் பூப்பதன் ரகசியம் என்ன என்ற கேள்விக்கு விடைதான் இந்தக் கவிதை. இந்தக் கேள்விக்கு வேறு பல பரிமாணங்களைச் சேர்த்துவிடுகிறார் கவிஞர். நீரை விரும்பித் தேடுவதன் வெளிப்பாடுதான் வேர்கள் என்கிறார். எவ்விதச் சூழல் வந்தாலும் அதை எதிர்கொள்வதற்காக மௌனமாகக் காத்திருப்பதுதான் அடிமரம் என்றும், ஒளியை அடைய வேண்டும் என்ற உணர்வுதான் கிளைகள் என்றும் சொல்கிறார். மரத்திலிருந்து இலைகள் உதிர்வதை மரணத்தோடு ஒப்பிடுகிறார். ஒரு இலை உதிர்வதைப் போலத்தான் மனித வாழ்க்கையின் மரணமும் இருக்கிறது என்பதை உணர்த்துகிறார். அடுத்த வரியில் மரத்தின் பசுமையான தளிர்களைப் பிறப்போடு ஒப்பிடுகிறார். இதுதான் பூக்கும் மரங்களின் ரகசியம் என்கிறார். மரத்தின் ரகசியத்தைப் பற்றிப் பேசும் இந்தக் கவிதையானது மனித வாழ்க்கையின் ரகசியத்தையும் எடுத்துவைக்கிறது.

## நூலாசிரியர் பற்றி

மரங்கள் பூப்பதன் ரகசியம் என்னும் இக்கவிதை 'புல்வெளியில் ஒரு கல்' என்னும் கவிதை நூலில் இடம்பெற்றுள்ளது. இந்நூலின் ஆசிரியர் தேவதேவன். இவருடைய இயற்பெயர் பிச்சுமணி கைவல்யம். தூத்துக்குடியில் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர், ஒரு நவீனத் தமிழ்க் கவிஞர். இவர் எழுதிய "தேவதேவன் கவிதைகள்" எனும் நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2005 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் புதுக்கவிதை எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது.

## பொருள் அறிவோம்

1. உதிர்தல் - கீழே விழுதல்
2. தளிர் - முளைக்கும் பருவத்தில் உள்ள இலை
3. ஒப்பிடுதல் - ஒத்துப்பார்த்தல்

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

(பிறப்பு, புதுக்கவிதை, இலைகள், வேர்கள், புல்வெளியில் ஒரு கல்)

1. மரத்திலிருந்து ________________ உதிர்வதை மரணத்தோடு ஒப்பிடுகிறார்.
2. மரங்கள் பூப்பதன் ரகசியம் என்னும் கவிதை இடம்பெற்றுள்ள நூல் ________________.
3. மரத்தின் பசுமையான தளிர்களைப் ________________ உடன் ஒப்பிடுகிறார் கவிஞர்.
4. நீரை விரும்பித் தேடுவதன் வெளிப்பாடுதான் ________________ என்கிறார் கவிஞர்.
5. தேவதேவன் கவிதைகள் எனும் நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் ________________ எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது.

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. வேர்கள் எதைத் தேடிச் செல்கின்றன?
2. கவிஞர் தேவதேவன் அவர்களின் இயற்பெயர் என்ன?
3. கவிஞர் தேவதேவனின் எந்த நூலுக்கு தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசு கிடைத்தது?
4. மரத்தின் ரகசியத்தைப் பற்றிப் பேசும் இந்தக் கவிதை எதை எடுத்துக் கூறுகிறது?
5. உதிரும் இலைகள் பற்றிக் கவிஞர் குறிப்பிடுவது யாது?

### இ) பின்வரும் வினாவிற்கு விடை எழுதுக.

1. 'பூக்கும் மரங்களின் ரகசியம்' என்ற கவிதையின் மூலம் கூறப்படும் தகவல்களைத் தொகுத்து எழுதுக.

## 8.3 படிப்போம்

### இயற்கைப் பாதுகாப்பு

இயற்கையின் கொடையான நிலம், நீர், காற்று ஆகியவை இந்த உலகம் இயங்குவதற்கான அடிப்படை ஆதாரங்களாகும். இந்த இயற்கை ஆதாரங்கள் இல்லையென்றால் புவியின் இயக்கமே இல்லை எனலாம். இயற்கையின் ஒவ்வோர் அங்கமும் தன்னைத்தானே புதுப்பித்துக்கொள்ளும், புதிய சூழலுக்கு ஏற்பத் தம்மைத் தகவமைத்துக்கொள்ளும் ஆற்றல் கொண்டது. ஆனால், இயற்கையுடன் மனிதர்கள் நடத்தும் அதீத இடையீடு காரணமாக இயற்கையானது சமநிலை தவறுகிறது. விளைவாக, புவி வெப்பமாதல் அதிகரித்து வருகிறது.

இன்று உலக நாடுகள் எதிர்கொண்டுள்ள சவாலான பிரச்சனை புவி வெப்பமாதல் ஆகும். காடுகள் அழிப்பு, தொழிற்சாலைகளும் வாகனங்களும் உருவாக்கும் காற்று மாசு, கட்டுப்பாடற்ற பொருளாதார நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் புவியின் வெப்பம் இயல்பைவிட 1 டிகிரி செல்சியஸ் அளவுக்கு அதிகமாகிவருவதாகச் சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். இப்படி, புவி வெப்பமயமாவது அளவுக்கு அதிகமாக உயரும்போது அது அபாயகரமான தீய விளைவுகளை ஏற்படுத்தும்.

### 1. பனிப்பாறைத் தொப்பிகளின் இழப்பு

பனிப்பாறை என்பது சுற்றுச்சூழல் அமைப்பின் ஒரு பகுதியாகும். இது இயற்கைச் சமநிலையிலிருந்து தவறும்போது ஆறுகளின் ஓட்ட விகிதம், கடல் மட்டம், மழைச் சுழற்சி போன்றவையும் சமநிலை தவறுகின்றன.

### 2. தீவிர வானிலை

புவி வெப்பமடைதல் காரணமாக வெள்ளம், வெப்ப அலைகள், வறட்சி, சூறாவளி முதலியவை முன்பைவிட இப்போது மிகவும் அதிக அளவிலும் தீவிரமாகவும் வெளிப்பட்டு, பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

### 3. வாழ்விட இழப்பு

பவளப்பாறைகள், வெப்பமண்டல மழைக்காடுகள், ஆல்பைன் புல்வெளிகள் போன்ற சுற்றுச்சூழல் அமைப்புகளில் புவி வெப்பமடைதல் காரணமாக ஏற்படும் மாற்றங்களால் பல உயிரினங்கள் தங்கள் வாழ்விடத்தை இழக்க நேர்கிறது. வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக எற்படும் காட்டுத்தீயினால் மக்களும் விலங்குகளும் காடுகளை விட்டு வெளியேறும் சூழல் ஏற்படுகிறது. கடல் மட்டம் அதிகரிப்பதால் பல கடலோரப் பகுதிகளிலுள்ள வாழ்விடங்கள் தண்ணீரில் மூழ்கும் அபாயம் உள்ளது. இதன் பொருட்டும் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர நேரிடுகிறது.

## 4. கிருமிகளால் அதிகரித்த உடல்நலிவு

பருவ மாற்றத்தைப் பொறுத்து நோய்க்கிருமிகளின் தாக்கம் இருக்கும். இப்போது இந்த இயற்கைச் சீர்குலைவு காரணமாகப் புதிய வகையான கொடிய பூச்சிகளும் வைரஸ் பாக்டீரியாக்களும் தோன்றி உயிரினங்களை அச்சுறுத்துகின்றன.

இத்தகைய பாதிப்புகளிலிருந்து நாம் மீள்வது எளிதான காரியமல்ல. அதனால்தான், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் அவசியத்தை இன்று அனைத்து நாடுகளும் உணர்ந்துள்ளன. இதற்குத் தீர்வுகாணும் பொருட்டு உலக அளவில் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

## நாம் செய்ய வேண்டியவை

"தன்னுடைய கல்லை ஒருவர் எடுத்துவைக்கும்போது இந்த உலகத்தைக் கட்டமைப்பதில் தன்னுடைய பங்கையும் அளிக்கிறோம் என்ற உணர்வுதான் மானிடம்" என்கிறார் பிரெஞ்சு நாவலாசிரியர் அந்த்வான் து செந்த்-எக்சுபெரி (Antoine de Saint-Exupery). இன்று இயற்கைச் சமநிலையைப் பேணுவதற்கான முயற்சியிலும் நம் ஒவ்வொருவரின் பங்களிப்பும் மிகவும் இன்றியமையாதது. அதற்காக நாம் செய்ய வேண்டியவற்றுள் சில பின்வருமாறு:

மரம் வளர்த்தல்.

வனங்களைப் பாதுகாத்தல்.

ஓசோனைச் சிதைக்கும் வாயுக்களின் பயன்பாடுகளைத் தவிர்த்தல்.

பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருள்களின் பயன்பாட்டைக் குறைத்தல்.

மிதிவண்டிகளின் பயன்பாட்டை ஊக்குவித்தல்.

நீர்நிலைகளில் தொழிற்சாலைகளின் கழிவுநீர் கலப்பதைத் தவிர்த்தல்.

நெகிழிப் பயன்பாட்டைத் தவிர்த்தல்.

சூரிய ஒளி, காற்று முதலியவற்றிலிருந்து கிடைக்கும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்த ஊக்குவித்தல்.

இந்தச் செயல்பாடுகளின் இன்றியமையாமையை நண்பர்களுடனும் உறவினர்களுடனும் பகிர்ந்துகொள்ளுதல்.

ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 28ஆம் நாள் உலக இயற்கைப் பாதுகாப்பு நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆகவே இயற்கையை நேசிப்பது மட்டுமின்றி அதைப் பாதுகாப்பதும் நம் கடமையாகும். இயற்கை வளங்களைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு நம் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். வருங்காலத் தலைமுறையினருக்கு இப்பூமியை மாசின்றிக் கொடுக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் பொறுப்பு என்பதை நாம் உணர வேண்டும்.

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

(நோய்க்கிருமிகள், புவியின் இயக்கம், சுற்றுச்சூழல், உலக இயற்கைப் பாதுகாப்பு, புவி வெப்பமாதல்)

1. இயற்கை ஆதாரங்கள் இல்லையென்றால் ______________ இல்லை எனலாம்.
2. இன்று உலக நாடுகள் எதிர்கொண்டுள்ள சவாலான பிரச்சனை ______________.
3. பனிப்பாறை என்பது ______________ அமைப்பின் ஒரு பகுதியாகும்.
4. பருவ மாற்றத்தைப் பொறுத்து ______________ தாக்கம் இருக்கும்.
5. ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 28ஆம் நாள் ______________ நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. புவி வெப்பமாதல் காரணமாக ஏற்படும் வாழ்விட இழப்பு பற்றிக் கூறுக.
2. பனிப்பாறை என்றால் என்ன?
3. இயற்கையைப் பாதுகாக்க நாம் என்னென்ன செய்ய வேண்டும்?
4. உலகம் இயங்குவதற்கான அடிப்படை ஆதாரங்கள் யாவை?
5. எது மானிடம் என்கிறார் பிரெஞ்சு நாவலாசிரியர் அந்த்வான் து செந்த் – எக்சுபெரி?

### இ) பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடை எழுதுக.

1. புவி வெப்பமாதல் பற்றி விரிவாக எழுதுக.
2. இயற்கைச் சமநிலையைப் பேணுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

## 8.4 தெரிந்துகொள்வோம்

### பகுபதம், பகாப்பதம்

ஒன்று அல்லது ஒன்றிற்கும் மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து நின்று பொருள் தருவது, சொல் எனப்படும். கிளவி, பதம், மொழி என்பன சொல்லின் வேறுபெயர்கள்.

எகா. பூ, கனி, கல்வி, பட்டம்.

எழுத்துகளால் உருவானதாக இருந்தாலும் பொருள் தருவதாக இருந்தால் மட்டுமே அது சொல் எனப்படுகிறது. பொருள் தராதவை சொற்கள் ஆகா. எடுத்துக்காட்டாக, வில்க

இதில் ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து வந்துள்ளன. ஆயினும், பொருள் தரவில்லை. எனவே, இதனைச் சொல் என்று சொல்வதில்லை.

| | | |
|---|---|---|
| ஓர் எழுத்துச் சொற்கள் | = | பூ, வா, ஆ, கை, பை, ஈ, தை. |
| ஈரெழுத்துச் சொற்கள் | = | நட, நில், படி, கண், இழு. |
| மூவெழுத்துச் சொற்கள் | = | பலம், புறம், கடல், தன்மை, மாண்பு. |
| நான்கெழுத்துச் சொற்கள் | = | கடவுள், சிறுத்தை, வேந்தன், அரும்பு, தங்கம். |

நான்கெழுத்துகளுக்கு மேற்பட்ட சொற்களும் தமிழில் உண்டு.

### பகுபதம்

ஒரு சொல்லைப் பகுதி, விகுதி முதலிய உறுப்புகளாகப் பிரிக்க முடிந்தால் அது பகுபதம் ஆகும். பகுபதங்களைப் பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் என இரண்டாகப் பகுக்கலாம். வினைப்பகுபதம், தெரிநிலை வினைப்பகுபதம், குறிப்பு வினைப்பகுபதம் என்று இருவகைப்படும்.

எடுத்துக்காட்டு: அறிஞன், செய்தாள்.

### பகுபதத்தின் உறுப்புகள்

ஒரு பகுபதச்சொல் பிரிந்து நிற்கும் நிலையில் அமையும் உறுப்புகள் பகுபத உறுப்புகள் ஆகும். அவை பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் என ஆறு வகைப்படும்.

### பகாப்பதம்

பகுக்க முடியாத - பகுத்தாலும் பொருள் தராத இயல்புடைய சொல் பகாப்பதம் ஆகும்.

எடுத்துக்காட்டு: மண், கண், நிலம், காற்று, நாய், வா.

பகாப்பதத்தின் வகைகள்

பகாப்பதம் பெயர்ப்பகாப்பதம், வினைப்பகாப்பதம், இடைப்பகாப்பதம், உரிப்பகாப்பதம் என நான்கு வகைப்படும்.

### பெயர்ப்பகாப்பதம்

பெயர்ச்சொற்களாக அமையும் பகாப்பதங்கள் பெயர்ப்பகாப்பதம் எனப்படும்.

எ.கா : நெருப்பு, காற்று, நிலம், நீர்.

### வினைப்பகாப்பதம்

வினைச்சொற்களாக அமையும் பகாப்பதங்கள் வினைப்பகாப்பதம் எனப்படும்.

எ.கா : உண், தின், நட, வா.

### இடைப்பகாப்பதம்

இடைச்சொற்களாக அமையும் பகாப்பதங்கள் இடைப்பகாப்பதம் எனப்படும்.

எ.கா : மன், கொல், போல், மற்று.

### உரிப்பகாப்பதம்

உரிச்சொற்களாக அமையும் பகாப்பதங்கள் உரிப்பகாப்பதம் எனப்படும்.

எ.கா : சால, கூர், மிகு, உறு, தவ, நனி, கழி

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பத வகைகளின் எண்ணிக்கை

   அ) 3 ஆ) 5 இ) 2 ஈ) 4

2. பின்வருவனவற்றுள் எது பகுபதம் இல்லை.

   அ) வந்து ஆ) கொடு இ) தேடி ஈ) கண்ட

3. பகாப்பத வகைகள்

   அ) 4 ஆ) 5 இ) 2 ஈ) 3

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பகுபத உறுப்புகள் யாவை?
2. பகாப்பதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. பகுபத வகைகளை விளக்குக.
4. பின்வரும் பதங்களுக்குச் சான்று தருக.

| வ .எண் | பகுபதம் | | பகாப்பதம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | பெயர்ப் பகுபதம் | வினைப் பகுபதம் | பெயர்ப் பகாப்பதம் | வினைப் பகாப்பதம் | இடைப் பகாப்பதம் | உரிப் பகாப்பதம் |
| 1. | | | | | | |
| 2. | | | | | | |

**சிந்தனை வினா :** கடல். இச்சொல் பகுபதமா? பகாப்பதமா? கண்டறிக.

## 8.5 கருத்து விளக்கப்படம்




### வினாக்கள்

1. பனை தேசியத் திருவிழா எங்கே எப்போது நடைபெறுகிறது?
2. பனையிசையாக நடைபெறும் நிகழ்வுகள் யாவை?
3. பனை தேசியத் திருவிழா யாரால் கொண்டாடப்படுகிறது?
4. பனைப் பொருள்களின் விற்பனை எங்கே நடைபெறுகிறது?
5. பனை உலகச் சாதனையாகக் குறிப்பிடப்படுவது என்ன?

## தகவல் துளி

உழவர்களின் நண்பன் என்று அழைக்கப்படுவது மண்புழு (EARTHWORM). மண்புழுக்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் உரமே மண்புழு உரம். இது ஓர் இயற்கை உரம் ஆகும். மண்புழு, இயற்கையில் கிடைக்கும் விவசாயக் கழிவுப் பொருள்களான சாணம், இலை, தழை போன்றவற்றை உண்கிறது. பின்னர் சிறுசிறு உருண்டைகளாக தாம் உண்டவற்றை வெளியேற்றுகிறது. இதையே மண்புழு உரம் என்கிறோம். இதில் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து ஆகிய அனைத்தும் உள்ளன. உலகத்தில் 3,000 வகையான மண்புழுக்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றில் இந்தியாவில் 384 வகைகள் உள்ளன. இதில் 6 வகையான மண்புழுக்கள் உரம் தயாரிக்க உகந்தவை. இவை பயிர்களுக்கும் அந்த விளைச்சலை உண்ணும் உயிரினங்களுக்கும் நன்மை பயக்கின்றன.

## 8.6 கேட்டல் கருத்தறிதல்

### பனைமரம்

பனைமரம் தமிழ்நாட்டின் மாநில மரம். பனைமரம் ஏழு ஆண்டுகளில் பலன் தரும். பனைமரம் ஏழைகளின் கற்பக விருட்சம் என்று அழைக்கப்படுகிறது: சிறந்த காற்றுத் தடுப்பான். ஆழத்தில் நீர்மட்டம் குறையாமல் நீரைச் சேமித்துவைக்கும் தன்மையுடையது. இதனால் நிலத்தடி நீர்மட்டத்தைத் தக்கவைக்கிறது. பனைமரம் வளரும் வரைதான் நீர் தேவை, வளர்ந்துவிட்டால் பெரிய அளவுக்குத் தண்ணீர் தேவையில்லை. பனைமரத்திலிருந்து நுங்கு, பதநீர், கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை கிடைக்கும்.

இயற்கையைப் பாதுகாக்க இயற்கையே உருவாக்கிய ஓர் அரணே பனைமரம். இது வெப்ப நிலப்பரப்பில் வளரக்கூடிய மரம். இது ஏறத்தாழ 120 ஆண்டுகள் வரை வளரும். இது புல் வகையைச் சார்ந்த தாவரம். தமிழ்நாட்டில் 30 வகையான பனைமரங்கள் இருந்தன என்று ஆய்வுகள் கூறுகின்றன.

பனையின் இலை 'ஓலை' எனப்படுகிறது. இது, கூரைகள் வேயப் பயன்படுகிறது. மேலும் பனையோலையால்தான் ஓலைச்சுவடிகள் உருவாக்கப்பட்டன. இவ்வோலைச்சுவடிகளே பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் இலக்கியங்களைச் சுமந்துவந்து நம்மிடம் சேர்த்தன.

சங்க இலக்கிய காலம் முதலே பனைமரம் போற்றப்பட்டுள்ளது. சேர மன்னனின் அடையாளப் பூவாகப் பனம்பூ இருந்துள்ளது. மறைந்த குமரிக்கண்டத்தில் பனைநாடு இருந்தது எனத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. பனையூர், பனைமங்கலம், பனையபுரம், திருப்பனந்தாள், பனைமரத்துப்பட்டி எனப் பனையின் பெயரில் தமிழ்நாட்டில் ஊர்ப்பெயர்கள் பல உள்ளன. இவ்வாறு தமிழர்களின் வாழ்க்கையோடு பனைமரம் ஒன்றிக் காணப்படுகிறது.

## வினாக்கள்

1. தமிழ்நாட்டின் மாநில மரம் எது?
2. தமிழ்நாட்டில் எத்தனை வகையான பனைமரங்கள் இருந்ததாக ஆய்வுகள் கூறுகின்றன?
3. பனைமரத்திலிருந்து கிடைக்கும் சில பொருள்களைக் கூறுக.
4. பனைமரம் யாருடைய வாழ்க்கையோடு ஒன்றிக் காணப்படுகிறது?
5. பனைநாடு எங்கு இருந்தது?

## 8.7 மொழிபெயர்ப்போம்

உலக இயற்கைப் பாதுகாப்பு நாள் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 28 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இயற்கையைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், நிலைத்தன்மையை ஊக்குவிக்கவும் இந்த நாள் நமக்கு ஒரு வாய்ப்பை வழங்குகிறது. நம் வாழ்வில் இயற்கையின் முக்கியத்துவத்தை இந்த நாளில் மட்டுமல்லாமல் நாள்தோறும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

## 8.8 அறிந்துகொள்வோம்

1. நிலம் - Land
2. காற்று - Wind
3. கனிமங்கள் - Minerals
4. இயற்கை வளங்கள் - Natural Resources
5. இயற்கைச் சமநிலை - Ecological Balance
6. தட்பவெப்பநிலை - Climate
7. வெள்ளப்பெருக்கு - Flood
8. வறட்சி - Drought
9. நிலத்தடிநீர் - Ground Water
10. நச்சுக்காற்று - Toxic Air
11. புகை - Smoke
12. உலக வெப்பமாதல் - Global Warming
13. சூரிய ஒளி - Sunlight
14. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் - Renewable Energy

## 8.9 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் தலைப்பு சார்ந்து கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு, ஓர் உரையாடல் உருவாக்குக.**

தேன்மொழி நீர் நிறைந்த ஆற்றின் அழகைக் காணச்செல்லுதல்.

அங்கே சிலர் குளித்து மகிழ்தல்.

சிலர் துணி துவைத்தல்.

சிலர் நெகிழிகளை நீரில் எறிதல்.

சிலர் மாடுகளைக் குளிப்பாட்டுதல்.

சிலர் தண்ணீரைக் குடத்தில் எடுத்தல்.

சிலர் மீன் பிடித்தல்.

காட்சிகளைக் கண்டு, தேன்மொழி தன் தாயுடன் உரையாடுதல்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு

தேன்மொழி : ____________________

அம்மா : ____________________

தேன்மொழி : ____________________

அம்மா : ____________________

தேன்மொழி : ____________________

அம்மா : ____________________

தேன்மொழி : ____________________

அம்மா : ____________________

தேன்மொழி : ____________________

அம்மா : ____________________

## 8.10 செயல்திட்டம்

உங்கள் பள்ளியில் 'மாசிலா உலகம்' என்னும் தலைப்பில், நடைபெறவிருக்கும் விழிப்புணர்வுக் கண்காட்சிக்கு ஏற்ற வகையில் நிலம், நீர், காற்று முதலியவற்றில் ஏற்படும் மாசினை விளக்கும் முப்பரிமாண மாதிரி ஒன்று செய்து வருக.

## மீள்பார்வை

**1) கீழ்க்காணும் தொடர்களுக்குப் பொருத்தமான விடைகளைக் கோடிட்ட இடத்தில் நிரப்புக.**

(தூது, உலகப்பொதுமறை, காந்தியக் கவிஞர், தனிப்பாடல் திரட்டு, பாரதிதாசன்)

1. திருக்குறள் உலக மக்கள் அனைவராலும் ____________________ என்று அழைக்கப்படுகிறது.
2. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் ____________________ என்று அழைக்கப்படுகிறார்.
3. தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று ____________________.
4. தொகுக்கப்படாத பிற்காலப் புலவர்களின் பாடல்களைத் தொகுத்து, ____________________ என்று கூறினர்.
5. 'எங்கள் தமிழ்' என்ற கவிதையை எழுதியவர் ____________________.

**2) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக.**

1. கவிஞர் தாராபாரதியின் இயற்பெயர் இராதாகிருஷ்ணன். (சரி/தவறு)
2. கடலும் கடல் சார்ந்த பகுதி குறிஞ்சி நிலம் ஆகும். (சரி/தவறு)
3. 'பூக்கும் மரங்களின் ரகசியம்' என்னும் கவிதையின் ஆசிரியர் தேவதேவன். (சரி/தவறு)
4. ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 20ஆம் நாள் உலக இயற்கைப் பாதுகாப்பு நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. (சரி/தவறு)
5. பிரேசிலின் தேசிய மொழியாகப் போர்த்துக்கீசியம் பேசப்படுகிறது. (சரி/தவறு)

**3) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தமிழ்விடு தூது நூல் குறித்து விளக்குக.
2. திருக்குறளில் நாடு என்னும் அதிகாரத்தில் உள்ள ஐந்து திருக்குறளை எழுதுக.
3. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் பற்றி எழுதுக.
4. பண்படுத்தும் பழமொழிகள் என்னும் பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பழமொழிகளை எழுதுக.
5. கவிஞர் தாராபாரதியின் 'பூமியின் முற்றம் முழுவதும் சுற்றம்' என்னும் கவிதை அடிகளை விளக்குக.

4) **கீழ்க்காணும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. முதல் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடம் ____________

அ) மலேசியா ஆ) சிங்கப்பூர் இ) இந்தியா ஈ) பிரான்ஸ்

2. பிரேசில் மக்கள் எந்த விளையாட்டின் மீது தீராக் காதல் கொண்டுள்ளனர்?

அ) கிரிக்கெட் ஆ) கூடைப்பந்து இ) கைப்பந்து ஈ) கால்பந்து

3. நம் முன்னோர்களின் வாழ்க்கை அனுபவமாக வெளிப்படுவது ____________

அ) முதுமொழி ஆ) கவிதை இ) பழமொழி ஈ) கட்டுரை

4. ஆதிச்சநல்லூர் அகழாய்வுத்தளம் தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

அ) கன்னியாகுமரி ஆ) தூத்துக்குடி இ) மதுரை ஈ) தஞ்சாவூர்

5. நெய்தல்நில மக்களின் முதன்மைத் தொழில் ____________

அ) மீன் பிடித்தல் ஆ) பயிர் விளைவித்தல்

இ) தேன் எடுத்தல் ஈ) கால்நடை மேய்த்தல்

5) **கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பகுபதம் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. எழுத்துப்போலி என்றால் என்ன?
3. வல்லினம் மிகா இடங்களைச் சான்றுடன் விளக்குக.
4. இலக்கியவகைச் சொற்கள் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்? ஒவ்வொன்றையும் சான்றுடன் விளக்குக.
5. இலக்கணவகைச் சொற்கள் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்? ஒவ்வொன்றையும் சான்றுடன் விளக்குக.

6) **கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக.**

1. மொழிமுதல் எழுத்துகள் குறித்து விளக்குக.
2. மொழியிறுதி எழுத்துகள் குறித்து விளக்குக.
3. கம்பராமாயணம் காட்டும் நாட்டுவளம் குறித்து விரிவாக எழுதுக.
4. ஆதிச்சநல்லூரில் கிடைக்கப்பெற்ற அகழாய்வுப் பொருள்கள் குறித்து விளக்குக.
5. இயற்கைப் பாதுகாப்பு குறித்து விரிவாக எழுதுக.

**7) பின்வருவனவற்றைப் பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | கல் | - | திரிசொல் |
| 2. | ஆழி | - | வினை இயற்சொல் |
| 3. | அல்வா | - | திசைச்சொல் |
| 4. | புஷ்பம் | - | பெயர் இயற்சொல் |
| 5. | தாவியது | - | வடசொல் |

**8) பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. Update | - | 6. Corals | - |
| 2. Emigration | - | 7. Situation | - |
| 3. Revival | - | 8. Skeleton | - |
| 4. Palace | - | 9. Maritime Trade | - |
| 5. Land Resources | - | 10. Minerals | - |

**9) கீழ்க்காணும் பழமொழிகளைச் சரியான சொல் கொண்டு நிரப்புக.**

(கேடு, வாயால், கல், தண்ணீரையும், மீசைக்கும்)

1. காய்த்த மரம் ____________ அடிபடும்.
2. கூழுக்கும் ஆசை, ____________ ஆசை.
3. கெடுவான் ____________ நினைப்பான்.
4. தவளை தன் ____________ கெடும்.
5. தாயையும் ____________ பழிக்காதே.

**10) கீழ்க்காண்பனவற்றுள் சரியாகப் பொருத்தப்பட்டுள்ள இணை எது?**

| | | | |
|---|---|---|---|
| 1. | புத்தகம் | - | இடப்பெயர் |
| 2. | நூலகம் | - | பொதுப்பெயர் |
| 3. | காது | - | தொழிற்பெயர் |
| 4. | எழுதுதல் | - | சினைப்பெயர் |
| 5. | இரவு | - | காலப்பெயர் |

**11) பின்வரும் திருக்குறளில் விடுபட்டுள்ள சொல்லைக் கொண்டு எழுதுக.**

(நாடா, நாடு, நாட்டின், வல்லரணும், பிணியும்)

1. உறுபசியும் ஓவாப் ____________ செறுபகையும்
   சேரா தியல்வது நாடு.
2. கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா
   நாடென்ப ____________ தலை.
3. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
   ____________ நாட்டிற்கு உறுப்பு.
4. நாடென்ப ____________ வளத்தன நாடல்ல
   நாட வளந்தரு நாடு.
5. ஆங்கமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே
   வேந்தமைவு இல்லாத ____________.


**12) பின்வரும் வினாக்களுக்கு ஒரு சொல்லில் விடை எழுதுக.**

1. தமிழ்நாட்டின் மாநில மரம் எது?
2. 'உப்பளங்களின் இராணி' என்று அழைக்கப்படும் ஊர் எது?
3. கரிக்கையூர் எங்கு அமைந்துள்ளது?
4. 'துமி' என்ற சொல்லே தமிழில் கிடையாது என்று கூறிய புலவர் யார்?
5. உழவர்களின் நண்பன் என அழைக்கப்படுவது எது?

**13) பின்வரும் உரைப்பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதுக.**

1. G. U. Pope was a Tamil scholar who spent 40 years in Tamil Nadu and translated many Tamil texts into English. His popular translations included those of the Tirukkural and Thiruvasagam.
2. The World Tamil Conference is a series of conferences to discuss the social growth of the Tamil language. Each conference is attended by thousands of Tamil enthusiasts around the world. Conferences are hosted in various cities in India, as well as world cities with a significant Tamil population.
3. Brazil is the largest country in South America. Brazil is the world's fifth-largest country by area and the seventh most populous.
4. The Avvaiyar who lived during the Sangam period is said to have had cordial relations with the Tamil chieftains Vēl Pāri and Athiyamān. She wrote 59 poems in the Puṟanāṉūṟu. The name Avvaiyar means a 'respectable good woman', hence a generic title: her personal name is not known.
5. Adichanallur is an archaeological site in Thoothukudi district in Tamil Nadu, India that has been the site of a number of very important archaeological finds. Korkai, the capital of the Early Pandyan Kingdom, is located about 15 km from Adichanallur.

**14) பின்வரும் விளம்பரத்தைப் படித்து, கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**




## வினாக்கள்

1. விளம்பரத்தில் காணப்படும் நிகழ்ச்சியின் தலைப்பு என்ன?
2. நிகழ்ச்சியை நடத்தும் நிறுவனம் எது?
3. நிகழ்ச்சியில் பங்குபெறுவோர்கள் யாவர்?
4. நிகழ்ச்சியில் பங்குபெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் புத்தகங்களின் பெயர்களைக் கூறுக.
5. நிகழ்ச்சி எங்கு, எப்போது நடைபெறுகிறது?

**15) பின்வரும் வினாவிற்கு உங்கள் சொந்தக் கற்பனையில் விடை எழுதுக.**

அ) 'மழை' என்னும் தலைப்பில் எட்டு வரிக் கவிதை எழுதுக.

(அல்லது)

ஆ) 'நண்பருக்குக் கடிதம்' என்ற தலைப்பில் உங்கள் நண்பருக்குக் கடிதம் ஒன்றினை எழுதுக.

பாடம் 9

## 9.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

கல்வி கற்பதினால் ஏற்படும் நன்மைகள் குறித்து வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 9.2 படிப்போம்

### சீவக சிந்தாமணி

கல்வி என்பது ஒழுக்கம், அறிவு போன்றவற்றைத் தரும் சமூகச் செயல்பாடு. கல்வியைப் பெற்றவர்கள் மற்றவர்களிடம் இருந்து மாறுபட்டு, மற்றவர்களுக்கு வழிகாட்டுகின்ற சிறப்பு பெற்றவர்களாக இருப்பார்கள். கல்வியின் நோக்கம், ஒருவரைச் செல்வந்தராக மாற்றுவது அன்று. சக உயிரினங்களை மதிக்கும் பண்பாளராக இருக்கச் செய்தலே ஆகும்.

**கற்றறிந்தோர் சிறப்பு**

"சொல்அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே"

- திருத்தக்கத்தேவர்






## பாடல் விளக்கம்

கருக்கொண்ட பச்சைப்பாம்புபோல நெற்பயிர்கள் தோற்றம் கொண்டுள்ளன. நெற்பயிர்கள் கதிர்விட்டு நிமிர்ந்து நிற்பது, செல்வம் பெற்ற பக்குவம் இல்லாதவர் தலைநிமிர்ந்து நிற்பதுபோல் உள்ளது. அப்பயிர்கள் முற்றியவுடன் நெற்கதிர்கள் சாய்ந்திருப்பது, தெளிந்த நூலைக் கற்ற நல்லவர்களின் பணிவைப் போல் உள்ளது.

## நூலைப் பற்றி

சீவக சிந்தாமணி, தமிழின் ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று. சீவகனைத் தலைவனாகக் கொண்டு படைக்கப்பட்டது இக்காப்பியம். இது மணநூல் எனவும் அழைக்கப்படுகிறது. இன்பங்களைத் துறந்து துறவு பூண வேண்டும் என்பதே இக்காப்பியத்தின் மையக்கருத்தாகும். இக்காப்பியமே தமிழில் விருத்தப்பாவில் அமைந்த முதற்காப்பியம் ஆகும். 13 இலம்பகங்களைக் கொண்டது. சீவக சிந்தாமணியை எழுதியவர் திருத்தக்கத்தேவர். இவர் 'நரிவிருந்தம்' என்னும் நூலையும் இயற்றியுள்ளார்.

## தெரிந்துகொள்வோம்

### ஐம்பெருங்காப்பியங்கள்

| வ. எண் | அணிகலன் | நூல் பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|---|
| 1. | சிலம்பு (காலில் அணிவது) | சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| 2. | மேகலை (இடையில் அணிவது) | மணிமேகலை | சீத்தலைச் சாத்தனார் |
| 3. | சிந்தாமணி (கழுத்தில் அணிவது) | சீவக சிந்தாமணி | திருத்தக்கத்தேவர் |
| 4. | வளையல் (கையில் அணிவது) | வளையாபதி | ஆசிரியர் அறியப்படவில்லை |
| 5. | குண்டலம் (காதில் அணிவது) | குண்டலகேசி | நாதகுத்தனார் |

## பொருள் அறிவோம்

1. சொல் – நெல்
2. சூல் – கரு
3. மாந்தர் – மக்கள்
4. தேர்ந்த நூல் – நல்ல நூல்
5. இறைஞ்சி – வளைந்து

## பயிற்சிகள்

### அ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக.

1. சீவக சிந்தாமணியின் ஆசிரியர் திருத்தக்கதேவர். (சரி/தவறு)
2. சீவக சிந்தாமணியின் தலைவன் கோவலன். (சரி/தவறு)
3. நெற்கதிர், நற்பண்பாளரைப் போலப் பணிவுடன் உள்ளது. (சரி/தவறு)
4. முற்றாத நெற்பயிர், தீயபண்பாளர் போலப் பணிவுடன் உள்ளது. (சரி/தவறு)
5. திருத்தக்கத்தேவர் நரிவிருத்தத்தை எழுதவில்லை. (சரி/தவறு)

### ஆ) பொருத்துக.

1. நற்பண்பாளர் – இளங்கோவடிகள்
2. தீயபண்பாளர் – முற்றிய நெற்கதிர்
3. சீவகசிந்தாமணி – கரு
4. சூல் – திருத்தக்கத்தேவர்
5. சிலப்பதிகாரம் - முற்றாத நெற்பயிர்

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. முற்றாத நெற்பயிர் குறித்துச் சீவக சிந்தாமணி கூறும் கருத்தை எழுதுக.
2. சீவக சிந்தாமணி – குறிப்பு வரைக.
3. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?
4. சீவக சிந்தாமணி நூலின் மையக்கருத்து என்ன?
5. சீவக சிந்தாமணி நூலை எழுதியவர் யார்?

### ஈ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக.

1. கல்வி குறித்துச் சீவக சிந்தாமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
2. 'சொல்அரும் சூல்பசும்' எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

## 9.3 படிப்போம்

### தமிழ் இலக்கியத்தில் கல்வியின் சிறப்பு

கல்வி கண் போன்றது. ஒருவரின் அறிவை வளர்ப்பதில் கல்வி பெரும்பங்கு வகிக்கிறது. தமிழ் இலக்கியங்களில் கல்வி பற்றிய செய்திகள் நிறைந்து காணப்படுகின்றன. மனித உயிர்க்குக் கண்ணாகக் கருதப்படுவது கல்வியே என்பதைத் திருவள்ளுவர்,

**'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு'**

என்னும் குறள்வழி வெளிப்படுத்துகிறார்.

கண்களாகப் போற்ற வேண்டிய கல்வியைக் கற்பிப்பவர் ஆசிரியர். ஆகவே தன் ஆசிரியருக்கு ஒரு துன்பம் வந்த காலத்தில் அதைத் தீர்க்க உதவி செய்ய வேண்டும். பணிவோடு நடந்துகொள்ளுதல் வேண்டும். நற்செயல்கள் அனைத்தையும் கடைப்பிடித்து, வெறுப்பின்றிக் கல்வியைப் பெற வேண்டும் என்று புறநானூறு குறிப்பிடுகிறது.

### கற்றோர் சிறப்பு

கற்க வேண்டிய நூல்களை முழுமையாகக் கற்றுத் தேர்ந்தவர்களே அறிவுடையார் எனப்படுகின்றனர். அவ்வாறு கற்றோர் உலகின் எப்பகுதிக்கும் எளிமையாகச் செல்ல முடியும். கற்றோர்க்கு எல்லா நாடும் தம்நாடு போன்றதேயாகும். கல்வி கற்றோர் வழியில் உண்பதற்கு உணவுகூடக் கொண்டுசெல்ல வேண்டியதில்லை எனப் பழமொழி நானூறு கல்வி கற்றோரின் சிறப்புகளை எடுத்துரைத்துள்ளது. இதிலிருந்து கற்றோர்க்கு அவர்கள் கற்ற கல்வியே எல்லா நிலையிலும் துணையாக நிற்கும் என்பதை அறிய முடிகிறது.

ஒரு நாட்டின் அரசரையும் குற்றம் நீங்கக் கற்றோரையும் ஒப்பிட்டுப் பார்த்தால் கற்றோரே அரசரைக் காட்டிலும் சிறப்புடையவர். அரசருக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு இருக்கும். கற்றோருக்குத் தன் நாடு மட்டுமன்றி அவர்கள் செல்லும் எல்லா நாடுகளிலும் சிறப்பு உண்டாகும் என்று மூதுரை குறிப்பிடுகிறது.

### கல்வி அழகே அழகு

சமுதாயத்தை மேம்படுத்தும் ஆற்றல் உடையது கல்வி. புறத்தோற்றத்தில் வெளிப்படும் அழகெல்லாம் அழகல்ல. 'கல்வி கற்றதனால் நான் நற்பண்பு உடையவன்' எனக் கருதும் மனநிலையே ஒருவருக்கு அழகு என்று நாலடியார் குறிப்பிடுகிறது. கற்பவருக்கு இன்பத்தைக் கொடுப்பது கல்வி. மற்றவருக்குக் கொடுக்க கொடுக்கக் குறையாமல் அதிகரிக்கும் பண்புடையது கல்வி. இது புகழைக் கொடுப்பது, அறியாமையைப் போக்குவது. அறியாமை நீங்கப்பெற்ற ஒருவர் பெறும் அழகே உண்மையான அழகாகும். இவ்வுண்மை அழகைப் பெற உதவுவது கல்வியே.

**பெண்கல்வி**

தமிழகத்தில் பெண்கள் கல்வி கற்க வேண்டும் என்பதை உணர்ந்து பெண்கல்விக்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர். பாரதியார், கல்வி கற்ற பெண்கள் பல நாடுகளுக்குப் பயணம் செய்து அங்குள்ள புதுமைகளைக் கொண்டுவந்து தம் நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும் என்கிறார். சங்ககாலத்தில் பெண்பாற் புலவர்கள் பலர் இருந்துள்ளனர். இச்செய்தி அக்காலகட்டத்தில் பெண்கல்வி சிறப்புற்றிருந்தமையை உணர்த்துகிறது. இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் பெண்கல்வியில் சற்றுப் பின்னடைவு ஏற்பட்ட நிகழ்வுகளை அந்தந்தக் காலகட்டத்தில் எழுந்த இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. இருபதாம் நூற்றாண்டின் ஒப்பற்ற கவிஞர்கள் பெண்கல்விக்காக உரத்த குரலில் தங்கள் கருத்துகளைக் கவிதைகளாகப் பதிவு செய்துள்ளனர். தற்போது பெண்கல்வியில் நாம் சிறப்புற்றிருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. எண்ணும் எழுத்துமாக இருப்பது எது?

அ) கணிதம் ஆ) கல்வி

இ) அறிவியல் ஈ) உயிர்

2. கற்றவர் பிற நாடுகளுக்கு எளிமையாகச் செல்ல முடியும் எனக் கூறும் நூல்?

அ) பழமொழி நானூறு ஆ) நன்னெறி

இ) நாலடியார் ஈ) நான்மணிக்கடிகை

3. கல்வி கற்ற பெண்கள் பல நாடுகளுக்குச் சென்று புதுமைகளைக் கொண்டுவர முடியும் என்றவர்.

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்

இ) கவிமணி ஈ) திருவள்ளுவர்

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.


1. நாலடியார் எதை அழகு என்று கூறுகிறது?
2. பெண்கல்வி குறித்து பாரதியார் கூறும் கருத்துகள் யாவை?

### இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. தமிழ் இலக்கியங்களில் உள்ள கல்வி பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

## 9.4 தெரிந்துகொள்வோம்

### பகுபத உறுப்புகள்




ஒரே சொல்லில் இந்த ஆறு உறுப்பும் அமையலாம். ஒன்றோ பலவோ குறைந்தும் வரலாம்.

எ.கா: வாழ்ந்தனர் = வாழ் + த் (ந்) + த் + அன் + அர்
வாழ் - பகுதி;
த் - சந்தி; த்(ந்) ஆனது விகாரம்;
த் - இறந்தகால இடைநிலை;
அன் - சாரியை; அர் - பலர்பால் வினைமுற்று விகுதி.
வாழ்க = வாழ் + க
வாழ் - பகுதி; க - வியங்கோள் வினைமுற்று விகுதி

### பகுதி

ஒரு பகுபதத்தின் முதலில் அமையும் உறுப்பு பகுதி ஆகும். எனவே, இதனை 'முதனிலை' என்றும் வழங்கலாம். விகுதி பெறாத ஏவல் வினையாக வரும். பகுபதத்திலுள்ள பகுதி பொருள் உடையதாக இருக்கும். இது பெயர்ப்பகுதி, வினைப்பகுதியாக அமையும்.

### பெயர்ப்பகுதி

சான்று: வெற்பன் = வெற்பு + அன்

இச்சான்றில் வெற்பு என்பது பெயர்ப்பகுதியாகும்.

### வினைப்பகுதி

சான்று : எழுதினார்= எழுது + இன் + ஆர்

இச்சான்றில் எழுது என்பது வினைப்பகுதியாகும்.

### விகுதி

பகுபதத்தின் இறுதியில் நிற்கும் உறுப்பு விகுதி ஆகும். இதனை இறுதிநிலை என்றும் வழங்குவர்.

படித்தாள் என்னும் பகுபதத்தில் (படி + த் + த் + ஆள்) ஆள் என்பது விகுதி ஆகும். இது திணை (உயர்திணை), பால் (பெண்பால்), எண், (ஒருமை) இடம் (படர்க்கை) ஆகியவற்றைக் காட்டிநிற்கும்.

### ஆண்பால் விகுதிகள்

அன், ஆன், மன், மான்

சான்று: வெற்பன்(அன்), வானத்தான்(ஆன்), சென்றான்(ஆன்), வந்தனன் (அன்)

### பெண்பால் விகுதிகள்

அள், ஆள், தற்போது இ, ஐ என்ற விகுதிகளும் வருகின்றன.

சான்று: இவள் (அள்), குழலாள்(ஆள்), பொன்னி(இ), கோதை (ஐ),
உண்டாள் (ஆள்)

### பலர்பால் விகுதிகள்

அர், ஆர், மார்,

சான்று: பெரியர்(அர்), ஓதுவார்(ஆர்), தேவிமார்(மார்)

### ஒன்றன்பால் விகுதி

'து' ஈற்றில் முடிவது ஒன்றன்பால் ஆகும்.

சான்று: அது, யாது, அஃது,

### பலவின்பால் விகுதிகள்

வை, அ, கள்.

சான்று: அவை (வை), கரியன (அ), கிளிகள் (கள்).

### இடைநிலை

முதனிலைக்கும் (பகுதி) இறுதிநிலைக்கும் (விகுதி) இடையில் நிற்கும் உறுப்பு இடைநிலை. பெரும்பாலும் காலம்காட்டும் உறுப்பாகவும், எதிர்மறைப் பொருள்தரும் உறுப்பாகவும் வரும்.

சான்று: கவிஞன் = கவி + ஞ் + அன் (பெயர் இடைநிலை)
படிப்பான் = படி + ப் + ப் + ஆன் (வினை இடைநிலை)

மேற்கண்ட சான்றில் – படி – முதனிலை (பகுதி); ப் – சந்தி; ப் - எதிர்கால இடைநிலை; ஆன் – இறுதிநிலை (விகுதி)

இந்த இடைநிலை இறந்தகால இடைநிலை, நிகழ்கால இடைநிலை, எதிர்கால இடைநிலை என மூன்றாகும்.

- ❖ இறந்தகால இடைநிலை - த், ட், ற், இன்
- ❖ நிகழ்கால இடைநிலை - கிறு, கின்று, ஆநின்று
- ❖ எதிர்கால இடைநிலை - ப், வ்
- ❖ எதிர்மறை இடைநிலை - ஆ, அல், இல்

**சந்தி**

இது பெரும்பாலும் முதனிலை (பகுதி)க்கும் இடைநிலைக்கும் இடையில் வரும். பகுதிக்கும் விகுதிக்கும் இடையிலும் சில நேரங்களில் வரக்கூடும். உறுப்புகளின் இணைவில் (சந்தி), அவற்றை இணைக்க வருவது சந்தி.

சான்று: நடத்தல் = நட + த் + தல்

நட - பகுதி; த் - சந்தி; தல் - விகுதி

பகுதிக்கும், விகுதிக்கும் இடையில் 'த்' சந்தி வந்திருப்பதைக் காண முடிகிறது.

**சாரியை**

இது பெரும்பாலும், இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும் உறுப்பு ஆகும்.

சான்று: நடந்தனன் = நட + த் (ந்) + த் + அன் + அன்

இங்கு இடைநிலைக்கும் (த்) விகுதிக்கும் (அன்) இடையில் அமைந்திருக்கும் 'அன்' சாரியை ஆகும்.

சாரியை = சார்ந்து இயைந்து நிற்பது. தனக்கெனப் பொருள் எதுவும் இன்றி உறுப்புகள் இணையும்போது இடையில் வருவது.

**விகாரம்**

விகாரம் என்பது தனி உறுப்பு இல்லை. பகுதி, விகுதி, முதலான உறுப்புகள் சேர்தலால் ஏற்படும் மாற்றத்தை விகாரம் என்கிறோம்.

சான்று: கண்டான் = காண் (கண்) + ட் + ஆன்

காண் என்னும் பகுதி கண் என விகாரப்பட்டது. பகுதி தொழிலை உணர்த்தும் ஏவலாக இருக்கும். மூன்று காலங்களுக்கும் ஒன்றே ஆகையால் 'காண்' என்பதே பகுதியாக இருக்க வேண்டும்.

சான்று: நடந்தான் = நட + த் (ந்) + த் + ஆன்

இதில் 'நட' என்னும் பகுதியை அடுத்துள்ள சந்தி 'த்' ஆகும். இச்சந்தியைத் திரிக்காமல் எடுத்துக்கொண்டால் 'நடத்தான்' என்று கூற வேண்டும். ஆனால் நடந்தான் என்பது சொல்லாகையால் 'த்' என்னும் சந்தி 'ந்' எனத் திரிந்து வந்துள்ளது.

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இறந்தகால இடைநிலைகளைக் காண்க.

   அ) த், ட், ற் ஆ) கிறு, கின்று இ) ப், வ் ஈ) ஆ, அல், இல்

2. பலர்பால் விகுதிகளைத் தேர்க.

   அ) அர், ஆர், மார் ஆ) வை, அ, கள் இ) அன், ஆன் ஈ) அள், ஆள்

3. பின்வருவனவற்றுள் திணை, பால், எண், இடம் உணர்த்துவது.

   அ) பகுதி ஆ) விகுதி இ) இடைநிலை ஈ) சந்தி

4. முதனிலை - இறுதிநிலை என அழைக்கப்படுபவை.

   அ) பகுதி - சந்தி ஆ) விகுதி - சந்தி இ) சந்தி - விகாரம் ஈ) பகுதி - விகுதி

5. விகுதி பெறாத ஏவல் வினையாக வருவது.

   அ) பகுதி ஆ) இடைநிலை இ) விகுதி ஈ) சந்தி

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?
2. காலம்காட்டும் இடைநிலைகளை எழுதுக.
3. பகுபதத்தில் சந்தி, சாரியை எவ்வெவ்விடங்களில் அமையும்?
4. விகுதிகள் எவற்றை உணர்த்தும்?
5. பகுபத உறுப்பிலக்கணத்தை விளக்குக.

| | பகுதி | சந்தி | விகாரம் | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| வாழ்க | | | | | | |
| பெயர்த்த | | | | | | |
| மகிழ்ந்தாள் | | | | | | |
| வந்தனள் | | | | | | |
| பாடுகிறான் | | | | | | |
| பேசுவார் | | | | | | |

## 9.5 மொழியோடு விளையாடுவோம்

### இரட்டைக் கிளவியால் நிரப்புக

(மட மட, கல கல, குடு குடு, சட சட, கூ கூ, பட பட )



________ ________ வென முறிந்தது.



________ ________ வெனக் கூவியது.



________ ________ வெனப் பேசினாள்.



________ ________ வெனப் பெய்தது.



________ ________ வென ஓடினான்.

## தகவல் துளி

சமண சமயத்தைச் சேர்ந்த திகம்பரத் துறவிகள் மலைக்குகையில் தங்கினர். அவர்கள் தங்களின் தங்குமிடங்களிலேயே கல்வியையும் சமயக் கருத்துகளையும் மாணவர்களுக்குக் கற்பித்தனர். 'பள்ளி' என்ற சொல்லுக்குப் 'படுக்கை' என்று பொருள். சமணர்களின் படுக்கைகள் மீது மாணவர்கள் அமர்ந்து கல்வி கற்றதனால் கல்விக்கூடம், பள்ளிக்கூடம் என அழைக்கப்படலாயிற்று. பள்ளி என்னும் சொல் சமண, பௌத்த சமயங்களின் கொடையாகும். பெண்களுக்கெனத் தனியாகக் கல்வி கற்பிக்கும் சமணப் பள்ளிகள் பெண் பள்ளிகள் என்று அழைக்கப்பட்டன.

## 9.6 கேட்டல் கருத்தறிதல்

### திருவள்ளுவர் சிலை

உலகப்பொதுமறை என்று அழைக்கப்படும் திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவருக்குத் தமிழ்நாட்டில் கன்னியாகுமரியில் சிலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அரபிக்கடல், வங்காள விரிகுடா, இந்தியப் பெருங்கடல் ஆகிய மூன்று கடல்களும் சங்கமிக்கும் பகுதியில் இச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. கருங்கல்லால் கட்டப்பட்ட உலகின் மிக உயரமான சிலை இதுவே ஆகும். இச்சிலையின் உயரம் 133 அடிகள் ஆகும். திருக்குறளின் 133 அதிகாரங்களையும் குறிக்கும் வகையில் 133 அடிகளில் இச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. இந்நூலின் அறத்துப்பாலின் 38 அதிகாரங்களைக் குறிக்கும் வகையில் இச்சிலையின் பீடம் 38 அடிகளில் அமைக்கப்பட்டுள்ளது. பீடத்தின் மேல் நிற்கும் சிலையானது 95 அடிகள் உயரம் கொண்டது. இது பொருட்பாலின் 70 அதிகாரங்களையும் காமத்துப்பாலின் 25 அதிகாரங்களையும் குறிக்கின்றது. பீடத்தின் சுவரில் அதிகாரத்திற்கு ஒரு குறள் வீதம் 133 குறட்பாக்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சிலை அமைக்கும் பணி 1990ஆம் ஆண்டு முதல் 2000ஆம் ஆண்டுவரை தொடர்ந்து 10 ஆண்டுகள் நடைபெற்றது. 01-01-2000இல், தமிழக முதல்வராக இருந்த கலைஞர் கருணாநிதி அவர்களால் இச்சிலையானது திறந்து வைக்கப்பட்டது. உலகையே சூறையாடிய சுனாமி தாக்குதலிலும் சிறுதும் சேதமடையாமல் கம்பீரமாகவே நிற்கின்றது.

இன்று கன்னியாகுமரி செல்லும் மக்கள் இச்சிலையை மிகுந்த வியப்போடு பார்த்துச் செல்கின்றனர். கடல் அரிப்பால் பாதிப்பு ஏற்படாதவண்ணம் இச்சிலை, தமிழ்நாட்டரசால் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சிலையை நிறுவியது தமிழ்நாட்டின் வரலாற்றில் மிக முக்கியமான நிகழ்வாகும். இச்சிலையை வடிவமைத்த தலைமைச் சிற்பி திரு. கணபதி ஸ்தபதி ஆவார்.

### வினாக்கள்

1. உலகப் பொதுமறையை இயற்றியவர் யார்?
2. கன்னியாகுமரியில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலையின் உயரம் என்ன?
3. கன்னியாகுமரியிலுள்ள திருவள்ளுவர் சிலை எப்போது யாரால் திறந்துவைக்கப்பட்டது?
4. உலகின் உயரமான கருங்கல்லால் செய்யப்பட்ட சிலையின் அமைவிடம் குறித்து எழுதுக.
5. திருவள்ளுவர் சிலையின் பீடத்தில் எழுதியுள்ள குறட்பாக்கள் எத்தனை?

## 9.7 மொழிபெயர்ப்போம்

இன்றைய உலகில் கல்வி மிகவும் இன்றியமையாதது ஆகும். கல்வி ஒரு மனிதனின் அறிவைத் திறக்கும் திறவுகோலாகும். கல்வி ஒருவரின் அறிவையும் ஆற்றலையும் மேம்படுத்திச் சமுதாயத்தில் உயர்நிலையை வழங்குகிறது. ஒருவர் குழந்தைப் பருவத்தில் கல்வி கற்கத் தொடங்கி, வாழ்நாள் முடியும் வரை கற்கலாம், அதற்கு எல்லையே கிடையாது.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

## 9.8 அறிந்துகொள்வோம்

1. துன்பம் - Misery
2. பணிவு - Humility
3. கற்றோர் - Scholar
4. சமூகம் - Society
5. மேம்பாடு - Development
6. அழகு - Beauty
7. புகழ் - Fame
8. அறியாமை - Ignorance
9. உண்மை - Truth
10. பயணம் - Travel
11. புதுமை - Novelty
12. வளர்ச்சி - Progress
13. பின்னடைவு - Regression
14. கவிதை - Poem

## 9.9 உயர்நிலைத்திறன்

**கல்வியின் சிறப்பை விளக்கும் வகையில் பாடல் உருவாக்குக. முதலில் தொடங்கும் சொல் அகரவரிசைப்படி அமைய வேண்டும்.**

அனைவரும் கல்வி கற்போமே!

ஆவலுடன் பள்ளி செல்வோமே!

இ ________________________________

ஈ ________________________________

உ ________________________________

ஊ ________________________________

எ ________________________________

ஏ ________________________________

ஐ ________________________________

ஒ ________________________________

ஓ ________________________________


ஔ ________________________________

## 9.10 செயல்திட்டம்

கல்வியின் சிறப்பை விளக்கும் திருக்குறள் கருத்துகளைத் தொகுத்து எழுதி வருக.

பாடம்
# 10

## 10.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

தகவல் பரிமாற்றத் துறையில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சி குறித்து வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 10.2 படிப்போம்

### கல்வி செழித்தால்...

சமூக மாற்றத்திற்கான காரணிகளுள் முதன்மையானது கல்வி. ஒரு மனிதனை முழுமையானவனாக மாற்றும் ஆற்றலுடையதும் கல்வியே. கல்வி செழித்தால் சமூகம் செழிக்கும்.

தாமரைப் பூவில் மதுவதிகம்
தனித்தமிழ்ச் சொல்லில் சுவையதிகம்
பாமரர் நெஞ்சில் இருளதிகம்
படித்தவர் நெஞ்சில் தெளிவதிகம்.
கல்வி செழித்தால் கவிதைவரும்
கற்பன கற்றால் திறமை வரும்
செல்வம் திரண்டால் செழிப்புவரும்
திறமை மிகுந்தால் புகழ்வளரும்.

- சுரதா

### பாடலின் பொருள்

தாமரைப்பூ தேன் அதிகம் கொண்டது. தமிழ்ச் சொல் சுவை மிகுந்தது. கல்வியறிவற்றவர் உள்ளம் அறியாமை எனும் இருள் உடையது; கல்வி அறிவு பெற்றவர் உள்ளம் அறிவுத் தெளிவு நிறைந்தது.

கல்வி செழிப்பதனால் கவிதை பிறக்கும். கற்பதை நன்கு கற்றால் திறமை வளரும். செல்வம் பெருகினால் வாழ்வு வளம்பெறும். திறமையால் மிகுந்த புகழ் வந்து சேரும்.

### நூலைப் பற்றி

இக்கவிதை 'தேன்மழை' என்னும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. இதனை எழுதியவர் சுரதா. இவரது இயற்பெயர் இராசகோபாலன். பாரதிதாசன் மீது கொண்ட பற்றால் பாரதிதாசனின் இயற்பெயரான 'சுப்புரத்தினம்' என்பதுடன் 'தாசன்' என்பதைச் சேர்த்து, முதலெழுத்துகளைக் கூட்டித் தம்பெயரைச் சுரதா என மாற்றிக்கொண்டார். இவர் 'உவமைக்கவிஞர்' என்று சிறப்பிக்கப்படுகிறார். காவியம் என்னும் இதழை நடத்தினார். துறைமுகம், சுவரும் சுண்ணாம்பும், சிக்கனம், அமுதும் தேனும், நெய்தல் நீர் போன்ற நூல்களை இயற்றியுள்ளார். இவரது தேன்மழை என்னும் கவிதை நூலுக்குத் தமிழ்நாடு அரசின் விருது கிடைத்தது.

### பொருள் அறிவோம்

1. மது - தேன்
2. பாமரர் - கல்வியறிவற்றவர்
3. செழிப்பு - வளம்

## பயிற்சிகள்

### அ) கீழ்க்காணும் தொடர்களிலுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புக.

(இராசகோபாலன், தேன்மழை, சமூகம், சுரதா, காவியம்)

1. உவமைக்கவிஞர் என்று அழைக்கப்படுபவர் ____________________.
2. கல்வி செழித்தால் ____________________ செழிக்கும்.
3. சுரதாவின் ____________________ என்னும் கவிதை நூல் தமிழ்நாடு அரசின் விருதைப் பெற்றது.
4. கவிஞர் சுரதா ____________________ என்னும் இதழை நடத்தினார்.
5. கவிஞர் சுரதாவின் இயற்பெயர் ____________________.

### ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக.

1. சுரதாவின் இயற்பெயர் கோபாலன். (சரி/தவறு)
2. கல்வி செழித்தால் சமூகம் செழிக்கும். (சரி/தவறு)
3. கல்வியறிவற்றவர் உள்ளம் தெளிவு பெற்றது. (சரி/தவறு)
4. கவிஞர் சுரதா 'உவமைக் கவிஞர்' எனச் சிறப்பிக்கப்படுகிறார். (சரி/தவறு)
5. கவிஞர் சுரதாவின் சிக்கனம் என்னும் நூலுக்குத் தமிழ்நாடு அரசின் விருது கிடைத்தது. (சரி/தவறு)

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. சுரதா இயற்றிய கவிதை நூல்களுள் ஐந்தினைக் கூறுக.
2. இராசகோபலன், தம் பெயரைச் சுரதா என மாற்றிக்கொள்ளக் காரணம் என்ன?
3. சுரதா நடத்திய இதழின் பெயரை எழுதுக.
4. சமூக மாற்றத்திற்கான காரணிகளுள் முதன்மையானது எது?
5. கல்வி அறிவு பெற்றவர் உள்ளம் எத்தகைய தன்மையுடையது?

### ஈ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக.

1. 'கல்வி செழித்தால்' என்னும் தலைப்பில் சுரதா கூறும் கருத்துகளை எழுதுக.
2. 'கல்வி செழித்தால்' என்னும் கவிதை வரிகளைப் பிழையின்றி எழுதுக.

## 10.3 படிப்போம்

### வலைப்பூவில் பதிவேற்றம்

தகவல் தொடர்புச் சாதனங்களின் வருகைக்கு முன் பிறருடன் நம்மால் எளிதாகத் தொடர்புகொள்ள இயலவில்லை. இக்காலத்தில் இணைய வசதியின் காரணமாக நொடிப் பொழுதில் பிறருடன் தொடர்புகொண்டு நம் கருத்தைப் பகிரவும் பிறர் கருத்தைப் பெறவும் வலைத்தளங்கள் பயன்படுகின்றன. நமக்கென்று தனி வலைப்பூவை உருவாக்க முடியும். வலைப்பூவில் எவ்வாறு பதிவேற்றம் செய்வது என்பதைப் பற்றி இப்பாடப் பகுதியில் காண்போம்.



**மாறன்** : வணக்கம் கோதை. நலமாக உள்ளாயா? நான் உன்னிடம் ஒரு மகிழ்வான செய்தி கூறப்போகிறேன்.

**கோதை** : என்ன மகிழ்வான செய்தி மாறா?

**மாறன்** : நான் அடுத்த வாரம் தமிழ்நாடு செல்லவுள்ளேன் கோதை.

**கோதை** : உண்மையில் மகிழ்வான செய்திதான். எதற்காகச் செல்ல உள்ளாய்? தெரிந்தால் மேலும் மகிழ்வேன் மாறன்.

**மாறன்** : எனது வலைப்பூவில் நான் 'ஆர். பாலகிருஷ்ணன்' அவர்களின் 'சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்' என்னும் நூலைப் படித்துவிட்டு அதற்கான பின்னூட்டம் எழுதியிருந்தேன். அதை அவர் படித்துவிட்டு என்னை நேரில் சந்திக்க அழைத்துள்ளார் கோதை.

**கோதை** : 'வலைப்பூ' என்றால் என்ன மாறன்?

**மாறன்** : Blog என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல் வலைப்பூ, கோதை.

**கோதை** : ஓ.. வலைப்பூவில் நாம் எழுதுவதை யார் வேண்டுமானாலும் படிக்கலாமா மாறா? நீ எந்த மொழியில் எழுதுகிறாய்?

**மாறன்** : ஆம். உலகில் எங்கிருப்போரும் வலைப்பூவில் எழுதியுள்ளதைப் படிக்க முடியும் கோதை. நான் தமிழ் மொழியில் எழுதிவருகிறேன் கோதை.

**கோதை** : வலைப்பூவின் வரலாறு குறித்து சொல்ல முடியுமா?

**மாறன்** : ஓ... சொல்கிறேனே. வெப்லாக் (Weblog) என்ற பெயர் முதன்முதலில் 17-12-1997இல் ஜான் பார்கெர் (Jorn Barger) என்பவரால் உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டது. குறுக்க வடிவமான blog என்ற சொல்லைப் பீட்டர் மெர்கோல்ஸ் (Peter Merholz) என்பவரே முதன்முதலில் பயன்படுத்தினார்.

**கோதை** : வலைப்பூவில் தமிழ் மொழி எப்போது பயன்பாட்டுக்கு வந்தது?

**மாறன்** : வலைப்பூவை, வலைப்பதிவு என்றும் கூறுவர். முதல் தமிழ் வலைப்பதிவாளராய் கார்த்திகேயன் ராமசுவாமி கருதப்படுகிறார். இவரது முதல் தமிழ்ப் பதிவு ஜனவரி 01, 2003இல் இடப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் 31ஆம் நாள் உலக வலைப்பதிவாளர்கள் நாளாகக் கொண்டாடப்படுகிறது.

**கோதை** : நான் வலைப்பூவில் எழுத முடியுமா மாறன்? வலைப்பூப் பக்கத்தை எவ்வாறு உருவாக்குவது?

**மாறன்** : ப்ளாக் என்பது இணையதளம் போன்றது. ஆனால் எந்தச் செலவுமில்லாமல் அதனைத் தொடங்கலாம். Blogger, Wix, WordPress, Squarespace, Medium, LinkedIn என்பன இலவச ப்ளாக் ஆரம்பிக்க வசதி தரும் தளங்கள். இவற்றுள் கூகுலின் blogspot தளம் மிகவும் புகழ்பெற்றது. ஓரளவு எழுத்தாற்றல் இருந்தால்கூட, ஒரு கூகுள் கணக்குடன் வலைப்பூ ஆரம்பிக்கலாம்.

**மாறன்** : முதலில் கூகுளில் ஒரு மின்னஞ்சல் கணக்கைத் தொடங்குக. மின்னஞ்சல் கணக்கைத் தொடங்கியவுடன் வலைப்பூ வசதிக்குச் செல்க. சென்றவுடன் "புதிய வலைப் பதிவை உருவாக்குக" என்ற பக்கம் வரும். அதில் உனது வலைப்பூவிற்கான பெயரையும் வலைப்பூ முகவரியையும் தட்டச்சு செய்து, "வலைப்பதிவை உருவாக்கு" என்பதைச் சொடுக்கவும்.

**கோதை** : வலைப்பூவில் எவற்றையெல்லாம் எழுதலாம் மாறன்?

**மாறன்** : வலைப்பூ நாம் நமக்காகவே உருவாக்கிக்கொள்ளும் தளம். அதில் கட்டற்ற சுதந்திரத்தோடு நமது கருத்துகளை வலிமையாக வைக்கலாம். சமூக அக்கறையோடு கருத்துகளை உலகோடு பகிர்ந்துகொள்ள வலைப்பூ மிகச் சிறந்த படைப்புக்களமாக விளங்குகிறது. புதினம், நாடகம், சிறுகதை, நேர்காணல்கள், மொழிபெயர்ப்பு, கட்டுரைகள் ஆகியவற்றை நாம் பதிவேற்றலாம்.

**கோதை** : பயனுள்ள தகவல்களைத் தந்தாய் மாறன். இன்றைக்கே நானும் வலைப்பூக் கணக்கை ஆரம்பித்து எழுதத் தொடங்குகிறேன்.

**மாறன்** : நன்றி மீண்டும் சந்திப்போம் கோதை.

### வலைப்பூ திரட்டிகள்

1. திரட்டி.இன் (http://www.thiratti.in)
2. வலைப்பூக்கள் (http://www.valaipookal.com)
3. தமிழ்மணம் (http://www.tamilmanam.net)
4. திரட்டி.காம் (http://www.thiratti.com)
5. தகவல் இன்போ (http://www.thakaval.info/blogs)
6. தேன்கூடு (http://www.thenkoodu.com)
7. தமிழ்வெளி (http://www.tamilveli.com)
8. சங்கமம் (http://www.tamil.blogkut.com)

உலகம் கிராமம் ஆவதற்குச் சமூக வலைத்தளங்கள் உதவுகின்றன. சமூக வலைத்தளங்களை நாம் பாதுகாப்பாகப் பயன்படுத்த வேண்டும்.

| வலைப்பூ கலைச்சொற்கள் | | |
|---|---|---|
| 1. | வலைப்பதிவர் | வலைப்பதிவில் எழுதுபவர். |
| 2. | வார்ப்புரு | வலைப்பூச் சட்டகம். |
| 3. | வலைப்பதிவர் சமுதாயம் | திரட்டிகள் மூலம் இணைந்து தம்முள் இடைத்தொடர்புகளைப் பேணும் வலைப்பதிவர்கள். |
| 4. | பதிவிடல் | உள்ளடக்கத்தினை வலைப்பதிவொன்றில் வெளியிடல். |
| 5. | பெயரிலி/முகமூடி | தன்னை அடையாளப்படுத்தாது மறுமொழிகள் இடுபவர். |
| 6. | கூட்டுப்பதிவு/ கூட்டு வலைப்பதிவு | ஒன்றுக்கு மேற்பட்டவர்களால் பராமரிக்கப்படும் வலைப்பதிவுகள். |
| 7. | இடுகை | வலைப்பதிவில் உள்ளடக்கம் ஒன்றினை இடும் செயல் (வினை) வலைப்பதிவொன்றில் உள்ளிடப்பட்ட உள்ளடக்கம் (பெயர்) |

## பயிற்சிகள்

### அ) பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | இடுகை | – | வலைப்பூவில் எழுதுபவர் |
| 2. | பெயரிலி | – | வலைப்பூச் சட்டகம் |
| 3. | வலைப்பதிவர் | – | வலைப்பூவில் உள்ளடக்கத்தை இடல் |
| 4. | வார்ப்புரு | - | தன்னை அடையாளப்படுத்தாதவர் |

### ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக.

1. வலைப்பூ தொடங்கக் கூகுளில் ஒரு மின்னஞ்சல் கணக்கு வேண்டும். (சரி/தவறு)
2. வலைப்பூவில் சுதந்திரத்தோடு நமது கருத்துகளை வலிமையாக வைக்க இயலாது. (சரி/தவறு)
3. Blog என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல் வலைப்பூ. (சரி/தவறு)
4. வலைப்பூவில் நாம் எழுதுவதை யார் வேண்டுமானாலும் படிக்க இயலாது. (சரி/தவறு)
5. வெப்லாக் என்ற பெயர் ஜான்பார்கெர் என்பவரால் உருவாக்கப்பட்டது. (சரி/தவறு)

### இ) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. வலைப்பூ என்றால் என்ன?
2. வலைப்பூக்கள் எதற்காகப் பயன்படுகின்றன?
3. மாறன் வலைப்பூவில் எந்த நூலுக்காகப் பின்னூட்டம் எழுதியிருந்தான்?
4. வலைப்பூ வரலாற்றை விளக்குக,
5. வலைப்பூவில் தமிழ் மொழி எப்போது பயன்பாட்டுக்கு வந்தது?

### ஈ) கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக.

1. வலைப்பூவின் வரலாற்றை எழுதுங்கள்.
2. வலைப்பூக் கணக்கைத் தொடங்கி எதைக் குறித்து எழுத விரும்புகிறீர்கள்?

## 10.4 தெரிந்துகொள்வோம்

### மூவகை மொழி

சொற்பொருள் அடிப்படையில் மொழி மூவகைப்படும். அவை,

1) தனிமொழி

2) தொடர்மொழி

3) பொதுமொழி என்பவை ஆகும்.

### தனிமொழி

ஒரு சொல் தனித்து வந்து ஒரு பொருளைத் தந்தால் அது தனிமொழி எனப்படும்.

(எ.கா) செல், போ, கண், மரம்

இங்கே, எடுத்துக்காட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தனிச்சொல் ஒவ்வொன்றும் தனக்கான ஒரே ஒரு பொருளில் மட்டும் வந்துள்ளது.

### தொடர்மொழி

தனிமொழிகள் பல தொடர்ந்து வந்து பொருளைத் தந்தால் அது தொடர்மொழி எனப்படும்.

(எ.கா) அறம் செய், அறநூல் படி, இன்சொல் கூறு, பண்பு காட்டு

இங்கே தனிச்சொற்கள் பல தொடர்ந்து வந்து பொருளைத் தந்துள்ளன.

### பொதுமொழி

ஒரு சொல்லே தனிமொழியாக நின்று ஒரு பொருளையும், தொடர்மொழியாகப் பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்தால் அது பொதுமொழி எனப்படும். அதாவது, தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாக வரும் சொல்லே பொதுமொழி.

(எ.கா) வேங்கை

வேங்கை என்னும் ஒரு சொல், தனிமொழியாக நின்று புலி என்னும் விலங்கைக் குறிக்கும். வேங்கை என்னும் சொல்லை வேம் + கை என்று பிரித்தால் 'வேகின்ற கை' என்னும் தொடர்மொழியாக நின்று கையைக் குறிக்கும்.

**"ஒரு மொழி ஒரு பொருளனவாம் தொடர்மொழி**
**பல பொருளன பொது இருமையும் ஏற்பன"**

(நன்னூல் : 260)

**சிந்தனை வினா :** 'வைகை' –இச்சொல் தனிமொழியா? பொதுமொழியா? பொதுமொழியாயின் இருபொருள் தருக.

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தனிமொழி அல்லாத சொற்களின் தொகுதி.

அ) சென்ற பையன், படித்த மாணவன்

ஆ) கண், விண்

இ) படி, வந்த மாணவன்

ஈ) பலகை, மான்

2. தனிமொழியாகவும் தொடர்மொழியாகவும் வருவனவற்றை மட்டும் தேர்ந்தெடுக்க.

அ) வேங்கை, முருங்கை

ஆ) பலகை, வலக்கை

இ) அந்தமான், புள்ளிமான்

ஈ) வேங்கை, பலகை

### ஆ) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தனிமொழியைச் சான்றுடன் விளக்குக.

2. பொதுமொழி எவ்வாறு அமையும்? சான்று தருக.

3. சான்று தந்து கட்டங்களை நிறைவு செய்க.

| வ.எண் | சொல் | தனிமொழி | தொடர்மொழி | பொதுமொழி |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |

4) பின்வரும் தொடர்களில் உள்ள தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழிகளைக் கண்டு எழுதுக.

அ) பாடம் படித்தேன், அது சுவைத்தேன்.

ஆ) தாமரை காண அருமையாய் இருக்கிறது.

இ) வேங்கை கண்டு அதிர்ந்தான்.

## 10.5 கருத்து விளக்கப்படம்




### வினாக்கள்

1. 2023 ஆம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழா யாரால் நடத்தப்பட்டது?
2. புத்தகத் திருவிழா எத்தனை நாள்கள் நடைபெற்றது?
3. புத்தகத் திருவிழா அறிவிப்பில் இடம்பெற்றுள்ள கவிதையை எழுதுக.
4. புத்தகத் திருவிழாவில் புத்தகங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடி எவ்வளவு?
5. புத்தகத் திருவிழா எத்தனை மணிக்குத் தொடங்கி எத்தனை மணிக்கு நிறைவடைந்தது?

## தகவல் துளி

### இல்லம் தேடிக் கல்வி

இல்லம் தேடிக் கல்வி என்ற புதிய திட்டத்தைத் தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித்துறை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் கொரோனா பேரிடர்க் காலங்களில் கல்வி பாதிப்படையக் கூடாது என்ற நோக்கத்தால் உருவாக்கப்பட்டது. 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான குழந்தைகளின் கற்றல் இடைவெளியைக் குறைத்தது. முறையான கல்வித்தகுதியுடன் பயிற்சி பெற்ற 2 லட்சம் தன்னார்வலர்கள் பணியாற்றுகின்றனர். ஒவ்வொரு நாளும் மாலை 5 மணி முதல் 7 மணி வரை மாணவர்களுக்குக் கதை, ஆடல்-பாடல், நாடகம், விளையாட்டு, பொம்மலாட்டம் ஆகிய செயல்பாடுகள் மூலம் கற்பித்தல் பணி நடைபெற்று வருகிறது. தற்போது 2 லட்சத்திற்கும் மேற்பட்ட இல்லம் தேடிக் கல்வி மையங்கள் மூலம் தமிழ்நாடெங்கும் சிறப்பான கல்வி வழங்கப்பட்டு வருகின்றது.

## 10.6 கேட்டல் கருத்தறிதல்

### வை.மு.கோதைநாயகி

வை.மு.கோதைநாயகி தமிழகத்தைச் சேர்ந்த புதின எழுத்தாளர் ஆவார். துப்பறியும் புதினம் எழுதிய முதல் தமிழ்ப் பெண் எழுத்தாளராவார். மேடைப் பேச்சாளர், கவிஞர், சமூகநல ஊழியர், இதழாசிரியர், இந்திய விடுதலைக்காகப் போராடியவர் எனப் பன்முகம் கொண்டவர். இவரைச் சமகால எழுத்தாளர்கள், 'நாவல் ராணி', 'கதா மோகினி', 'ஏக அரசி' என்று போற்றினர். இவர் 115 புதினங்களை எழுதியுள்ளார். தான் வாழ்ந்த 59 ஆண்டுகளில் 35 ஆண்டுகள் எழுத்தே உலகம் என்று இயங்கினார்.

பத்திரிகை ஆசிரியரும், நூற்றுக் கணக்கான புதினங்களை எழுதியவருமான வை.மு.கோதைநாயகிக்கு எழுதப் படிக்கத் தெரியாது. பிறகு எப்படி எழுத்துலக முதல்வராக மாறினார்? அவர் அனைவரையும் ஈர்க்கும் விதமாகக் கதை சொல்வார். குழந்தைகள் மட்டுமல்லாமல் பெரியவர்களும் இவரது கதைகளை ஆர்வத்துடன் கேட்க ஆரம்பித்தார்கள். 'அருமையாக இருக்கின்றன. இதையெல்லாம் அப்படியே புத்தகமாகப் போடலாமே' என்று தெரிந்தவர் ஒருவர் ஆலோசனை தந்தார். ஏன் செய்யக் கூடாது என்று கோதைநாயகிக்குத் தோன்றியது. அவர் சொல்லச் சொல்ல, பக்கத்து வீட்டுப் பெண் பட்டம்மாள் அதை அப்படியே எழுதினார். அவரது முதல் நாடக நூலான 'இந்திர மோகனா' பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. இரண்டாவது கதை 'வைதேகி'யைத் தானே தன்னுடைய கையெழுத்தில் எழுதிவிட வேண்டும் என்ற வேகம் பிறந்தது கோதைநாயகிக்கு. ஒரு தீர்மானமாக எடுத்துக்கொண்டு, சில மாதங்களிலேயே தமிழை எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டார். தனது அடுத்த நாவலைத் தானே எழுதிக் காட்டினார். சில எழுத்துப்பிழைகள் வந்தன. அதுபற்றியெல்லாம் அவர் பயப்படவில்லை. தகுந்த ஒருவரை வைத்துப் பிழைகளைத் திருத்திக்கொண்டார். இவ்வாறு பல தொடர் முயற்சிகளால் தமிழ் இலக்கிய உலகில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்தவர் வை.மு.கோதைநாயகி அவர்கள்.

**வினாக்கள்**

1. வை.மு.கோதநாயகியின் முதல் புதினத்தின் பெயர் என்ன?
2. வை.மு.கோதைநாயகியை அவரது சமகால எழுத்தாளர்கள் எவ்வாறு அழைத்தனர்?
3. வை.மு.கோதைநாயகி யாரைக் கொண்டு தனது முதல் புதினத்தை எழுதினார்?
4. வை.மு.கோதைநாயகி அவர்கள் எவ்வாறு தனது இரண்டாம் புதினத்தை எழுதினார்?
5. வை.மு.கோதைநாயகி அவர்களின் பன்முகத் தன்மை குறித்து எழுதுக.

## 10.7 மொழிபெயர்ப்போம்

Everybody is a genius. But if you judge a fish by its ability to climb a tree, it will live its whole life believing that it is stupid.

- Albert Einstein

______________________________________________

______________________________________________

## 10.8 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | வலைப்பூ | - | Blog |
| 2. | பதிவேற்றம் | - | Upload |
| 3. | தகவல்தொடர்பு | - | Communication |
| 4. | இடுகை | - | Post |
| 5. | புதினம் | - | Novel |
| 6. | சிறுகதை | - | Short Story |
| 7. | நேர்காணல் | - | Interview |
| 8. | மொழிபெயர்ப்பு | - | Translation |
| 9. | கட்டுரை | - | Essay |
| 10. | வலைப்பதிவர் | - | Blogger |
| 11. | வார்ப்புரு | - | Template |
| 12. | தேடுபொறி | - | Search Engine |

## 10.9 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் உரைப்பகுதியில், வண்ணமிட்ட சொற்களுக்குரிய பொருளை எழுதுக.**


எண்ணுவதும் கணக்கிடுவதும் நெடுங்காலமாக நடைபெற்று வருவன. இவை, மனித இனத்திற்குப் புதியன அல்ல. ஆதிகாலத்தில் மனிதன் பண்டமாற்று முறையில் தனக்குத் தேவையான பொருள்களைப் பெற்று வந்தான். மனிதனின் தேவை பெருகப் பெருகப் பண்டமாற்று வணிகம் எளிதாக இருக்கவில்லை. எனவே, பண்டத்தின் மதிப்பைப் பணமதிப்பாகக் கணக்கிடும் முறை வந்தது. அதன் பிறகு, எண்ணுவதும் கணக்கிடுவதும் ஒரு கலையாகவே வளரத் தொடங்கியது. அதன் காரணமாக, கணக்கீட்டுக் கருவிகள் உருவாக்கப்பட்டன. அத்தகைய கணக்கீட்டுக் கருவிகளே கணினியின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்தன. கணிக்கும் பணியைச் செய்வதாலேயே அதற்குக் கணினி எனப் பெயர் அமைந்தது. அஃது ஒரு மின்னனுக் கருவி. அது, பயனரிடமிருந்து உள்ளீடுகளைப் பெறுகிறது; அவற்றைச் செயல்முறைப்படுத்தி, பயனுள்ள செய்தியாக மாற்றுகிறது; பின்னர், அனைவருக்கும் புரியும் வடிவில் வெளியிடுகிறது.

## 10.10 செயல்திட்டம்

வலைப்பூ ஒன்றை உருவாக்குக. அதில், நீங்கள் கண்டுகளித்த இடத்தைப் பற்றி வருணித்து, உங்கள் கருத்தைப் பதிவிடுக.

பாடம் 11

## 11.1 பேசுவோம்



சங்ககால அதியமான் காசு



சேரரின் செம்புக் காசு



சோழர்கள் காசு



பாண்டியரின் வெள்ளி முத்திரைக் காசு



பல்லவ மன்னன் முதலாம்
மகேந்திரவர்மன் காலத்திய காசு



நாயக்கர் காசு

## கலந்துரையாடுவோம்

உங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சி குறித்து வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 11.2 படிப்போம்

### பட்டினப்பாலை

சங்க இலக்கியங்களில் பாட்டும் தொகையுமாக பதினெட்டு நூல்கள் உள்ளன. 'பாட்டு' என்பது பத்துப்பாட்டையும், 'தொகை' என்பது எட்டுத்தொகையையும் குறிக்கும். இவற்றைப் பதினெண் மேற்கணக்கு நூல்கள் என்றும் அழைப்பர். இவை சங்ககால மக்களின் அக மற்றும் புற வாழ்க்கையை அறியப் பெரிதும் உதவுகின்றன. சங்ககால மக்கள் நடுவுநிலை தவறாது வணிகம் செய்த மாண்பினைப் பட்டினப்பாலைவழி அறிய முடிகிறது.

"......... உழவர்
நெடு நுகத்துப் பகல் போல
நடுவு நின்ற நல் நெஞ்சினோர்
வடு அஞ்சி வாய் மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது
பல் பண்டம் பகர்ந்து வீசும்..." (205 - 211)

### பாடலின் பொருள்

உழவர்கள் உழவு செய்யும் நீண்ட நுகத்தடியில் தைத்த கொழுமுனை போல, நடுவுநிலை என்னும் குணம் நிலைக்கப்பெற்ற நல்ல நெஞ்சினராய் வணிகர்கள் இருந்தனர். தம் குடிக்குப் பழிச்சொல் வருமென அஞ்சி, பொய்மை தவிர்த்து உண்மை பேசுபவராய் இருந்தனர். தம்முடைய பொருளையும் பிறருடைய பொருளையும் ஒன்றாகவே எண்ணினர். தாம் கொடுக்கும் பொருள்களைக் குறைவின்றிக் கொடுப்பர். அதற்கு இணையாகப் பெறும் பொருள்களையும் அதிகமாகப் பெற மாட்டார்கள். பல்வகையான பண்டங்களையும் விலைசொல்லி விற்கும் வணிகத்தைக் காவிரிப்பூம்பட்டினத்து வணிகர்கள் சிறப்பாகச் செய்தனர்.

### நூலைப் பற்றி

பட்டினப்பாலை, பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. இது 301 பாடல் அடிகளைக் கொண்டது. இந்நூல் சோழ மன்னன் கரிகால் பெருவளத்தானின் பெருமைகளை எடுத்துக்கூறுகிறது. சோழநாட்டின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பைச் சொல்வதாலேயே பட்டினப்பாலை என்னும் பெயர் பெற்றது. காவிரிப்பூம்பட்டினம்தான் இன்று பூம்புகார் என அழைக்கப்படுகிறது. இந்நூலைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் இயற்றியுள்ளார். இவர் பத்துப்பாட்டில் பெரும்பாணாற்றுப்படை என்ற நூலையும் இயற்றியுள்ளார்.

## பொருள் அறிவோம்

1. நெடுநுகம் - கலப்பையில் எருதுகளைப் பிணைக்கும் நீண்ட தடி
2. பகல் - நுகத்தாணி
3. வடு அஞ்சி - பழிக்கு அஞ்சி
4. வாய்மொழிந்து - உண்மையைக் கூறி
5. பல் பண்டம் - பல பொருள்கள்
6. வீசும் - விற்கும்

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. பட்டினப்பாலையில் உள்ள பாடல் அடிகள் ______________________________.
2. பட்டினப்பாலை சோழ மன்னன் ______________________________ பெருமையை எடுத்துக் கூறுகிறது.
3. சோழ நாட்டின் தலைநகர் ______________________________.
4. பட்டினப்பாலையின் ஆசிரியர் ______________________________.
5. வடு அஞ்சி என்பதன் பொருள் ______________________________.

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.


1. பொருள்களைக் கொடுப்பதும் கொள்வதும் எவ்வகையில் அமைந்திருந்தன?
2. பட்டினப்பாலை - குறிப்பு வரைக
3. உருத்திரங்கண்ணனார் பத்துப்பாட்டில் எத்தனை நூல்களை எழுதியுள்ளார்? அவை யாவை?
4. வணிகர்கள் எதற்கு அஞ்சி உண்மையைப் பேசுபவராய் இருந்தனர்?
5. "நெடு நுகத்துப் பகல் போல" பொருள் விளக்கம் தருக.

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை விரிவாக எழுதுக.

1. பட்டினப்பாலை கூறும் வணிகர்களின் சிறப்பைப் பற்றி விவரிக்க.
2. வணிகம் குறித்துப் பட்டினப்பாலையில் வரும் பாடலைப் பிழையின்றி எழுதுக.

## 11.3 படிப்போம்

### தமிழரின் அயல்நாட்டு வணிகம்




கிழக்கில் வங்கக்கடலையும் மேற்கில் அரபிக்கடலையும் எல்லைகளாகக் கொண்டது நம் தமிழ்நாடு. கடல்கடந்த வணிகத்தில் தமிழர்கள் ஈடுபட இந்நில அமைப்பே பெரிதும் உதவியிருக்கிறது. சங்க இலக்கியங்கள், அகழாய்வுகளில் கிடைத்த அரிய தகவல்கள், அயல் நாட்டவர் எழுதிச்சென்ற குறிப்புகள் போன்றவை தமிழ்நாட்டினர் கடல் கடந்து வணிகத்தில் சிறப்புற்றிருந்ததைத் தெரிவிக்கும் சான்றுகளாய் உள்ளன.

சீனா மற்றும் தெற்காசிய நாட்டின் வணிகர்கள் இந்தியப் பகுதிகளில் வணிகத்தொடர்பு கொண்டிருந்தனர். அதேபோல் 'யவனர்கள்' என்றழைக்கப்பட்ட கிரேக்கர்கள், அரேபியர்கள், உரோமானியர்கள், எகிப்தியர்கள் உள்ளிட்டோரும் இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் வணிகம் செய்துள்ளனர்.

வணிகம் செய்ய அயல்நாடுகளுக்குச் சென்ற நம் தமிழ்நாட்டினர், காலநிலை கருதி அங்கேயே சில காலங்கள் தங்கும் நிலை ஏற்பட்டது. அங்கே தங்கள் வழிபாட்டு இடங்களையும் அமைத்துக்கொண்டனர். அயல்நாட்டு அரசுகளும் அதற்கு உதவிகள் செய்துள்ளன. ஏற்றுமதியில் விலையுயர்ந்த கற்களையும், முத்துகளையும், பட்டாடைகளையும், மஸ்லின் துணிகளையும், ஆபரணங்களையும், வாசனைப் பொருள்களையும் தமிழர்கள் ஏற்றுமதி செய்தனர்.

உரோம் போன்ற நாடுகள் விலை குறைந்த பொருள்களை இறக்குமதி செய்ததால் வெள்ளி தங்க நாணயங்களைக் கொடுத்து ஈடுகட்ட வேண்டிய நிலைக்கு உள்ளாயின. அதிக அளவிலான தங்கம் தமிழ்நாட்டிற்கு வருவதைக் கட்டுப்படுத்த உரோம் மன்னர் வெஸ்பாசியன் சட்டங்கள் இயற்றினார். உரோமானிய பயணியான ஸ்திராபோவின் வரலாற்றுக் குறிப்பு, தமிழக அரசுகளுக்கும் உரோமப் பேரரசுக்கும் இருந்த அரசியல் வணிகத் தொடர்பினை விளக்குகிறது. அகஸ்டஸ் மன்னரிடம் பாண்டிய நாட்டினர் தூதராகச் சென்றதும், பாண்டியர் தலைநகரம் கொற்கையிலிருந்து மதுரைக்கு மாறியதும் ஸ்திராபோவின் குறிப்புகளால் தெரிய வருகின்றன.

பிளினி (Pliny the Elder) தனது 'நேச்சுரலிஸ் ஹிஸ்டோரியா' (Naturalis Historia/The Natural History) நூலில் இந்தியாவைத் தங்கம், வெள்ளி போன்ற 'அரிய உலோகங்களின் தொட்டி' என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்நூலில் தமிழகத்தின் மேலைக் கடற்கரையில் இருந்த துறைமுகங்கள் பலவற்றின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார்.

சந்திரகுப்த மௌரியரின் அரசவைக்கு வருகைதந்திருந்த கிரேக்கத் தூதர் மெகஸ்தனிஸ் தன்னுடைய 'இண்டிகா' என்னும் நூலில் கி.மு. நான்காம் நூற்றாண்டிலேயே தமிழகத்தில் பாண்டிய அரசு வணிகத்தில் சிறப்புடன் விளங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் நரசிம்ம பல்லவன், ராஜராஜ சோழன், ராஜேந்திர சோழன், குலோத்துங்க சோழன் போன்ற வேந்தர்களும் சீன அரசவைக்குத் தூதுவர்களை அனுப்பி வணிக உறவை மேம்படுத்த நடவடிக்கையும் எடுத்துள்ளார்கள். ஆசிரியர் பெயர் தெரியாத 'தென்கடல் வாணிபச் செலவு' என்ற நூல் தமிழகத்தைப் 'பிரிகே' என்று குறிப்பிட்டு விளக்குகிறது. எரித்திரியக் கடலின் பெரிப்ளூஸ் என்ற கிரேக்க நூல் தமிழகத்திற்கும் உரோமாபுரிக்கும் இடையே இருந்த வணிகத் தொடர்பு பற்றிய செய்திகளை அறிவிக்கிறது. கி.மு. முதல் நூற்றாண்டில் புகழ்பெற்று விளங்கிய தென்னிந்தியத் துறைமுகங்கள், வணிக நகரங்கள் அங்கு வாழ்ந்த மக்கள் ஆகியவை பற்றியும் இந்நூல் விளக்குகிறது.

அரேபிய வரலாற்றுக் குறிப்புகளை எழுதிய பயணிகளான இபுனே ஹாக்கால், ஈஸ்டாக்கி, அப்துல் ரசாக் முதலியோர் மூலமும், வெனிஸ் பயணியான மார்க்கோ போலோ, இபின் பதூதா ஆகியோர் எழுதிய குறிப்புகள் மூலமும் தமிழர்களின் வணிகச்சிறப்பு மற்றும் வாழ்க்கைச்சூழல் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன.

தமிழக மன்னர்களுக்குள் தொடர்ந்து பல போர்கள் நடைபெற்றாலும் அவர்கள் வணிகம் சார்ந்த செயல்பாடுகளில் எந்தக் குறுக்கீடும் செய்யவில்லை. வணிகர்கள் சமூகத்தில் உயர் மதிப்பு பெற்றவர்களாக இருந்தனர். தமிழகத்தில் கிடைக்கும் அகழாய்வுச் சான்றுகள், அயல்நாட்டவர் எழுதியிருக்கும் குறிப்புகள், சங்க இலக்கியங்களில் புலவர்கள் எழுதிய பாடல்களில் கிடைக்கும் குறிப்புகள் என அனைத்தும் தமிழ்நாட்டின் கடல்கடந்த வணிகச்சிறப்பை உலகிற்குப் பறைசாற்றுகின்றன.

## பயிற்சிகள்

### அ) கீழ்க்காணும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தமிழர்கள் எந்த வகைத் துணிகளை ஏற்றுமதி செய்தனர்?

அ) மஸ்லின்   ஆ) ரேயான்

இ) பாலிஸ்டர்   ஈ) லினன்

2. தமிழ்நாட்டின் கிழக்கு எல்லை எது?

அ) வங்கக்கடல்   ஆ) அரபிக்கடல்

இ) வங்காள விரிகுடா   ஈ) பசிபிக் கடல்

3. தமிழகத்திற்கும் உரோமாபுரிக்கும் இடையே இருந்த வணிகத் தொடர்பு பற்றிய செய்திகளை அறிவிக்கும் நூல்?

அ) இண்டிகா   ஆ) எரித்திரியக் கடலின் பெரிப்ளூஸ்

இ) நேச்சுரலிஸ் ஹிஸ்டோரியா   ஈ) தென்கடல் வாணிபச் செலவு

4. கீழ்க்காண்பனவற்றுள் பொருந்தாததைக் கண்டறிக.

அ) இபுனே ஹாக்கால்   ஆ) ஈஸ்டாக்கி

இ) அப்துல் ரசாக்   ஈ) யுவான் சுவாங்

### ஆ) பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. மெகஸ்தனிஸ் | – | நேச்சுரலிஸ் ஹிஸ்டோரியா |
| 2. பிளினி | – | பிரிகே |
| 3. தென்கடல் வாணிபச் செலவு | – | வெனிஸ் பயணி |
| 4. மார்க்கோ போலோ | – | இண்டிகா |

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. எந்தப் பொருள் தமிழ்நாட்டிற்கு வருவதைக் கட்டுப்படுத்தச் சட்டம் இயற்றப்பட்டது? அது யாரால் இயற்றப்பட்டது?

2. வணிக உறவை மேம்படுத்த சீனாவிற்குத் தூதுவர்களை அனுப்பியவர்கள் யாவர்?

### ஈ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக.

1. தமிழ்நாட்டிலிருந்து என்னென்ன பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன?

2. வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்புகளின் வழியே அறியலாகும் கடல் வணிகச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

## 11.4 தெரிந்துகொள்வோம்

### திணை, பால், எண், இடம்

திணை, பால், எண், இடம் ஆகியவை மொழியின் அடிப்படைப் பண்புகள். இவை சொற்றொடர் அமைப்பை விளங்கிக்கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவும். தமிழ் மொழியில் பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் திணை, பால், எண், இடம் ஆகியவற்றை உணர்த்துகின்றன.

எ-கா: வேலன் சுற்றுலா சென்றான்.

இத்தொடரில், வேலன் என்னும் எழுவாய் அதன், திணை, பால், இடம், எண் ஆகியவற்றை உணர்த்திவிடுகிறது. மேலும், இந்த எழுவாய் தான் பெற வேண்டிய வினைமுற்றை உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை எனப் பொருத்தமுடன் அமையுமாறு வேண்டி நிற்கிறது. இதன்மூலம் எழுவாய்க்கும் பயனிலைக்கும் நெருங்கிய இயைபு இருத்தலை அறியலாம்.

**திணை, பால் – விகுதிகள்**

| | | | விகுதிகள் | சான்று |
|---|---|---|---|---|
| திணை | உயர்திணை | ஆண்பால் | அன் | ஒருவன் |
| | | | ஆன் | நாட்டான் |
| | | | மான் | கோமான் |
| | | | ன் | பிறன் |
| | | பெண்பால் | அள் | வந்தனள் |
| | | | ஆள் | அடியாள் |
| | | | இ | குள்ளி |
| | | | ள் | பிறள் |
| | | பலர்பால் | அர் | தோழியர் |
| | | | ஆர் | தேசத்தார் |
| | | | இர் | மகளிர் |
| | | | ர் | பிறர் |
| | | | மார் | தாய்மார் |
| | | | கள் | அரசர்கள் |
| | அஃறிணை | ஒன்றன் பால் | து | அது |
| | | பலவின் பால் | அ | நல்லன |
| | | | வை | நல்லவை |
| | | | கள் | மரங்கள் |

**எண், இடம்–விகுதிகள்**

| | | |
|---|---|---|
| தன்மை | ஒருமை விகுதி | என், ஏன், அல், அன், கு, டு, து, று |
| | பன்மை விகுதி | எம், ஏம், அம், ஆம், ஓம், கும், டும், தும், றும் |
| முன்னிலை | ஒருமை விகுதி | ஐ, ஆய், இ |
| | பன்மை விகுதி | இர், ஈர், மின் |
| படர்க்கை | படர்க்கை ஆண்பால் விகுதி | அன், ஆன் |
| | படர்க்கை பெண்பால் விகுதி | அள், ஆள் |
| | படர்க்கை பலர்பால் விகுதி | அர், ஆர், ப, மார், கள் |
| | படர்க்கை ஒன்றன்பால் விகுதி | து, று, டு |
| | படர்க்கை பலவின்பால் விகுதி | அ, ஆ |

## பயிற்சிகள்

### அ) கீழ்க்காணும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஆண்பால் விகுதிகள்.

அ) அள், ஆள் ஆ) அர், ஆர் இ) வை, கள் ஈ) அன், ஆன்

2. தன்மை ஒருமை விகுதிகள்.

அ) என், ஏன் ஆ) ஐ, ஆய் இ) எம், ஏம் ஈ) அ, ஆ

3. தாய்மார், அரசர்கள் – இச்சொற்களில் இடம்பெறும் விகுதிகள்.

அ) ஆர், அர் ஆ) மார், கள் இ) ஆள், ஆர் ஈ) மார், அர்

4. 'பழையன' – இச்சொல்லில் இடம்பெற்றுள்ள விகுதி.

அ) பலர்பால் விகுதி ஆ) ஒன்றன் பால் விகுதி

இ) பலவின் பால் விகுதி ஈ) பெண்பால் விகுதி

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. திணை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. இடம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. பால் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

### இ) பின்வரும் வினாவிற்கு விரிவான விடை எழுதுக.

1. 'படர்க்கை' விகுதிகளைச் சுட்டி, எடுத்துக்காட்டுகள் தருக.

## 11.5 மொழியோடு விளையாடுவோம்

**வரிசை மாறியுள்ள பழமொழிகளைச் சரியான வரிசையில் எழுதுக.**

1. போதே காற்றுள்ள கொள் தூற்றிக்.

2. பல் சிறு குத்த உதவும் துரும்பும்.

3. அடங்கும் பிடுங்கினால் கொதிக்கிறது எரிகிறதைப்.

4. செலவிற்கு கண்ட கனவில் உதவாது பணம்

5. கவி கட்டுத்தறியும் வீட்டுக் பாடும் கம்பன்.

## தகவல் துளி

### கடல் கடந்த வணிகம்



ஆஸ்திரியா நாட்டுத் தலைநகரமான வியன்னாவில் அருங்காட்சியகம் ஒன்று அமைந்துள்ளது. இங்கு பேபிரஸ் தாளில் எழுதப்பட்ட அரிய கையெழுத்துச் சுவடி ஒன்று உள்ளது. இச்சுவடி சேர நாட்டுத் துறைமுகமான முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகருக்கும் எகிப்து நாட்டின் அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் வாழ்ந்த கிரேக்க வணிகருக்கும் இடையிலான வணிக ஒப்பந்தம். இந்திய வணிக ஒப்பந்தங்களில் காலத்தால் மிகப் பழமையான ஒப்பந்தம் இதுவே, இந்த ஒப்பந்தம் கிரேக்க மொழியில் உள்ளது. எனவே, இந்த வணிகத்தில் ஈடுபட்ட தமிழ் வணிகனுக்குக் கிரேக்க மொழி தெரிந்திருந்தது என்பது தெளிவாகிறது. இது கி.பி. 2ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஏற்பட்ட ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தத்தின் நகல் கரூர் அருங்காட்சியகத்திலும் உள்ளது.

## 11.6 கேட்டல் கருத்தறிதல்

### தொழிற்பாடல்கள்

தொழிற்பாடல்கள் என்பது நாட்டார் பாடல்களில் ஒன்றாகும். பொதுவாகத் தொழில்புரியும்போது பாடும் பாடல்களைத் தொழிற்பாடல்கள் என்பர். தொழிலின் சுமையும் உழைப்பின் களைப்பும் தெரியாமல் இருக்க இவ்வகைப் பாடல்களைப் பாடுகின்றனர்.

தொழிலாளர்கள் உழைக்கும்போது, உடற்சோர்வைப் பொருட்படுத்தாமலும் விரைவாகப் பணிபுரியவும் தொழிற்பாடல்கள் உதவுகின்றன. தொழிற்பாடல்கள் பொதுவாக, ஏற்றப்பாடல், ஏர்ப்பாடல், நடவுப்பாடல், களை எடுப்புப்பாடல், அறுவடைப் பாடல், மீன்பிடிப்பாடல் என்று தொழிலுக்கு ஏற்றவாறு பாடப்படுகின்றன. இப்பாடல்கள் வாய்மொழி இலக்கியங்களாக அறியப்படுகின்றன. வாய்மொழி இலக்கியமாக இருந்த இவை நாளடைவில் தனி இலக்கிய வகையாகவே உருவெடுத்துள்ளன.

தொழிற்பாடல்கள் சில இசைக் குறியீடுகளுடன் தொடங்குகின்றன. வேளாண் பாடல்களில் "ஏலேலோ குயிலே", "ஏலேலோ அன்னக்கிளி", "ஏலேலோ குயிலே", "பொலி பொலி பொலி" என்றும், கப்பற்பாட்டுகளில் "ஏலேலோ ஐலசா", "ஏலை ஏலோ சல சலா" என்றும், சுமை தூக்குவோர்கள் "ஐலசா ஐலசா", "ஏலம் பிடி ஏலம்" என்றும், வண்டியோட்டுவோர்கள் "ஏலங்கிடிலேலோ" என்றும் பாடுவர்.

### வினாக்கள்

1. தொழில்புரியும் போது பாடும் பாடல்கள் என்ன பாடல்கள்?
2. தொழிற்பாடல்கள் ஏன் பாடப்படுகின்றன?
3. தொழிற்பாடலின் வகைகள் சிலவற்றைக் கூறுக.
4. கப்பற்பாடல்களின் குறியீடு யாது?
5. தொழிற்பாடல்கள் எவ்வகை இலக்கிய வகையாக அறியப்படுகின்றன?

## 11.7 மொழிபெயர்ப்போம்

மனிதன் சமூகமாக வாழ்ந்தபோது தன்னிடமுள்ள பொருளைக் கொடுத்துவிட்டுத் தனக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக்கொண்டான். இதனைப் பண்டமாற்று வணிகம் என்றனர்; இதுவே பின்னர் நாணயமுறை வணிகமாக வளர்ச்சியடைந்தது.

## 11.8 அறிந்துகொள்வோம்

1. வங்காள விரிகுடா - Bay of Bengal
2. அரபிக்கடல் - Arabian Sea
3. எல்லைகள் - Borders
4. சங்க இலக்கியம் - Sangam Literature
5. அயல்நாட்டவர் - Foreigners
6. குறிப்புகள் - Notes
7. சான்றுகள் - Examples
8. ஏற்றுமதி - Export
9. இறக்குமதி - Import
10. இரத்தினங்கள் - Gems
11. பட்டாடைகள் - Silk Cloths
12. நறுமணம் - Fragrance
13. வெள்ளி - Silver
14. தங்கம் - Gold
15. துறைமுகம் - Harbour
16. குறுக்கீடுகள் - Interruptions

## 11.9 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் பாடலைப் படித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.**

### ஓடக்காரன்

"அரியதோர் ஓடம் செலுத்திடும் அன்பனே!
பரிவுடன் என்முகம் பார்த்து நீ அதனில்
ஏற்றியே அக்கரை சேர்க்கவும் இசைவாய்
வேற்று வாகனங்கள் மிகப்பல உளவே?
அவையெலா(ம்) ஏறிநான் அலுத்தனன் ஆற்றினைத்
தவறிலா(து) இம்முறை தாண்டவே விழைந்தேன்
உறுதியாய் நின்றால் உதவிடும் ஓடம்
வருகநீ யானும் மகிழ்ந்தனம் உள்ளம்
எத்தனை எத்தனை இன்பமீன் இங்கே
மெத்தக் களிதரும் வேடிக்கை எத்தனை
சற்றுநான் ஆற்றில் தாவியே திளைப்பேன்"



பெ. தூரன்

## வினாக்கள்

1. கவிஞர், 'அன்பனே' என்று யாரை அழைக்கிறார்?
2. கவிஞர், ஏன் ஓடத்தில் பயணம் செய்ய விரும்பினார்?
3. மகிழ்ச்சி எனப் பொருள் தரும் சொற்களைப் பாடலிலிருந்து கூறுக.
4. பரிவு - இச்சொல்லின் பொருள் யாது?
5. ஒரு சொல் பாடலில் மூன்று முறை வந்துள்ளது. அச்சொல் எது?

## 11.10 செயல்திட்டம்

கடல் வணிகம் நடைபெறும் சூழலை வரைபடமாக வரைந்து, வகுப்பில் காட்சிப்படுத்துக.

## 12.1 பேசுவோம்

பாடம்
# 12



### கலந்துரையாடுவோம்

பங்குச்சந்தை வர்த்தகம் பற்றி நீங்கள் அறிந்தவற்றை உங்கள் வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 12.2 படிப்போம்

### தொழிலின் சிறப்பு

ஒரு நாட்டின் தொழில்நிலை சிறந்தால்தான் அந்நாடு சிறந்த நாடாகக் கருதப்படும். வேளாண்மை, வணிகம், தகவல் தொழில்நுட்பம், பொறியியல், உற்பத்தி, தொழிற்சாலை போன்றவை ஒரு நாட்டின் வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கின்றன.

நாடும் நாமும் வாழ்ந்திடவே
நல்ல தொழிலைச் செய்திடுவோம்
காடும் மேடும் திருத்திடுவோம்
கழனிகள் பலபல செய்திடுவோம்
அணைகள் ஏரிகள் அமைத்திடுவோம்
ஆறும் குளமும் வெட்டிடுவோம்
இணையில் லாத உழுதொழிலால்
எல்லா உணவும் படைத்திடுவோம்
இரும்புத் தொழில்பல செய்திடுவோம்
இயந்திரம் எல்லாம் இயற்றிடுவோம்
கரும்பின் ஆலை பஞ்சாலை
கலைநூல் ஆலைகள் அமைத்திடுவோம்
போக்கும் வரவும் நடந்திடவே
புதுப்புதுக் கார்கள் செய்திடுவோம்
கோக்கும் ரயிலைக் கப்பல்களைக்
குணத்தில் சிறக்கச் செய்திடுவோம்
வானக் கப்பலும் செய்திடுவோம்
வகையாய்ச் சைக்கிளும் இயக்கிடுவோம்
கானத் தியங்கும் வண்டிகளும்
காரில் சிறக்கச் செய்திடுவோம்

- அடிகளாசிரியர்

## பாடலின் பொருள்

நாடும் நாமும் வாழ்ந்திட நல்ல தொழிலைச் செய்திட வேண்டும். காட்டையும் மேட்டையும் திருத்தி வயல்கள் பலபல செய்திட வேண்டும். வயல்களுக்கு நீர் கொண்டுவர அணைகள், ஏரிகள், ஆறுகள், குளங்கள் அமைத்திட வேண்டும். இவை எல்லாம் செய்தால்தான் இணையில்லாத உழுதொழில் சிறக்கும். அதனால் எல்லா உணவுகளையும் படைத்திட முடியும்.

இரும்பு தொடர்பான தொழில்கள் பல செய்திட வேண்டும். இயந்திரம் பல செய்திட வேண்டும். கரும்பாலை, பஞ்சாலை மற்றும் பல்வேறு தொழிற்சாலைகள் அமைத்திட வேண்டும். போக்குவரத்திற்காக மிதிவண்டி, மகிழுந்து, தொடர்வண்டி, கப்பல், வானூர்தி போன்றவை செய்திட வேண்டும் என அடிகளாசிரியர் குறிப்பிடுகிறார்.

## நூலைப் பற்றி

அடிகளாசிரியர் எழுதிய சிறுவர் இலக்கியம் என்னும் நூலில் இப்பாடல் இடம்பெற்றுள்ளது. அடிகளாசிரியரின் இயற்பெயர் குருசாமி. இவர் உ.வே.சாமிநாதரிடம் தமிழ் பயின்றார். இவர் எழுதிய சிறுவர் இலக்கியம் என்ற நூலை அப்துல் கலாம் அவர்கள் பாராட்டியுள்ளார். தொல்காப்பியச் செம்மல், செந்நாப்புலவர், தமிழ்ப்பேரவைச் செம்மல் என உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இவரைப் பாராட்டியுள்ளது.

## பொருள் அறிவோம்

1. கழனி - வயல்
2. அணை - நீர்த்தேக்கம்
3. குளம் - நீர்நிலை
4. வானக் கப்பல் - வானூர்தி

## பயிற்சிகள்

### அ) பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை எழுதுக.

1. சிறுவர் இலக்கியம் என்னும் நூலின் ஆசிரியர் யார்?
2. அடிகளாசிரியரின் இயற்பெயர் என்ன?
3. அப்துல் கலாம் அடிகளாசிரியரின் எந்த நூலைப் பாராட்டியுள்ளார்?

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அடிகளாசிரியரை எவ்வாறு பாராட்டியுள்ளது?
2. உழவுத்தொழில் சிறக்க அடிகளாசிரியர் கூறும் வழிமுறைகளைக் குறிப்பிடுக.

### இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. அடிகளாசிரியர் தம் பாடலில் குறிப்பிடும் தொழில்கள் குறித்து எழுதுக.

## 12.3 படிப்போம்

### வாரன் எட்வர்ட் பஃபெட்

பங்குச்சந்தை என்பது வணிக நிறுவனங்களின் பங்குகளை வாங்குவதற்கும் விற்பதற்கும் இருக்கும் பொதுச்சந்தையைக் குறிக்கும். இது பணத்தை முதலீடு செய்ய பல வழிகளை வழங்குகிறது. பங்குச்சந்தை ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. இந்தப் பங்குச்சந்தை வணிகத்தில் தலைசிறந்து விளங்கியவர் வாரன் பஃபெட். அவரின் சாதனைகளை இப்பாடப் பகுதியில் காண்போம்.

### பங்கு வர்த்தகத் தந்தை வாரன் பஃபெட்


2006ஆம் ஆண்டு அமெரிக்கத் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பான அந்தச் செய்தியைக் கேட்ட அத்தனை பேரும் வியப்பிற்குள்ளானார்கள்.

இத்தனை பரபரப்புக்கும் காரணமான அந்தச் செய்தி இதுதான்...

'பங்குச்சந்தையின் தந்தை என்றழைக்கப்படும் வாரன் பஃபெட், தன் வாழ்நாள் முழுவதும் சேர்த்த 37 பில்லியன் டாலர் பணத்தை உலக மக்களின் நல்வாழ்வுக்கு நன்கொடையாக அளித்திருக்கிறார்'. இவ்வளவு பணத்தை நன்கொடையாகக் கொடுக்கும் அளவுக்கு உயர்ந்த, அந்த வாரன் பஃபெட் யார்?

முதலீடு என்று வந்துவிட்டாலே அதற்கு முன்னோடியாகவும், முன்னுதாரணமாகவும் பார்க்கப்படுபவர் வாரன் பஃபெட். உலகின் மிகப் பெரும் பங்கு முதலீட்டாளர், புத்தக எழுத்தாளர், சமூக ஆர்வலர் எனப் பல முகங்கள் இவருக்கு இருக்கின்றன.

இவர் 1930ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ஆம் தேதி அமெரிக்காவில் உள்ள ஒமாஹா என்ற இடத்தில் பிறந்தார். இவரது இயற்பெயர் வாரன் எட்வர்ட் பஃபெட். சிறு வயதில் ஒமாஹா நூலகத்தில் இருந்த 'ஒன் தௌசண்ட் வேஸ் டு மேக் 1000 டாலர்' (One thousand ways to make $1000 ) என்ற புத்தகத்தால் ஈர்க்கப்பட்டார்.



வாரன் எட்வர்ட் பஃபெட்

வீடுவீடாகச் சென்று நாளிதழ் போடும் வேலையைச் செய்தார். சுவிங்கம், கோக-கோலா, கோல்ப் பந்து போன்றவற்றை விற்பனை செய்தார். நண்பனுடன் சேர்ந்து பின்பால் (Pinball) இயந்திரம் ஒன்றை வாங்கினார். அதை முடிதிருத்தும் நிலையத்தில் வைத்து அதன் மூலம் சம்பாதிக்கத் தொடங்கினார். இதில் நல்ல இலாபம் கிடைக்கவே நிறைய இடங்களில் இதுபோல நிறைய இயந்திரங்களை வைத்துச் சம்பாதித்தார். கடைசியில் இந்த இயந்திரங்களை 1200 டாலர்களுக்கு விற்றுவிட்டார். தான் சேர்த்து வைத்திருந்த 1200 டாலர் பணத்தைக் கொண்டு நிலம் வாங்கினார்.

இதுபோலப் பணம் சம்பாதிப்பதில் அவரது அறிவுத்திறன் அதிகமாகவே இருந்தது. அவர் தனது 14ஆவது வயதிலேயே வருமான வரி செலுத்தியிருக்கிறார். சிறு வயது முதலே வாரன் பஃபெட்டுக்குப் பங்குச்சந்தை மீது அதிக ஆர்வம் இருந்தது. தனது 11ஆவது வயதிலேயே பங்கு வர்த்தகத்தில் ஈடுபட்டார். அப்போது 'சிட்டீஸ் சர்வீஸ்' என்ற நிறுவனத்தின் பங்குகளை வாங்கினார். அந்தப் பங்கின் விலை அவர் வாங்கிய பின்னர் ஏறவே இல்லை. முதலில் வீழ்ச்சியையே சந்தித்தார். ஆனாலும் அதன் பங்குகள் ஏறும் வரை காத்திருந்து அதன் பிறகு விற்பனை செய்தார்.

பங்குச்சந்தை குறித்த மிகுந்த அறிவைக் கொண்டிருந்ததால் முதலீட்டில் சிறந்து விளங்கினார். பங்கு வர்த்தகத்தில் தோல்வியைச் சந்திக்கும் என்று நினைத்த நிறுவனங்களையெல்லாம் வாங்கி விற்று அதில் வெற்றிகள் கண்டார். பெர்க்ஷைர் ஹேதவே என்ற நிறுவனத்தின் பங்குகளை வாங்கி முழு நிறுவனத்தையும் தனதாக்கிக் கொண்டார்.

உலகின் பெரிய பணக்காரர் வரிசையில் இவரின் பெயரும் இடம்பெறும் அளவிற்கு உயர்ந்துள்ளார். முதலீட்டில் மட்டுமல்ல, நன்கொடையிலும் சிறந்த மனிதராகத் திகழ்ந்து வருகிறார். முன்னாள் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவிடம் சுதந்திரத்திற்கான ஜனாதிபதி பதக்கம் பெற்றார் பஃபெட்.

"அன்றாடம் 500 பக்கங்கள் படிப்பதற்கு உங்களைத் தயார்படுத்திக்கொள்ளுங்கள். அது உங்களது அறிவை வளர்க்க உதவும். இதனை அனைவராலும் செய்துமுடிக்க முடியும். ஆனால் அனைவரும் இதனைச் செய்ய மாட்டார்கள். தொடர்ந்து படிக்கப் பழகிக்கொள்ளும்போது உங்களோடு உங்களது அறிவும் வளரும்" என்கிறார் உலகப் பங்குச்சந்தையின் தந்தை வாரன் பஃபெட்.

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக

1. பங்குச்சந்தையின் தந்தை என்று அழைக்கப்படுபவர் ________________.
2. பஃபெட் ________________ புத்தகத்தால் ஈர்க்கப்பட்டார்.
3. வாரன் பஃபெட் நண்பனுடன் சேர்ந்து வாங்கிய இயந்திரம் ________________.
4. ________________ என்ற நிறுவனத்தின் அனைத்துப் பங்குகளையும் வாங்கினார்.

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. வாரன் பஃபெட் எப்பொழுது எங்குப் பிறந்தார்?
2. பஃபெட் தம் சிறுவயதில் என்னென்ன வேலைகளைச் செய்தார்?
3. பஃபெட் முதன்முதலில் எந்த நிறுவனத்தின் பங்குகளை வாங்கினார்?
4. பஃபெட் முதல் வருமான வரியை எப்போது செலுத்தினார்?

### இ) பின்வரும் வினாவிற்கு விரிவான விடை எழுதுக.

1. வாரன் பஃபெட் குறித்து நீங்கள் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

## 12.4 தெரிந்துகொள்வோம்

### வினையாலணையும் பெயர்

'முருகன் எழுதினான்', 'எழுதியவன் பரிசு பெற்றான்' இவற்றில் எழுதினான் என்பது வினைச்சொல். எழுதியவன் என்பது எழுவாயாக நின்று பெயர்ச்சொல்லின் தன்மையைப் பெற்றுள்ளது. எழுதுதல் என்னும் தொழிலையும் இறந்தகாலத்தையும் காட்டுவதால் வினைச்சொல்லின் தன்மையையும் பெற்றுள்ளது. இவ்வாறு வருவது வினையாலணையும் பெயர் ஆகும்.

செயலைக் குறிக்காமல், செயல் செய்தவரைக் குறித்து வருவது வினையாலணையும் பெயர். இது, வேற்றுமை உருபுகளை ஏற்று வரும்.

| வினைச்சொல் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| எழுதினான் | எழுதியவன் |
| படிக்கின்றான் | படிக்கின்றவன் |
| வளர்த்தான் | வளர்த்தவன் |
| சேர்ந்தார் | சேர்ந்தவரை |

### தொழிற்பெயர்

1. எழுத்தாளரின் தொழில் எழுதுதல்.
2. தையல்காரரின் தொழில் தைத்தல்.

இத்தொடர்களில் எழுதுதல், தைத்தல் என்பன செயல்களைக் குறிப்பன. இவற்றைத் தொழிற்பெயர் என்பர்.

இவ்வாறு ஒரு பொருளின் செயலை அதாவது தொழிலைக் குறிப்பதாக அமைந்தால் தொழிற்பெயர் எனப்படும். இவற்றில் எண், இடம், காலம், பால் ஆகியன வெளிப்படுவதில்லை.

எ.கா: பொறுத்தல், படித்தல், ஆடுதல், நடித்தல், எழுதுதல்

இவ்விகுதிகள் இல்லாமலும் தொழிற்பெயர் வருவதுண்டு. அத்தகைய தொழிற்பெயர் இரண்டு வகைப்படும். அவை,

1) முதனிலைத் தொழிற்பெயர்

2) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

### முதனிலைத் தொழிற்பெயர்

தொழிற்பெயர் தனக்குரிய விகுதியைப் பெறாமல் பகுதி (முதனிலை) மட்டும் வந்து தொழிலை உணர்த்துவது முதனிலைத் தொழிற்பெயர் எனப்படும்.

எ.கா: சோறு கொதி வந்தது, மின்னி இடி இடித்தது.

இங்கு கொதித்தல், இடித்தல் என்று வராமல் கொதி, இடி என்று பகுதிகள் மட்டும் வந்துள்ளன. இவை முதனிலைத் தொழிற்பெயர் என்று அழைக்கப்படுகின்றன.

### முதனிலை திரிந்த தொழிற்பெயர்

தொழிற்பெயரின் விகுதியைப் பெறாத முதனிலை, திரிந்து (மாறுபட்டு) வருவது முதனிலை திரிந்த தொழிற்பெயர் எனப்படும்.

எ.கா: கெடுவான் கேடு நினைப்பான்.

இத்தொடரில் கெடு என்னும் முதனிலை கேடு என்றும் மாறி வந்துள்ளது. எனவே, முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றழைக்கப்படுகின்றது.

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| 1. தொழிலுக்குப் பெயராக வரும் | தொழிலைச் செய்த கருத்தாவிற்குப் பெயராக வரும் |
| 2. படர்க்கை இடத்தில் மட்டும் வரும் | மூவிடத்திலும் வரும் (தன்மை, முன்னிலை, படர்க்கை) |
| 3. காலம் காட்டாது | காலம் காட்டும் |
| 4. திணை, பால், எண், இடம் காட்டாது | திணை, பால், எண், இடம் காட்டும். |

| அறிந்துகொள்வோம் | |
|---|---|
| விடு | முதனிலைத் தொழிற்பெயர் |
| வீடு | முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் |
| விடுதல் | தொழிற்பெயர் |
| விடுவான் | வினைமுற்று |
| விட்டவன் | வினையாலணையும் பெயர் |

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. முதனிலைத் தொழிற்பெயர்

அ) கொதித்தல் ஆ) கொதித்த இ) கொதிப்பு ஈ) கொதி

2. வினையாலணையும் பெயர்

அ) இயற்றியவன் ஆ) இயற்று இ) இயற்றி ஈ) இயற்றினான்

3. தொழிற்பெயர்

அ) விளையாட ஆ) விளையாடு இ) விளையாட்டு ஈ) விளையாடி

### ஆ) பின்வரும் வினைமுற்றுகளை வினையாலணையும் பெயராக மாற்றுக.

| வ.எண் | வினைமுற்று | வினையாலணையும் பெயர் |
|---|---|---|
| 1. | ஆடினாள் | |
| 2. | வீழ்ந்தார் | |
| 3. | வென்றான் | |
| 4. | வந்தார் | |

### இ) பின்வரும் வேர்ச்சொற்களைத் தொழிற்பெயர், முதனிலைத் தொழிற்பெயர், முதனிலை திரிந்த தொழிற்பெயராக மாற்றுக.

| வ.எண் | வேர்ச்சொல் | தொழிற்பெயர் | முதனிலைத் தொழிற்பெயர் | முதனிலை திரிந்த தொழிற்பெயர் |
|---|---|---|---|---|
| 1. | படு | | | |
| 2. | பெறு | | | |
| 3. | சுடு | | | |

### ஈ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. வினையாலணையும் பெயர் என்றால் என்ன?
2. முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.
3. வினையாலணையும் பெயருக்கும் தொழிற்பெயருக்கும் உள்ள வேறுபாடு யாது?

## 12.5 கருத்து விளக்கப்படம்

# தேசிய அளவிலான நெல் திருவிழா–2023

இயற்கை விவசாயிகள் சங்கமிக்கும்
13ஆம் ஆண்டு நெல் திருவிழாவில்
பாரம்பரிய நெல்லை
மீட்டெடுக்கும் முயற்சியில்
பேரணி – கண்காட்சி – கருத்தரங்கம் – கலை நிகழ்ச்சி
நடைபெற உள்ளது.




### வினாக்கள்

1. எந்தத் திருவிழாவிற்கான அழைப்பிதழ் இது?
2. நெல் திருவிழா எந்த நாள்களில் நடைபெறுகிறது?
3. நெல் திருவிழாவில் யார் யார் பங்கேற்கலாம்?
4. இத்திருவிழா எத்தனை ஆண்டுகளாக நடைபெறுகிறது?
5. இந்தத் திருவிழாவில் நடக்கும் நிகழ்வுகள் எவை எவை?

### தகவல் துளி

ஈரோடு மாவட்டம், நொய்யல் ஆற்றங்கரையில் அமைந்த ஊர் கொடுமணல். இவ்வூர் சங்க இலக்கியத்தில் 'கொடுமணம்' என்று அழைக்கப்படுகிறது. இவ்வூர் சங்ககாலம் முதலே வெளிநாட்டவர் பலரும் கூடும் பெரும் வணிக நகரமாக இருந்துள்ளது. இதனைப் பல்வேறு புறச்சான்றுகள் மூலம் நாம் அறிகிறோம். கொடுமணலில் குதிரை வணிகம் பெருமளவு நடைபெற்றிருப்பதை இங்குக் கிடைக்கும் சான்றுகள் புலப்படுத்துகின்றன. கார்னீலியன், அகேட், ஜாஸ்பர், பெரில் முதலான அரியவகை மணிகள் இங்கு ஆயிரக்கணக்கில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றை உரோமானியர்களே பெருமளவில் விரும்பிப் பயன்படுத்தியுள்ளனர். உரோம் நாட்டு நாணயங்கள், கருப்பு சிவப்பு நிறம் கொண்ட சங்ககாலத்தைச் சேர்ந்த பானைகள். நிகம, வியாகி போன்ற பிறமொழி எழுத்துகள் பொறித்த பானைச் சில்லுகள் கிடைக்கின்றன.

## 12.6 கேட்டல் கருத்தறிதல்

### உழைப்பின் பலன்

"உங்கள் மீது யாரேனும் கற்கள் வீசினால் அதனைக் கொண்டு கட்டடம் எழுப்புங்கள்" என்ற வரிகளுக்குச் சொந்தமானவர் ரத்தன் நவால் டாடா.

தனது தொழில் திறமையால் உலகையே இந்தியாவின் பக்கம் திரும்ப வைத்த தொழிலதிபர் இவர். இந்தியாவில் தொடங்கிய தனது வியாபாரக் குழுமத்தினை, இன்று உலகெங்கிலும் எடுத்துச் சென்றுள்ளார். நாம் சாப்பிடும் உணவில் போடும் உப்பில் தொடங்கி, தேநீர், கைக்கடிகாரம், தங்கம், நம் வீட்டுச் சுவரில் உள்ள இரும்பு, மின்சாரம், தகவல் தொழில்நுட்பம், வாகன உற்பத்தி என ஒவ்வொன்றிலும் டாடாவின் பங்கு உண்டு. இப்படிப் பல துறைகளில் வெற்றிகரமாய் கோலோச்சி வருபவர் இவர்.

1937இல் சூரத் நகரில் நவால் டாடா சுனு தம்பதியருக்கு மகனாகப் பிறந்த ரத்தன் டாடா, தனது நிர்வாக மேல்படிப்பை ஹார்வார்டு பல்கலைக்கழக்கத்தில் படித்துள்ளார். அங்கு அவர் படிப்பை முடித்தவுடன் இன்றளவும் மிகப் பெரிய நிறுவனமாக இருக்கும் ஐபிஎம்மில் (IBM) பணிக்குச் சேர்ந்துள்ளார். எனினும் தாய்நாட்டின் மீதுள்ள பற்றின் காரணமாக இந்தியாவுக்கே திரும்பினார். 30 ஆண்டு அயராத கடின உழைப்பினால் 1991இல் டாடா குழுமத்தின் தலைவராகவும், நிறுவனராகவும் நியமிக்கப்பட்டார்.

இன்றைய இளைய சமுதாயத்தினருக்கு முன்னோடியாக இருந்துவரும் ரத்தன் டாடா, தொழில் நுணுக்கங்களையும் இளைஞர்களுக்குப் பயிற்றுவித்து வருகிறார். இவர் கொடைத்தன்மை உடையவர். ஏழைக் குழந்தைகள், ஆதரவற்ற குழந்தைகள், மாற்றுதிறனாளிகள் எனப் பல லட்சம் பேருக்குத் தமது தொண்டு நிறுவனம் மூலமாக இன்றளவிலும் பல உதவிகளைச் செய்து வருகின்றார். கொரோனா நிவாரண நிதியாக 1,500 கோடி ரூபாயினை இந்திய மக்களுக்காக வழங்கியவர் டாடா.

## வினாக்கள்

1. தம் தொழில் திறமையால் உலகையே இந்தியாவின் பக்கம் திரும்பச்செய்த தொழிலதிபர் யார்?
2. ரத்தன் டாடா எங்கு எப்போது பிறந்தார்?
3. ரத்தன் டாடா எத்தனை ஆண்டுகள் உழைப்பிற்குப் பின் டாடா குழுமத்தின் தலைவரானார்?
4. ரத்தன் டாடா எந்தப் பல்கலைக்கழகத்தில் படித்தார்?
5. டாடா குழுமத்தின் தயாரிப்புகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

## 12.7 மொழிபெயர்ப்போம்

தொழில் முனைவோர் என்பவர் சொந்தமாக ஒரு நிறுவனத்தை உருவாக்கி, வளர்ச்சியடையச் செய்பவர்; நிச்சயமற்ற சூழ்நிலையில் இடர்ப்பாடுகளைக் களைந்து, தனது இலக்கை அடையும் திறன் பெற்றவர்; புதுமைகளை மேற்கொள்பவர்; தனித்தன்மையும் தன்னம்பிக்கையும் கொண்டவர்.

______________________________________________

______________________________________________

______________________________________________

## 12.8 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பங்கு வர்த்தகம் | - | Stock trading |
| 2. | பங்குச்சந்தை | - | Stock market |
| 3. | முதலீடு | - | Investment |
| 4. | பொருளாதார வளர்ச்சி | - | Economic development |
| 5. | சாதனைகள் | - | Achievements |
| 6. | தொலைக்காட்சி | - | Television |
| 7. | ஒளிபரப்பு | - | Telecast |
| 8. | நல்வாழ்வு | - | Welfare |
| 9. | நன்கொடை | - | Donation |
| 10. | முன்னோடி | - | Pioneer |
| 11. | முன்னுதாரணம் | - | Precedent |
| 12. | முதலீட்டாளர் | - | Investor |

13. சமூக ஆர்வலர் - Social activist

14. இலாபம் - Profit

15. இயந்திரங்கள் - Machines

16. வருமான வரி - Income tax

## 12.9 உயர்நிலைத்திறன்

**பின்வரும் குறிப்புகளைப் படித்து, உரைப்பகுதியாக எழுதுக.**

பிறப்பு
ஆகஸ்ட் 20, 1946ஆம்
ஆண்டு கர்நாடகம், இந்தியா.

விருது
பத்ம விபூஷண்
இந்தியாவின் இரண்டாவது
உயரிய விருது.

இன்ஃபோசிஸ்
நிறுவனர்
நா.ரா.
நாராயணமூர்த்தி

கல்வி 1967இல் மின்
பொறியியல் பட்டம், மைசூர்
பல்கலைக் கழகம், 1969இல்
முதுநிலைப் பட்டம், இந்திய
தொழில்நுட்பக் கழகம்.

பணி: அகமதாபாத் இந்திய மேலாண்மைக் கழகம்,
கணினித் துறை, எஸ்.ஈ.எஸ்.ஏ. நிறுவனம்,
ஃபிரான்ஸ். செயல்குழுத் தலைவர், தலைமை
ஆலோசகர், இன்ஃபோசிஸ் நிறுவனம்.

## 12.10 செயல்திட்டம்

தகவல் தொழில்நுட்பத்துறையில் சிறந்து விளங்குபவர்களுள் எவரேனும் நால்வரைப் பற்றிய செய்திகளைத் திரட்டி, தொகுப்பேடு உருவாக்குக.

பாடம்
# 13

## 13.1 பேசுவோம்



# இயல் இசை நாடகம்

### கலந்துரையாடுவோம்

நீங்கள் பார்த்து ரசித்த கலைநிகழ்ச்சிகள் குறித்து வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 13.2 படிப்போம்

### சிலப்பதிகாரம்

'கலை' என்பது கலைஞன் தனது உள்ளுணர்வை வெளிப்படுத்த உதவுவது. இது மனிதனைப் பிற உயிரினங்களிலிருந்து வேறுபடுத்துகிறது. கலை, மக்களை மகிழ்விக்கவும், கருத்துகளை வெளிப்படுத்தவும் பயன்படுகிறது. தமிழர்கள் கலைகளை நிகழ்த்துவதோடு மட்டுமல்லாமல் அதற்கான அரங்கு அமைக்கும் திறனையும் பெற்றிருந்தனர் என்பதைச் சிலப்பதிகாரம் நமக்குத் தெரிவிக்கின்றது.

### அரங்க அமைப்பு

"நூல்நெறி மரபின் அரங்கம் அளக்கும்

கோல்அளவு இருபத்து நால்விரல் ஆக,

எழுகோல் அகலத்து எண்கோல் நீளத்து

ஒருகோல் உயரத்து உறுப்பினது ஆகி

உத்தரப் பலகையொடு அரங்கின் பலகை

வைத்த இடைநிலம் நால்கோல் ஆக

ஏற்ற வாயில் இரண்டுடன் பொலியத்

தோற்றிய அரங்கில் தொழுதனர் ஏத்தப்

பூதரை எழுதி மேல்நிலை வைத்துத்

தூண்நிழல் புறப்பட மாண்விளக்கு எடுத்து; ஆங்கு

ஒருமுக எழினியும் பொருமுக எழினியும்

கரந்துவரல் எழினியும் புரிந்துஉடன் வகுத்து …"

- இளங்கோவடிகள்

## பாடலின் பொருள்

சிற்ப நூலாசிரியர் கூறும் இயல்பிலிருந்து மாறாதபடி, நிலத்தைத் தேர்ந்தெடுத்து, சான்றோர்கள் கூறிய நெறிப்படி அரங்கம் அமைத்தனர். ஒருகோல் அளவு மூங்கிலையே அரங்கம் அமைக்கப் பயன்படுத்தினர். ஒருகோல் அளவு என்பது தம் கைப்பெருவிரலில் இருபத்து நான்கு அளவினைக் கொண்டதாகும்.



அரங்கமானது தரையிலிருந்து ஒருகோல் அளவு உயரத்தில் இருக்குமாறு அமைக்கப்பட்டது. அதன்மேல் பலகைகள் இட்டுத் தளம் அமைத்தனர். அரங்கமானது ஏழு கோல் அகலமும் எட்டு கோல் நீளமும் உடையதாக இருந்தது. அரங்கின் மேல் அமைப்பு உத்தரம் எனப்படும். உத்தரம், பலகைகளால் மூடப்பட்டிருந்தது. உத்தரப் பலகைக்கும் தளப் பலகைக்கும் இடையே நான்கு கோல் அளவு இடைவெளி இருந்தது. அரங்குக்கு உள்ளே வரவும் வெளியே செல்லவும் தனித்தனியே இரண்டு வாயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. அரங்கில் அமைக்கப்பட்ட தூண்களின் நிழல்கள் அரங்கில் விழாதபடி விளக்குகள் அமைக்கப்பட்டிருந்தன.

மேலும், நடன அரங்கில் மூன்று வகையான திரைச்சீலைகள் அமைக்கப்பட்டிருந்தன. அவை ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி ஆகியனவாகும். அரங்கின் ஒருபுறத்திலிருந்து மறுபுறத்திற்குச் செல்லும் ஒருமுக எழினி. அரங்கின் இருபுறத்திலிருந்தும் நடுவில் பொருந்துமாறு அமைக்கப்படும் பொருமுக எழினி. மேலிருந்து கீழே இறங்கும் வகையில் அமைக்கப்படும் கரந்துவரல் எழினி. இவ்வாறான மூன்று திரைச்சீலைகளும் நடன அரங்கில் அமைக்கப்பட்டிருந்தன.

## நூலைப் பற்றி

சிலப்பதிகாரம் ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று. இது முத்தமிழ்க் காப்பியம், நாடகக் காப்பியம், புரட்சிக் காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது. சிலப்பதிகாரம் புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்னும் 3 காண்டங்களையும் 30 காதைகளையும் உடையது. சிலப்பதிகாரத்தை எழுதியவர் இளங்கோவடிகள்.

## பொருள் அறிவோம்

1. அரங்கு - நடன மேடை
2. எழுகோல் - ஏழு கோல்
3. எண்கோல் - எட்டுக் கோல்
4. நால்கோல் - நான்கு கோல்
5. உத்தரப் பலகை – மேல் இடும் பலகை
6. பூதர் - ஐம்பூதங்கள்
7. எழினி – திரைச்சீலை

## பயிற்சிகள்

### அ) பொருத்துக.

1. ஒருமுக எழினி – இருபுறத்திலிருந்தும் நடுவில் பொருந்துவது.
2. பொருமுக எழினி – நடனமேடை
3. கரந்துவரல் எழினி – மேலிருந்து கீழ் வருவது.
4. அரங்கு - ஒருபுறத்திலிருந்து மறுபுறத்திற்குச் செல்வது.

### ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக.

1. அரங்கத்தின் அகலம் எழுகோல் ஆகும். (சரி/தவறு)
2. சீத்தலைச் சாத்தனார் சிலப்பதிகாரத்தை எழுதினார். (சரி/தவறு)
3. சிலப்பதிகாரம் 30 காதைகளை உடையது. (சரி/தவறு)
4. மேடையில் ஒரு வாயில் மட்டும் அமைக்கப்பட்டிருந்தது. (சரி/தவறு)
5. ஐஞ்சிறுகாப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம். (சரி/தவறு)

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. மூவகை எழினிகள் யாவை?
2. இளங்கோவடிகள் - குறிப்பு வரைக.
3. மேடை அளவுமுறைகள் குறித்து எழுதுக.
4. சிலப்பதிகாரம் எத்தனை காண்டங்களை உடையது. அவை யாவை?
5. சிலப்பதிகாரம் குறிப்பிடும் ஒருகோல் அளவினை வரையறு.


### ஈ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. சிலப்பதிகாரம் குறிப்பிடும் நடன அரங்கின் அமைப்பை விரிவாக எழுதுக.

## 13.3 படிப்போம்

### தெருக்கூத்து

மனிதனின் அழகியல் வெளிப்பாடே கலை. கலை என்பது பார்ப்போர், கேட்போர் மனத்தில் அழகியல் உணர்வை உண்டாக்கும். மேலும் அந்தந்தப் பகுதியின் பண்பாட்டுச் சூழலை வெளிப்படுத்தும். கூத்து என்ற சொல்லே கலைகளைக் குறிக்கப் பயன்பட்ட மிகப் பழமையான சொல்லாகும். கிராமங்களில் நாட்டுப்புறக்கலைகளில் ஒன்றாகக் கூத்து நடைபெற்று வந்தது. தெருக்களின் ஓரங்களில் இடம் அமைத்து நிகழ்த்துவதால் இதைத் தெருக்கூத்து என்றழைத்தனர். தெருக்கூத்துக் கலையினைப் பற்றி இப்பாடப் பகுதியில் படிப்போம்.



**மேடை அமைப்பு**

தெருக்கூத்திற்கான திறந்தவெளி மேடை வீதிகளிலும், நாற்சந்திகளிலும், கோயில்களுக்கு அருகிலும் அமைக்கப்படும். இம்மேடையின் மேற்பகுதியைத் தென்னை ஓலைகளால் அமைத்திருப்பர். மேடையை, நடிகர்கள் வருவதற்கு முன்பு வெள்ளைத்துணியால் மறைத்திருப்பர். நடிகர் வந்து அதன் பின்புறம் நின்றதும் திரை அகற்றப்படும்.

## ஒளியமைப்பு

தொடக்க காலத்தில் ஒளியமைப்புக்காகத் தெருக்கூத்து மேடையில் 'தீவட்டிகள்' பயன்படுத்தப்பட்டன. பிறகு மண்ணெண்ணெய் விளக்குகள் பயன்படுத்தப்பட்டு, காலமாற்றத்துக்கேற்ப, தற்போது மின்விளக்குகள் பயன்படுத்தப்படுகின்றன.

## ஒலியமைப்பு

தெருக்கூத்தில் நடிகர்கள் ஆடியும் பாடியும் நடிப்பது வழக்கம். பொதுவாக ஒலிபெருக்கி போன்றவை தெருக்கூத்து மேடைகளில் பயன்படுத்தப்படுவதில்லை. ஓங்கிய குரலில் பாடியும், குதித்தும் நடிகர்கள் வெளிப்படுத்தும் உணர்வுகளை அப்படியே கேட்டு ரசிப்பதைத்தான் மக்கள் விரும்புகின்றனர். தற்போது ஒலிபெருக்கிகளும் பயன்பாட்டுக்கு வந்துள்ளன.

## இசை

தெருக்கூத்தில் இசை முக்கியமான கூறாக விளங்குகிறது. மிருதங்கம், டோலக், ஜால்ரா, புல்லாங்குழல், ஆர்மோனியம் போன்ற இசைக்கருவிகள் பெரும்பாலும் பயன்படுத்தப்பெறுகின்றன. இவை 'பக்க வாத்தியங்கள்' எனப் பெயரிட்டு அழைக்கப்படுகின்றன.

இசைக்குழுவினர் மேடையின் பின்பக்கம் திரையை ஒட்டி, பார்வையாளர்களைப் பார்த்து அமர்ந்திருப்பர். இசையின் ஒலிப்பு ஓங்கிக் கேட்கும் வண்ணம் இசைக்கப்படும்.

## ஒப்பனை

தெருக்கூத்துக்கான ஒப்பனை தனித்துவம் வாய்ந்தது. கதாப்பாத்திரங்களை வேறுபடுத்தவும், பொலிவுபெறச் செய்யவும் ஒப்பனை உதவுகிறது.

விலை குறைந்த மற்றும் இயற்கையில் கிடைக்கக்கூடிய பொருள்களான அரிதாரம், கரிப்பொடி, காக்காப்பொன் ஆகியன முகத்தில் பூசப்படும் ஒப்பனைப் பொருள்களாகும்.

ஆண் வேடதாரிகள் பெரும்பாலும் நீளக் கால்சட்டையுடன் சரிகை தைக்கப்பட்ட ஆடைகளைப் பயன்படுத்துகிறார்கள். பெண்ணைப் போல் வேடமிட்டவர்கள் பெரும்பாலும் புடவைகளைப் பயன்படுத்துகின்றனர்.

## தெருக்கூத்தின் கதைகள்

மக்களுக்கு நன்கு அறிமுகமான தொன்மை இலக்கியங்கள், நாட்டுப்புறக்கதைகள், புராண இதிகாசக் கதைகள் தெருக்கூத்துக்கான கதைகளாக உள்ளன. எனினும் கால மாற்றத்திற்கேற்ப சமகாலத்தில் நடைபெறும் நிகழ்வுகள் தெருக்கூத்தில் இடம்பெறும். மதுரை வீரன், பவளக்கொடி, நல்லதங்காள், அர்ச்சுனன் தபசு, ஆரவல்லி சூரவல்லி, பாரதக்கூத்து, காத்தவராயன், சித்திராங்கி போன்றவை குறிப்பிடத்தக்க தெருக்கூத்துக் கதைகளாகும்.

தொடக்கத்தில் பாடல்கள் பாடப்பெறும். அடுத்ததாகக் கட்டியங்காரனின் வருகை அமையும். கூத்தில் வரக்கூடிய பாத்திரங்களைக் கட்டியங்காரன் அறிமுகம் செய்வான். கூத்தின் நிகழ்ச்சிகளையும், சூழலையும், கதைப் போக்கையும் விளக்குவதாக அவனது பேச்சும் நடிப்பும் அமைந்திருக்கும்.

மேடையில் நடிகர்கள் குதித்துக்கொண்டு ஆர்ப்பாட்டத்தோடு அறிமுகம் ஆவார்கள். வாத்திய இசைக்கு ஏற்ப தாள அசைவுடன் ஆடியும், பாடியும் நடிப்பார்கள். தனது செய்கைகளால் சிரிக்க வைக்கும் 'கோமாளி' கூத்தில் சிறப்பிடம் பெறுகிறார்.

தெருக்கூத்து, தமிழின் நல்லதொரு நாடக வடிவமாகும். இத்தெருக்கூத்தின் செல்வாக்கு இன்றைய மேடை நாடக வடிவத்திற்குள்ளும் வந்திருக்கிறது.

## பொருள் அறிவோம்

1. நாற்சந்தி – நான்கு சாலைகள் சந்திக்கும் இடம்
2. கட்டியங்காரன் - நகைச்சுவைக் கதைமாந்தர்
3. தீவட்டி - தீப்பந்தம்
4. டோலக், ஜால்ரா – இசைக்கருவிகள்

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

(அரிதாரம், கோமாளி, தென்னை, நாடக, கூத்து)

1. கலைகளைக் குறிக்கப் பயன்பட்ட மிகப் பழமையான சொல் ________________.
2. மேடையின் மேல்பகுதியை ________________ ஓலைகளால் அமைத்திருப்பர்.
3. முகத்தில் பூசப்படும் ஒப்பனைப் பொருள்களில் ஒன்று ________________.
4. தனது செய்கைகளால் சிரிக்க வைப்பவர் ________________.
5. தெருக்கூத்து, தமிழின் நல்லதொரு ________________ வடிவமாகும்.

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தெருக்கூத்தின் மேடை அமைப்பை எழுதுக.
2. பக்க வாத்தியங்கள் குறித்து எழுதுக.
3. தெருக்கூத்தில் நிகழ்த்தப்படும் கதைகள் – குறிப்பு வரைக
4. தெருக்கூத்தின் ஒப்பனை குறித்து விளக்குக.


### இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. தெருக்கூத்து குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

## 13.4 தெரிந்துகொள்வோம்


### வழக்கு

வழக்கு என்பதற்கு மரபு அல்லது பழக்கம் என்று பொருள். 'வழக்குச் சொற்கள்' என்பன மக்கள் நடைமுறை வழக்கத்தில் பயன்படுத்தும் சொற்கள். எந்தப் பொருளை எந்தச் சொல்லால் நம் முன்னோர் வழங்கி வந்தனரோ அவ்வாறே தொடர்ந்து வழங்கி வருவதையே வழக்கு என்பர். இது இரண்டு வகைப்படும்: அவை,




**இயல்பு வழக்கு**

ஒரு பொருளைச் சுட்டுவதற்கு எந்தச் சொல் இயல்பாக அமைகிறதோ அச்சொல் இயல்பு வழக்குச் சொல் எனப்படும். இயல்பு வழக்கு மூன்று வகைப்படும். அவை,



### இலக்கணமுடையது

இலக்கண விதிகளுக்கு உட்பட்டு அமையும் சொற்கள் 'இலக்கணமுடையது' எனப்படுகின்றது. 'மழை பெய்தது', மாடு மேய்ந்தது' போன்ற சொற்கள் இலக்கண விதிகளுக்கு உட்பட்டு அமைவதால் இவை இலக்கணமுடையது எனப்படுகின்றது.

### இலக்கணப்போலி

இலக்கணத்திற்கு அப்பாற்பட்டு, தொன்றுதொட்டு வழங்கிவருவது இலக்கணப்போலி. இலக்கணமுடைய சொற்கள் போல ஏற்றுக்கொள்ளப்படும் சொற்கள் 'இலக்கணப்போலி' ஆகும்.

இல்வாய் – வாயில், நகர்ப்புறம் – புறநகர், தசை – சதை ஆகியன இலக்கணப்போலி ஆகும்.

### மரூஉ

மருவி வழங்கி வரும் சொற்கள் மரூஉச் சொற்கள் ஆகும். காலமாற்றத்தினால் எழுத்துகளோ ஒலியோ சிதைவுற்று வழங்கி வருவதாகும்.

தஞ்சாவூர் – தஞ்சை.


திருநெல்வேலி – நெல்லை.

திருச்சிராப்பள்ளி – திருச்சி போன்றவை மரூஉச் சொற்களாகும்.

### தகுதி வழக்கு

பிறரிடம் சொல்லத் தகுதியற்ற சொல்லை நீக்கித் தகுதியான வேறு சொல்லால் சொல்வது தகுதி வழக்கு. அதாவது தகுதியான சொற்களைப் பேசுவது.

தகுதி வழக்கு மூன்று வகைப்படும். அவை



**இடக்கரடக்கல்**

பிறரிடம் கூறுவதற்கு இடர்ப்பாடாகத் தோன்றும் சொற்களை நீக்கித் தகுந்த சொற்களால், அப்பொருளைக் குறிப்பிடுவதை இடக்கரடக்கல் என்பர்.

சான்று- 'மலம் கழுவி வந்தேன்' என்பதைக் 'கால் கழுவி வந்தேன்' எனக் கூறுவர்.

மேலும் சில சான்றுகள்,

1. வாய் கழுவி வந்தான் - வாய் பூசி வந்தான்

2. சிறுநீர் கழித்து வந்தேன் - ஒன்றுக்குப் போய் வந்தேன்

**மங்கலம்**

மங்கலம் அல்லாத சொல்லை நீக்கி மங்கலமான சொல்லால் அப்பொருளை வழங்குவது மங்கலம் என்பர்.

சான்று - 'செத்தார்' என்பதை 'துஞ்சினார்' என்றும் 'இறைவனடி சேர்ந்தார்' என்றும் கூறுவர்.

மேலும் சில சான்றுகள்,

1. விளக்கை அணை - விளக்கைக் குளிரவை

2. சுடுகாடு - நன்காடு

**குழூஉக்குறி**

ஒரு குழுவினர் தமக்கு மட்டும் புரியும் வகையில், ஒரு பொருளுக்குக் குறிப்பாக வழங்கும் பெயரைக் குழூஉக்குறி என்பர்.

சான்று - பொற்கொல்லர் 'பொன் (தங்கம்)' என்பதைப் 'பறி' என்று கூறுவர்.

**மேலும் சில சான்றுகள்,**

1. யானைப்பாகர் ஆடையைக் 'காரை' என்பர்.

2. வசம்பு என்னும் மருந்துப் பொருளைப் 'பெயர் சொல்லாதது' என்பர்.

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

(குழூஉக்குறி, இடக்கரடக்கல், மங்கலம், பறி, நன்காடு)

1. செத்தாரை 'இறைவனடி சேர்ந்தார்' என்பது ____________.
2. கால் கழுவி வந்தேன் என்று கூறுவது ____________.
3. வசம்பைப் 'பெயர் சொல்லாதது' என்று கூறுவது ____________.
4. சுடுகாடு என்பதன் மங்கலச்சொல் ____________.
5. பொற்கொல்லர் பொன்னை இவ்வாறு அழைப்பர் ____________.

## ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக.

1. புறநகர் என்ற சொல் இலக்கணப்போலி. (சரி/தவறு)
2. பெயர் என்ற சொல்லைப் பேர் என வழங்குவது மரூஉ. (சரி/தவறு)
3. இலக்கணத்திற்கு உட்பட்டு வழங்கப்படும் சொற்கள் இலக்கணப்போலி எனப்படும். (சரி/தவறு)
4. ஒன்னு, ரெண்டு, மூனு ஆகிய சொற்கள் இலக்கணப்போலி. (சரி/தவறு)
5. இலக்கணத்திற்கு அப்பாற்பட்டு, தொன்றுதொட்டு வழங்கிவருவது இலக்கணப்போலி. (சரி/தவறு)

## இ) பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | இடக்கரடக்கல் | - | நகர்ப்புறம் |
| 2. | மங்கலம் | - | தஞ்சை |
| 3. | குழூஉக்குறி | - | விளக்கைக் குளிரவை |
| 4. | மரூஉ | - | வாய் பூசி வந்தேன் |
| 5. | இலக்கணப்போலி | - | ஆடையைக் காரை என்பர் |

## ஈ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.


1. வழக்கு என்றால் என்ன?
2. வழக்குகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. இயல்பு வழக்குகள் எத்தனை வகைப்படும்?அவை யாவை?
4. தகுதி வழக்கு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
5. மரூஉச் சொல்லைச் சான்று தந்து விளக்குக.
6. மங்கலம் என்பதற்கு இரண்டு சான்று தருக.

## ஈ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக.

1. இயல்பு வழக்கு குறித்து விரிவாக எழுதுக.
2. தகுதி வழக்கு குறித்து விரிவாக எழுதுக.

## 13.5 மொழியோடு விளையாடுவோம்

**கொடுக்கப்பட்ட குறிப்புகளைக் கொண்டு விடுபட்ட இடங்களைச் சொற்களால் நிரப்புவோம்.**




| மேலிருந்து கீழ்: | கீழிருந்து மேல்: |
|---|---|
| 1. தாவரங்களில் பெரியது.<br>2. மேலாடைக்கு வேறு பெயர்.<br>3. பாலைவனக் கப்பல்.<br>6. கசப்பாக இருக்கும் காய்.<br>9. பால் தரும் விலங்கு, | 5. அண்ணனுக்கு இளையவன்.<br>10. மரத்திற்கு மரம் தாவும் விலங்கு.<br>11. சுவரில் ஊர்ந்து செல்லும் உயிரினம். |
| **இடமிருந்து வலம்:** | **வலமிருந்து இடம்:** |
| 1. பலாச்சுளையின் நிறம்.<br>4. காற்றில் பறக்க விடுவது.<br>8. நான்கு கால்கள் கொண்டது. அமருவதற்குப் பயன்படுவது.<br>9. ஏரி, குளம், ஆறுகளில் பயணம் செய்யப் பயன்படுவது. | 7. பொதி சுமக்கும் விலங்கு. |

### தகவல் துளி

**தப்பாட்டம்**

தப்பு என்னும் தோலிசைக் கருவியை அடித்து இசையெழுப்பி அதற்கேற்ப ஆடும் ஆட்டம் தப்பாட்டம் ஆகும். இது பறையாட்டம், பறைமேளம், பறையடித்தல், தப்படித்தல் என்றும் வழங்கப்படுகிறது. தப்பாட்டத்தில் பாடல் இடம்பெறுவதில்லை. தப்பின் இசையும் அதற்கேற்ற ஆட்டமுமே முதன்மை பெறுகின்றன. தப்பாட்டம் ஆடுவோர் நேர்வரிசையிலும் எதிர்எதிராகவும் வட்டமாகவும் நின்று ஆடுகின்றனர். சுழன்று ஆடுதல், குதித்தல் போன்ற விறுவிறுப்பான ஆட்டமுறைகள் பார்ப்போரை வியப்பில் ஆழ்த்தும். தப்பாட்டம், பார்ப்போரையும் ஆடத்தூண்டும் துள்ளல் இசையைக் கொண்டதாகும். ஆண்களால் மட்டுமே ஆடப்பட்டுவந்த தப்பாட்டம் இன்றைய நிலையில் பெண்களாலும் விரும்பி ஆடப்பட்டு வருகின்றது.

## 13.6 கேட்டல் கருத்தறிதல்

### கைத்தறி நெசவுக்கலை

இந்தியர்களின் மரபு வழிப்பட்ட ஆடை நெய்யும் முறையே கைத்தறி நெசவுக்கலை. சிறுதொழிலாகச் செய்யப்படும் இதில் இந்தியா முழுக்க ஏறத்தாழ 43 லட்சம் மக்கள் ஈடுபட்டுள்ளனர். இத்தொழில் இந்தியாவின் கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்குத் தேவையான வருமானத்தைத் தருகிறது.

உலகம் முழுவதும் உற்பத்தியாகும் கைத்தறி ஆடைகளில், கிட்டத்தட்ட 95 சதவீத ஆடைகள் இந்தியாவில் தயாரிக்கப்படுகின்றன. இந்திய வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த சுதேசி இயக்கம் உள்நாட்டுப் பொருள்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் 1905ஆம் ஆண்டு ஆகஸ்டு 7ஆம் தேதி தொடங்கப்பட்டது. இதனை நினைவுகூரவும் கைத்தறி நெசவாளர்களைச் சிறப்பிக்கும் வகையிலும் 2015ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்டு 7ஆம் தேதி இந்தியாவில் தேசியக் கைத்தறி நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. நாட்டின் பொருளாதாரச் செயல்பாட்டில் விவசாயத்திற்கு அடுத்து மிகப் பெரிய அளவில் வேலைவாய்ப்பினை வழங்கும் தொழிலாக கைத்தறித் தொழில் விளங்கி வருகிறது.

தமிழ்நாட்டின் கைத்தறிப் பிரிவு, ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றுச் சிறப்புமிக்கது. கலைநுணுக்கம் வாய்ந்த கைத்தறி நெசவாளார்கள் தமிழ்நாட்டில் ஏராளம். இருப்பினும் காலப்போக்கில் இத்தொழிலில் பின்னடைவு ஏற்பட்டது. தமிழ்நாட்டரசு, புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கைத்தறித் துணிகளின் உற்பத்தியை அதிகப்படுத்துதல், புதிய வடிவமைப்புத் திறன்களை மேம்படுத்துதல், கைத்தறித் துணிகளைச் சந்தைப்படுத்துதல் போன்றவற்றின் மூலம் கைத்தறி நெசவைப் பாதுகாத்து வருகிறது. 'கைத்தறி ஆதரவுத் திட்டம்' போன்ற பல்வேறு திட்டங்களின் மூலம் கைத்தறி நெசவுக்கலை தற்போது மீட்டெடுக்கப்பட்டு வருகிறது எனலாம்.

### வினாக்கள்

1. இந்தியாவின் மரபு வழிப்பட்ட ஆடை நெய்யும் முறை எது?
2. இந்தியாவின் தேசியக் கைத்தறி நாள் எப்போது கடைப்பிடிக்கப்படுகிறது?
3. கைத்தறி நெசவுக்கலையை மீட்டெடுக்கும் திட்டங்கள் யாவை?
4. உலக கைத்தறித் துணிகள் ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு எத்தனை சதவீதம்?
5. இந்தியாவில் எப்பகுதியில் வாழும் மக்களுக்கு அதிகமான வருமானத்தைக் கைத்தறி நெசவுத்தொழில் வழங்குகிறது?

## 13.7 மொழிபெயர்ப்போம்

Indian culture is one of the age-old cultures in the world established around 5000 years ago. The supremacy and diversity of Indian culture cannot be denied. There is a common buzzword for India "Unity in diversity" which implies that India is a diverse and huge country. where people of different religions and traditions live together in great harmony and peace.

______________________________________________

______________________________________________

______________________________________________

## 13.8 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | நாட்டுப்புறக்கலை | - | Folk Art |
| 2. | திரை | - | Screen |
| 3. | நடிகர் | - | Actor |
| 4. | ஒலிபெருக்கி | - | Loudspeaker |
| 5. | புல்லாங்குழல் | - | Flute |
| 6. | பார்வையாளர்கள் | - | Audience |
| 7. | ஒப்பனை | - | Makeup |
| 8. | கதாபாத்திரம் | - | Character |
| 9. | இதிகாசங்கள் | - | Epics |
| 10. | கோமாளி | - | Clown |

## 13.9 உயர்நிலைத்திறன்

**பின்வரும் பாடலைப் படித்து, அதன் நயங்களைக் (பொருள், ஒலி, கற்பனை) கூறுக.**

**(தாய் தன் குழந்தையைச் சீராட்டிப் பாராட்டி வளர்ப்பதைக் கூறும் நாட்டுப்புறப் பாடல்)**

பந்தலிலே தூங்க வைத்தால்

பல தோஷம் தாக்கும் என்று

சந்திலே தூங்க வைத்தால்

சாரல் அடிக்கும் என்று

தொட்டிலிலே தூங்க வைத்தால்

தூக்கம் கலையும் என்று

பூமியிலே நடக்க விட்டால்
புழுதி படியும் என்று
தோள்மேலே தூளி கட்டித்
தொடைமேலே நடை பழக்கி
மார்மேலே தூங்க வைத்து
மடிமேலே தவழ விட்டேன்
சங்காலே பால் வார்த்தால்
சமர்த்துக் குறையும் என்று
இரும்பாலே பால் வார்த்தால்
எழுத்துக் குறையும் என்று
வெள்ளியால் பாலாடை
விலை போட்டு வாங்கிவந்தேன்
வெள்ளியும் வேண்டா என்று
விரலாலே அள்ளி விட்டேன்

- தமிழக நாட்டுப்பாடல்கள், மு.வை. அரவிந்தன்.

## 13.10 செயல்திட்டம்

தமிழகத்தில் நடைபெறும் நாட்டுப்புறக் கலைகளுள் 'பொய்க்கால் குதிரை ஆட்டம்' பற்றிய செய்திகளைப் படங்களுடன் தொகுத்து எழுதி வருக.

## 14.1 பேசுவோம்

பாடம்
# 14



### கலந்துரையாடுவோம்

கும்மிப்பாடல் பற்றி நீங்கள் அறிந்துகொண்ட தகவல்களை வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 14.2 படிப்போம்

### காஃபித் தோட்டப் பாட்டு

நாட்டுப்புறப் பாடல்கள் என்பவை எளிய மக்களின் வாழ்வோடு கலந்தவை. பிறப்புமுதல் இறப்புவரை ஒவ்வொரு நிகழ்விலும் இடம்பெறுபவை. நாட்டுப்புறப் பாடல்கள் வாய்மொழி இலக்கியங்களாக உள்ளன. இப்பாடல்கள் வழியே மக்கள் தங்களின் இன்ப துன்பங்களை வெளிப்படுத்தினர். அவ்வகையில் 'காஃபித் தோட்டப் பாட்டு' காஃபித் தோட்டங்களில் பணியாற்றிய மக்களின் துன்பங்களை எடுத்துரைக்கிறது.

1. பெண்ணே நவமணியே பிரியமுள்ள மாமயிலே
   கண்ணே என்கண்மணியே தங்கரெத்தினமே - கண்டி
   காஃபித்தோட்டம் கதையைக்கேளு பொன்னுரெத்தினமே!

2. சிங்கப்பூர் பினாங்கு கண்டி செழிப்பான தேசமென்று
   எங்கும் இந்திய ஜனத்தைத் தங்கரெத்தினமே - கங்காணி ஏமாற்றிக்
   கொண்டுபோறான் பொன்னுரெத்தினமே!

3. பெண்டு பிள்ளைகளுடன் பிரியத்தோடு போனோர்களை
   உண்ணவுண வில்லாமல் தங்கரெத்தினமே - கங்காணி
   ஓயாமல் வேலைவாங்கிப் பொன்னுரெத்தினமே!

4. பட்டப்பகல் தனிலே பாழடைந்த தோட்டத்திலே
   அட்டை கடியினாலே தங்கரெத்தினமே - ஜனங்கள்
   அலறித் துடிக்கிறாராம் பொன்னுரெத்தினமே!

5. எல்லோரும் சொல்லுவது என்னமோ என்றிருந்தேன்
   கல்லான மனமானாலும் தங்கரெத்தினமே - இந்தக்
   கதையைக் கேட்டால் கரைந்திடுமே பொன்னுரெத்தினமே!



## பாடல் விளக்கம்:

நவமணி போன்ற பெண்ணே! அன்பானவளே! மயில் போன்றவளே! கண்ணே! கண்மணி போன்றவளே! இலங்கையில் உள்ள கண்டி நகரத்தில் உள்ள காஃபித் தோட்டத்தின் கதையை நீ கேட்பாயாக என் தங்கரெத்தினமே! பொன்னுரெத்தினமே!

சிங்கப்பூர், மலேசியாவின் பினாங்கு, இலங்கையின் கண்டி போன்ற செழிப்பான நாடுகளுக்குக் கங்காணிகள் எனப்படும் கண்காணிப்பாளர்கள், இந்திய மக்களை ஏமாற்றிக் காஃபித் தோட்டங்களுக்கு அடிமையாகப் பணியாற்றக் கூட்டிச் சென்றனர்.

கங்காணி கூறிய ஆசைவார்த்தைகளில் ஏமாந்து அன்பான மனைவியையும் குழந்தைகளையும் தம்முடன் அழைத்துச் சென்றனர். அவ்வாறு சென்றவர்களை உண்பதற்கு உணவுகூடக் கொடுக்காமல் கங்காணி துன்புறுத்தினான்.

பகல் நேரத்தில் பாழடைந்த காஃபித் தோட்டங்களில் மக்கள் பணிபுரிந்தனர். அப்போது, அங்குள்ள இரத்தம் உறிஞ்சும் அட்டைகளால் கடிபட்டுத் துன்புற்றனர்.

இவ்வாறெல்லாம் பிறர் கூறும்போது எளிதாக எண்ணினேன். ஆனால் இப்போது அக்கொடுமைகளை நானே எதிர்கொள்கிறேன். இவ்வாறான காஃபித் தோட்டக் கதையைக் கேட்டால் கல்லான மனமும் கரைந்துவிடும். இவ்வாறாகக் காஃபித் தோட்டத்தில் பணியாற்றிய மக்களின் துன்பங்கள் கூறப்படுகின்றன.

## நூலைப் பற்றி

'காஃபித் தோட்டப் பாட்டு', குஜிலி இலக்கிய வகையைச் சேர்ந்தது. குஜிலி இலக்கியம் என்பது நாட்டுப்புறப் பாடல் வடிவத்தின் ஒரு வகையாகும். மேற்கண்ட பாடல் ஒரு பெண்ணை நோக்கிப் பாடுவதாக அமைந்துள்ளது. இசைக்கோவைக்காகத் 'தங்க ரெத்தினமே, பொன்னு ரெத்தினமே' எனப் பாடப்பட்டுள்ளது.

## பொருள் அறிவோம்

1. கண்டி – இலங்கையிலுள்ள ஒரு நகரம்
2. பினாங்கு – மலேசிய மாநிலங்களுள் ஒன்று
3. தேசம் – நாடு
4. ஜனம் – மக்கள்
5. பெண்டு – பெண்கள்
6. கங்காணி – கண்காணிப்பாளர்

## பயிற்சிகள்

### அ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக.

1 வாய்மொழி இலக்கியங்கள் என்பவை நாட்டுப்புறப் பாடல்கள் என அழைக்கப்படுகின்றன. (சரி/தவறு)

2. காஃபித் தோட்டத் தொழிலாளர்களைக் கங்காணி என அழைப்பர். (சரி/தவறு)

3. காஃபித் தோட்டப் பாட்டு குஜிலி இலக்கிய வகையைச் சேர்ந்தது. (சரி/தவறு)

4. நாட்டுப்புறப் பாடல்கள் என்பவை எளிய மக்கள் வாழ்வோடு கலந்தவை அல்ல. (சரி/தவறு)

5. குஜிலி இலக்கியம் என்பது நாட்டுப்புறப் பாடல் வடிவத்தின் ஒரு வகையாகும். (சரி/தவறு)

### ஆ) பொருத்துக.

1. கண்டி – கண்காணிப்பாளர்
2. பினாங்கு – மக்கள்
3. ஜனம் – பெண்கள்
4. பெண்டு – இலங்கை
5. கங்காணி – மலேசியா

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. காஃபித் தோட்டப் பாட்டு – குறிப்பு வரைக.

2. எந்தெந்த நாடுகளுக்குக் காஃபித் தோட்டப் பணிகளுக்காக மக்கள் சென்றதாக இப்பாடல் கூறுகின்றது?

3. 'குஜிலி இலக்கியம்' என்றால் என்ன?

4. 'நாட்டுப்புற இலக்கியம்' என்றால் என்ன?

5. "பெண்ணே நவமணியே" எனத் தொடங்கும் இப்பாடல் எத்தகைய மக்களின் துன்பங்களை எடுத்துரைக்கிறது?

### ஈ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக.

1. "காஃபித் தோட்டக் கதையைக் கேளு பொன்னுரெத்தினமே" எனக் கூறும் செய்தியினைத் தொகுத்து எழுதுக.

2. "பெண்ணே நவமணியே" எனத் தொடங்கும் நாட்டுப்பறப் பாடலைப் பிழையின்றி எழுதுக.

## 14.3 படிப்போம்

### தமிழர் கூத்துக் கலைகள் – பொம்மலாட்டம்

மரபைப் பின்பற்றி நிகழ்த்தப்படும் கலைகளுள் ஒன்று பொம்மலாட்டம். ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதம் 21ஆம் நாள் உலக பொம்மலாட்ட நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த நாளில் பொம்மலாட்டக் கலைஞர் முல்லைவாணன் அவர்களுடன் மாணவர்கள் கலந்துரையாடுகிறார்கள்.



**கதிர்** : வணக்கம் ஐயா, உலக பொம்மலாட்ட நாள் வாழ்த்துகள். இந்த இனிய நாளில் உங்களைக் காண்பதில் பெருமகிழ்வு கொள்கிறோம்.

**முல்லைவாணன்** : மாணவர்களுக்கு வணக்கம். இளைய தலைமுறையினர் நாட்டுப்புறக்கலைகளின் மீது கொண்டுள்ள ஆர்வம் மகிழ்ச்சியளிக்கிறது.

**வான்மதி** : ஐயா பொம்மலாட்டம் தமிழர்களின் மரபுவழிக் கலைகளுள் ஒன்றா?

**முல்லைவாணன்** : ஆமாம். பொம்மலாட்டம், தமிழர்களின் மரபுவழிக் கலைகளுள் ஒன்றுதானம்மா.

**தேன்தமிழ்** : பொம்மலாட்டம் எவ்வாறு நிகழ்த்தப்படுகிறது?

**முல்லைவாணன்** : மரத்தாலான பொம்மைகளை நூலால் கட்டித் திரைக்குப் பின்னால் இருந்து இயக்கியபடி கதை சொல்லும் ஒரு சுவையான நிகழ்வு.

இதனை மரப்பாவைக் கூத்து, தோல் பாவைக்கூத்து, பாவைக்கூத்து என்றெல்லாம் அழைப்பர்.

**அகிலன்** : இதற்கான பொம்மைகள் தயாரிக்கும் முறை குறித்துக் கூறுங்கள் ஐயா.

**முல்லைவாணன்** : பொம்மலாட்டத்துக்குப் பயன்படும் பொம்மைகளைக் கல்யாண முருங்கை அல்லது முள் முருங்கை என அழைக்கப்படும் மரத்திலிருந்து செய்கிறார்கள். இந்தப் பொம்மைகள் 45 செ.மீ. முதல் 90 செ.மீ. வரை உயரமுடையதாக இருக்கும்.

**மலர்** : கேட்கவே சுவையாக உள்ளது. பொம்மலாட்ட அரங்கம் பற்றியும் கூறுங்கள் ஐயா?

**முல்லைவாணன்** : பொம்மலாட்ட அரங்கம் 4 மீட்டர் அகலம், 6 மீட்டர் நீளம், 3 மீட்டர் உயரம் இருக்கும். முன்புறத்தில் 1 மீட்டர் இடைவெளி விட்டு கறுப்புத் திரைச்சேலை ஒன்று கட்டப்பட்டிருக்கும். மூன்று புறங்கள் அடைக்கப்பட்ட அரங்கில் இந்தக் கலை நிகழ்த்தப்படும். திரைக்குப் பின்னால் நின்றுகொண்டிருக்கும் பொம்மலாட்டக் கலைஞர்களின் தலையை மறைக்கும் அளவுக்கு உயரமாக இருக்கும். பொம்மைகள் தொங்குவதற்கான கயிறுகள் கறுப்புத் திரையின் மேல் கட்டப்பட்டிருக்கும்.

**புகழ்** : பொம்மலாட்டத்தில் கலைஞர்களின் பங்கு குறித்துக் கூறுங்கள் ஐயா?

**முல்லைவாணன்** : பொம்மலாட்டத்தில் மொத்தமாக 9 கலைஞர்கள் பங்கேற்பார்கள். இவர்களில் 4 கலைஞர்கள் பொம்மைகளை இயக்குவார்கள். மற்ற 4 கலைஞர்கள் இசைக்கலைஞர்களாக இருப்பார்கள். ஒருவர் உதவியாளராக இருப்பார். ஆர்மோனியம், தபேலா, மிருதங்கம், ஜால்ரா, முகவீணை ஆகிய இசைக்கருவிகள் இக்கலை நிகழ்த்தலுக்குப் பயன்படுத்தப்படும். தற்போது சிலர் மின் இசைக்கருவிகளைப் பயன்படுத்துகிறார்கள். அரங்கின் வலப்புறத்தில் இசைக்கலைஞர்கள் அமர்ந்திருப்பார்கள்.

**நிலா** : பொம்மைகளை இயக்குவது குறித்தும் விளக்குங்கள் ஐயா?

**முல்லைவாணன்** : பொம்மையை இயக்குபவர் திரைக்குப் பின்னே இருப்பார். அவர் பார்வையாளர்களின் கண்களுக்குத் தெரிய மாட்டார். மேலும் கீழும் அசைத்தல், பக்கவாட்டில் அசைத்தல் என இருவகைகளில் பொம்மைகள் இயக்கப்படும். உயிரற்ற பொம்மைகள் உயிர் பெற்றுத் திரைக்கு முன்னே ஆடிப்பாடி, பேசும் உணர்வில் பார்வையாளர்களை ஒன்றச் செய்வதே இந்தக் கலையில் இயல்பான தன்மையாக உள்ளது.

**இனியன்** : என்னென்ன கதைகளைத் தேர்ந்தெடுத்துப் பொம்மலாட்டத்தை இயக்குவார்கள்?

**முல்லைவாணன்** : பொம்மலாட்டத்தில் இதிகாசம் மற்றும் புராணக் கதைகள், சரித்திரக் கதைகள் அதிகம் நிகழ்த்தப்படுகிறது. குறிப்பாகத் தமிழகத்தில், அருணகிரிநாதர் வரலாறு, சிறுத்தொண்ட நாயனார் கதை, சீதா கல்யாணம், பக்த பிரகலாதன், ஆண்டாள் கல்யாணம், அரிச்சந்திரன் கதை, வள்ளி திருமணம் ஆகியன நிகழ்த்தப்படுவதுண்டு. ஆனால் தற்காலத்தில் சமூக நிகழ்வுகள், விழிப்புணர்வுச் செய்திகள், பகுத்தறிவுச் சிந்தனைகள், சிறுவர் நாடகங்கள் போன்றவற்றையும் கதைக்கருவாக எடுத்துக்கொண்டு பொம்மலாட்டங்கள் நிகழ்த்தப்படுகின்றன.

**ஆதினி** : பொம்மலாட்டம் குறித்துப் பல்வேறு தகவல்களைச் சுவையாகத் தெரிவித்த தங்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன் ஐயா.

பொம்மலாட்டக் கலை நவீன காலத்திற்கேற்ப தன்னைப் புதுப்பித்துக்கொள்கிறது. சமகால நிகழ்வுகளையும் கதைக்களமாகக் கொண்டு எளிய முறையில் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது.

## பொருள் அறிவோம்

1. மரப்பாவை – மரத்தாலான பொம்மை
2. தோற்பாவை – தோலால் ஆன பொம்மை
3. முகவீணை – இசைக் கருவி

## அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. உலக பொம்மலாட்ட நாள் கடைப்பிடிக்கப்படும் நாள் என்ன?

   அ) மார்ச் 21  ஆ) மார்ச் 20  இ) மார்ச் 22  ஈ) மார்ச் 23

2. பொம்மலாட்டத்துக்கான பொம்மைகள் தயாரிக்கப் பயன்படும் மரம்?

   அ) ஆலமரம்  ஆ) வேப்ப மரம்  இ) முள் முருங்கை மரம்  ஈ) அரசமரம்

3. பொம்மலாட்டத்தில் எத்தனை கலைஞர்கள் பங்கேற்பார்கள்?

   அ) 9 பேர்  ஆ) 8 பேர்  இ) 7 பேர்  ஈ) 6 பேர்

4. பொம்மைகள் எத்தனை விதமாக அசைக்கப்படுகின்றன?

   அ) 4  ஆ) 5  இ) 2  ஈ) 3

## ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பொம்மை செய்யப்படும் முறை குறித்து எழுதுக.
2. பொம்மலாட்ட நிகழ்த்துமுறை குறித்து எழுதுக.
3. பொம்மலாட்ட அரங்கு குறித்து எழுதுக.

## இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. பொம்மலாட்டம் பற்றிய கருத்துகளை விரிவாக எழுதுக.

## 14.4 தெரிந்துகொள்வோம்

### ஆகுபெயர்

ஒரு சொல் தனக்குரிய பொருளைக் குறிக்காமல் தன்னோடு தொடர்புடைய வேறு ஒரு பொருளைக் குறிப்பதை ஆகுபெயர் என்பர். எனவே ஒரு சொல்லின் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய வேறொன்றிற்கு ஆகி வருவதே ஆகுபெயராகும்.

- ❖ உலகம் சிரித்தது.
- ❖ என் பள்ளி வென்றது.

இவற்றில் உலகம், பள்ளி என்னும் இடப்பெயர்கள் இடத்தை உணர்த்தாமல் முறையே உலகிலுள்ள மக்களையும் பள்ளியிலுள்ள மாணவர்களையும் உணர்த்துகின்றன. எனவே இவை ஆகுபெயர் எனப்பட்டன.

| வ. எண் | ஆகுபெயர் | இலக்கணம் | எடுத்துக்காட்டு | விளக்கம் |
|---|---|---|---|---|
| 1. | பொருளாகு பெயர் | முதல் பொருளின் பெயர், அதனோடு தொடர்புடைய இன்னொரு (உறுப்பு) பொருளுக்கு ஆகி வருதல். | மல்லிகை சூடினாள். | மல்லிகைக் கொடியைக் குறிக்காமல் பூவைக் குறித்தது. |
| 2. | இடவாகு பெயர் | இடத்தின் பெயர் இடத்தோடு தொடர்புடைய இன்னொன்றிற்காக ஆகி வருவது | உலகம் வியந்தது | உலகத்தைக் குறிக்காமல் மக்களைக் குறித்தது. |
| 3. | காலவாகு பெயர் | காலப்பெயர் அதனுடன் தொடர்புடைய ஒன்றிற்குப் பெயராக ஆகிவருவது காலவாகு பெயராகும். | திசம்பர் சூடினாள் | திசம்பர் மாதத்தைக் குறிக்காமல் பூவைக் குறித்தது. |
| 4. | சினையாகு பெயர் | ஒரு சினைப்பெயர் அதன் முதற்பொருளுக்கு ஆகி வருவது சினையாகு பெயர் எனப்படும். | தலைக்குப் பத்து ரூபாய் கொடு. | தலை என்ற உறுப்பைக் குறிக்காமல் நபரைக் குறித்தது. |
| 5. | பண்பாகு பெயர் | ஒரு பண்பின் பெயர், அப்பண்பையுடைய பொருளுக்கு ஆகி வருவது பண்பாகு பெயர். | வீட்டிற்கு வெள்ளை அடித்தான் | பண்பைக் குறிக்காமல் சுண்ணாம்பைக் குறித்தது. |

| வ. எண் | ஆகுபெயர் | இலக்கணம் | எடுத்துக்காட்டு | விளக்கம் |
|---|---|---|---|---|
| 6 | தொழிலாகு பெயர் | தொழிற்பெயர்கள் செயல் அல்லது தொழிலைக் குறிக்காமல் அதனுடன் தொடர்புடைய ஒன்றிற்குப் பெயராக ஆகி வருவது தொழிலாகு பெயராகும். | பொங்கல் உண்டான் | பொங்குதல் என்ற தொழிலைக் குறிக்காமல் உணவைக் குறித்தது. |
| 7 | எண்ணல் அளவை ஆகு பெயர் | ஓர் எண்ணல் அளவையின் பெயர் அந்த எண்ணிக்கையில் உள்ள பொருளுக்கு ஆகி வருவது எண்ணல் அளவையாகு பெயர் எனப்படும். | ஒன்று பெற்றால் ஒளி மயம். | எண்ணைக் குறிக்காமல் குழந்தையைக் குறித்தது. |
| 8. | எடுத்தல் அளவை ஆகுபெயர் | ஓர் எடுத்தல் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வருவது எடுத்தல் அளவையாகு பெயர் எனப்படும். | மூன்று கிலோ வாங்கி வா. | அளவைக் குறிக்காமல் பொருளைக் குறித்தது. |
| 9. | முகத்தல் அளவை ஆகுபெயர் | திரவப் பொருளை முகந்து அளப்பது முகத்தல் அளவை ஆகும். ஒரு முகத்தல் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வருவது முகத்தல் அளவையாகு பெயர் எனப்படும். | ஐந்து லிட்டர் வாங்கி வா. | அளவைக் குறிக்காமல் திரவத்தைக் குறித்தது. |
| 10. | நீட்டல் அளவை ஆகுபெயர் | நீட்டி அளப்பது நீட்டல் அளவை ஆகும். ஒரு நீட்டல் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வருவது நீட்டல் அளவையாகு பெயர் எனப்படும். | இரண்டு மீட்டர் கொடுங்கள். | அளவைக் குறிக்காமல் துணியைக் குறித்தது. |

| வ. எண் | ஆகுபெயர் | இலக்கணம் | எடுத்துக்காட்டு | விளக்கம் |
|---|---|---|---|---|
| 11. | சொல்லாகு பெயர் | ஒரு சொல் சொன்னவற்றிற்கும் பிறவற்றிற்கும் ஆகுபெயராக வருவதால் அது சொல்லாகு பெயர் ஆகும். | இந்தப் பாட்டு என் சிந்தனையைத் தூண்டியது. | பாட்டைக் குறிக்காமல் பாடலுக்கான பொருளைக் குறித்தது. |
| 12. | தானியாகு பெயர் | ஓர் இடத்தில் உள்ள ஒரு பொருளின் பெயர் (தானி), அது சார்ந்திருக்கும் இடத்திற்குப் (தானத்திற்கு) பெயராகி வருவது தானியாகு பெயர் ஆகும். | பாலை இறக்கு. | பாலைக் குறிக்காமல் பால் உள்ள பாத்திரத்தைக் குறித்தது . |
| 13. | கருவியாகு பெயர் | ஒரு கருவியின் பெயர் அக்கருவியால் ஆகும் பொருளுக்கு ஆகி வருவது கருவியாகு பெயர் எனப்படும். | புல்லாங்குழல் கேட்டு மகிழ்ந்தாள் | புல்லாங் குழலைக் குறிக்காமல் இசையைக் குறித்தது. |
| 14. | காரியவாகு பெயர் | ஒரு காரியத்தின் பெயர் அதன் காரணத்திற்கு (கருவிக்கு) ஆகி வந்தால் காரியவாகு பெயர் எனப்படும். | நான் குறள் கற்றேன். | குறள் என்பது பா வகையைக் குறிக்காமல் திருக்குறள் நூலைக் குறித்தது. |
| 15. | கருத்தா ஆகுபெயர் | ஒருவர் செய்த பொருளின் பெயர், செய்தவரின் பெயருக்கே ஆகி வருவது. | வைரமுத்துவைப் படி | கவிஞரைக் குறிக்காமல் அவர் இயற்றிய நூலைக் குறித்தது. |
| 16. | உவமையாகு பெயர் | ஓர் உவமைப் பெயர், அதனால் உவமிக்கப்படுகின்ற பொருளுக்கு ஆகி வருவது, உவமையாகுபெயர். | மயில் ஆடினாள் | உவமையைக் குறிக்காமல் பொருளைக் குறித்தது. |

## பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பின்வருவனவற்றுள் இடவாகு பெயரைத் தேர்க.

(அ) கார் அறுத்தான் (ஆ) ஊர் உறங்கியது

(இ) வெற்றிலை நட்டான் (ஈ) மூன்று மீட்டர் வாங்கு.

2. பொங்கல் உண்டான் – இஃது எவ்வகை ஆகுபெயர்?

(அ) தொழிலாகு பெயர் (ஆ) பண்பாகு பெயர்

(இ) பொருளாகு பெயர் (ஈ) காலவாகு பெயர்

### ஆ) பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | தானியாகு பெயர் | - | ஆளுக்கு நூறு கொடு |
| 2. | சினையாகு பெயர் | - | தேநீரை இறக்கு |
| 3. | எண்ணல் அளவை ஆகுபெயர் | - | தலைக்கு நூறு ரூபாய் கொடு |
| 4. | கருவியாகு பெயர் | - | வீணை கேட்டு மகிழ்ந்தாள் |

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. ஆகுபெயர் என்றால் என்ன? சான்று தருக.
2. முகத்தல் அளவை ஆகுபெயரைச் சான்றுடன் விளக்குக.
3. கருவியாகு பெயரைச் சான்றுடன் விளக்குக.

### தகவல் துளி

19ஆம் நூற்றாண்டின் கடைசியிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை வெளியான வெகுசன இலக்கியம் 'குஜிலி இலக்கியம்'. தொடக்கத்தில், மக்கள் தங்களின் துயரங்களை வெளிப்படுத்த எடுத்துக்கொண்ட ஓர் ஊடகமே குஜிலி இலக்கியம். இது நாட்டார் மக்களால் செய்திகளைப் பாடலாகக் கூறிய வழக்காகும். பின்னர் அனைத்தையும் பாடுபொருளாக எடுத்துக்கொண்டது. குஜிலி இலக்கியம், 'பெரிய எழுத்துப் புத்தகங்கள்', 'காலணா', 'அரையணா பாட்டுப் புத்தகங்கள்', 'தெருப்பாடல்கள்' என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டது. குஜிலி என்ற பெயர் குச்சிலி என்ற பெயரிலிருந்து திரிபாக வந்ததாகும். குச்சிலி புத்தகங்கள் என்பது மருவி குஜிலி புத்தகங்கள் என வழங்கப்பட்டது. இந்தப் பாடல்களில் எழுதியோர், பாடியோர் பற்றிய குறிப்புகள் ஏதும் இல்லை. சென்னையின் கானாப் பாடல்களின் முந்தைய வடிவமே குஜிலிப் பாட்டு.

## 14.5 கருத்து விளக்கப்படம்




### வினாக்கள்

1. எவ்விழாவிற்கான விளம்பரம் இது?
2. இவ்விழா எந்த ஊரில் நடைபெறுகிறது?
3. இவ்விழாவில் பங்கேற்க முன்பதிவிற்குத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி என்ன?
4. இவ்விழா எங்கு எப்போது நடைபெறுகிறது?
5. இவ்விழாவை நடத்தும் துறை எது?

## 14.6 கேட்டல் கருத்தறிதல்

### தஞ்சாவூர் ஓவியம்

தஞ்சாவூர் ஓவியம் என்பது தனித்தன்மை வாய்ந்த ஓர் ஓவியக்கலை ஆகும். இது கடவுள்களின் உருவங்களை வரைவதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஓர் ஓவிய முறை. 'மூச்சிமார்கள்' என்பவர்கள் ஓவியம் வரைவதைக் குலத்தொழிலாகக் கொண்டவர்கள். இவர்கள்தான் தஞ்சாவூர் ஓவியக்கலையைப் பரவலாக்கினர். மராத்திய மன்னர்கள் தஞ்சையை ஆண்ட காலத்திலும் இவ்வோவியர்களை ஆதரித்தனர். இரண்டாம் சரபோஜி மன்னர் இந்தக் கலையைப் பெருமளவு ஆதரித்தார்.

பலாமரம் அல்லது தேக்குமரப் பலகையில் பொருத்தப்பட்ட கித்தான் துணியின் மீது (Canvas) இவ்வகை ஓவியங்கள் வரையப்படுகின்றன. இம்முறையில் வரையப்படும் உருவங்களுக்கென்று சில தனித்தன்மைகள் உண்டு. இவ்வுருவங்களின் உடல் சற்றே பருத்ததாக இருக்கும். முகம் வட்டவடிவில் இருக்கும். கண்கள் பாதாம் பருப்பு வடிவத்தில் அமையும். கை கால்கள் வட்டுருவாக இருக்கும். மூக்கு, உதடுகள் கோடுகளால் அமைக்கப்படும். உருவத்தின் முகம் சாந்தமாகவும், சற்றே புன்னகை பூத்தபடியும் இருக்கும். வரையப்படும் உருவம் ஒரு பீடம் அல்லது ஊஞ்சலின் மீது அமர்ந்திருக்கும். அது ஆபரணங்கள், மாலைகள் அணிந்திருக்கும். இவற்றைப் பார்த்தாலே இது தஞ்சாவூர் ஓவியம் எனச் சொல்லிவிடலாம்.

தஞ்சாவூர் ஓவியக்கலை வடிவில் வரையப்படும் உருவங்களின் உடல்மீது பிரகாசமான வண்ணங்கள் தூரிகையைப் பயன்படுத்தித் தீட்டப்படும். இந்த வண்ணங்கள் எல்லாம் இயற்கையாகக் கிடைக்கும் வண்ணங்களே. இரசாயனக் கலவை, செயற்கை வண்ணங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதில்லை. பச்சை இலைகளை அரைத்துத் தயாரிக்கப்பட்ட விழுது, மஞ்சள் கிழங்கின் விழுது, செந்தூரம், கோபி, சுண்ணாம்பு விழுது, மலர்களை அரைத்துத் தயாரித்த விழுது ஆகியவற்றைக் கொண்டு வண்ணங்கள் தீட்டப்படும்.

சில படங்களில் உள்ள உருவங்களின் மீது தங்கப் பூச்சு பூசப்பட்டிருக்கும். உருவம் அணிந்திருக்கும் நகைகள் மீது வைரக்கற்கள், பச்சைக்கற்கள், சிவப்புக்கற்கள் பதிக்கப்பட்டிருக்கும். முத்துக்களும் பதிக்கப்பட்டிருக்கும். படத்தில், உருவத்திற்கு வெளியே தோரணங்கள், அலங்கார வளைவுகள், மண்டபங்கள் வரையப்பட்டிருக்கும். இவையும் தங்க முலாம் பூசப்பட்டவை. இவ்வகை ஓவியங்கள் விலை உயர்ந்தவை. இவ்வகை ஓவியத்திற்கு மத்திய அரசின் புவிசார் குறியீடு 2007ஆம் ஆண்டு கிடைத்துள்ளது.

### வினாக்கள்

1. தஞ்சாவூர் ஓவியக்கலை யாருடைய படங்களை வரையப் பயன்படுத்தப்படுகிறது?
2. தஞ்சாவூர் ஓவியக்கலையைப் பரவலாக்கியவர்கள் யாவர்?
3. தஞ்சாவூர் ஓவியக்கலையைப் பெருமளவு ஆதரித்த மன்னர் யார்?
4. தஞ்சாவூர் ஓவியக்கலையில் பயன்படுத்தப்படும் வண்ணங்கள் எத்தகையவை?
5. எந்த ஆண்டு இவ்வகை ஓவியங்களுக்குப் புவிசார் குறியீடு வழங்கப்பட்டது?

## 14.7 மொழிபெயர்ப்போம்

ஒரு நாட்டின் கலை மற்றும் பண்பாடு அச்சமூகத்தினைப் பிரதிபலிக்கும் சிறந்த கருவியாகும். கலை என்பது பொழுதுபோக்கிற்காக மட்டுமின்றித் தகவல் ஊடகமாகவும், பண்பாட்டுப் பாலமாகவும் திகழ்கின்றன. கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை முதலிய கலைகளின் வாயிலாகச் சமூகத்தையும் பண்பாட்டையும் அறிந்துகொள்ளலாம்.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

## 14.8 அறிந்துகொள்வோம்

1. பொம்மலாட்டம் - Puppet show
2. ஆர்வம் - Curiosity
3. மரபுவழிக் கலை - Traditional art
4. பொம்மைகள் - Puppets
5. கயிறு - Rope
6. சரித்திரக் கதைகள் - Historical stories
7. சமூக நிகழ்வுகள் - Social events
8. விழிப்புணர்வு - Awareness
9. கதைக்கரு - Theme
10. பகுத்தறிவுச் சிந்தனைகள் - Rational thoughts
11. நவீன காலம் - Modern age
12. புதுப்பித்தல் - Updation
13. சமகால நிகழ்வுகள் - Contemporary events

## 14.9 உயர்நிலைத்திறன்

**அரிச்சந்திரனின் கதையைத் தெரிந்துகொள்ள, கீழ்க்காணும் தொடர்களை வரிசைப்படுத்துக.**

- ❖ ஒரே ஒரு பொய் கூறினால் போதும், அவன் இழந்தவை அனைத்தும் அவனுக்கே கிடைத்துவிடும்.
- ❖ அரிச்சந்திரன் நீதியும் நேர்மையும் கொண்ட மன்னன். அவன் தன் வாழ்நாள் முழுவதும் பொய் கூறாமல் வாழ்ந்தான்.
- ❖ ஆனால், அரிச்சந்திரன் தன் உயிரே போனாலும் பொய் கூறுவதை விரும்பவில்லை.
- ❖ விசுவாமித்திரர் கூறியதைக் கேட்ட அரிச்சந்திரன் அவருக்கே தன் நாட்டைக் கொடுத்துவிட்டான்.
- ❖ அரிச்சந்திரனின் நேர்மையும் பொய் கூறாத பண்பும் இந்தியப் பண்பாட்டு விழுமியத்திற்கு இன்றும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.
- ❖ பொய் கூற விரும்பாத அரிச்சந்திரன், தன் நாட்டை மட்டுமின்றி மனைவியையும் மகனையும் இழந்தான்.
- ❖ இறுதியில் அவனது நேர்மையை அறிந்த விசுவாமித்திரர், அவனை வாழ்த்தி, அவன் இழந்தவற்றை மீண்டும் அளித்தார்.
- ❖ விசுவாமித்திரர் என்ற துறவி, அரிச்சந்திரனின் நேர்மையைச் சோதிக்க விரும்பினார்.
- ❖ தனது கனவில் வந்த அரிச்சந்திரன், நாட்டைத் தனக்குத் தந்துவிட்டதாக விசுவாமித்திரர் கூறினார்.
- ❖ இந்தியாவின் தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள், தம் வாழ்நாளில் பொய் கூறாமல் வாழ்ந்ததற்கு அரிச்சந்திரன் கதை நிகழ்வே காரணம் எனக் கூறினார்.

## 14.10 செயல்திட்டம்

உலக வெப்பமாதல் குறித்து அறிவுறுத்தும் வகையில் பொம்மலாட்ட நிகழ்ச்சிக்கான கதைக்கருவை உருவாக்கி, வகுப்பில் நிகழ்த்திக்காட்டுக.

# மீள்பார்வை

**1) கீழ்க்காணும் தொடர்களுக்குப் பொருத்தமான விடைகளைக் கோடிட்ட இடத்தில் நிரப்புக.**

(கண், வாய்மொழி, கவிதை, வலைப்பூ, மணநூல்)

1. சீவக சிந்தாமணி ____________ என்றும் அழைக்கப்படுகிறது.
2. கல்வி ____________ போன்றது.
3. கல்வி செழிப்பதனால் ____________ பிறக்கும்.
4. BLOG என்பதன் தமிழாக்கம் ____________
5. நாட்டுப்புறப்பாடல்கள் ____________ இலக்கியங்களாக உள்ளன.

**2) கீழ்க்காணும் தொடர்களுக்குப் பொருத்தமான விடைகளைக் கோடிட்ட இடத்தில் நிரப்புக.**

(வணிகம், கல்வி, தெருக்கூத்து, பட்டினப்பாலை, இடுகை)

1. சமூக முன்னேற்றத்திற்கான காரணங்களுள் முதன்மையானது ____________.
2. சங்ககால வணிகர்கள் நடுவுநிலை மாறாமல் ____________. செய்தனர்.
3. 'Post' என்பதன் தமிழாக்கம் ____________.
4. பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று ____________.
5. திறந்தவெளி மேடைகளில் ____________. நடைபெறும்.

**3) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக.**

1. கற்றோர் எங்குச் சென்றாலும் மதிக்கப்படுவர். (சரி/தவறு)
2. கல்வியறிவு பெற்றவரின் உள்ளம் இருளுக்கு ஒப்பானது. (சரி/தவறு)
3. வாரன் பஃபெட் தம் 14ஆவது வயதிலேயே வருமான வரி செலுத்தினார். (சரி/தவறு)
4. சிலப்பதிகாரம் ஐஞ்சிறுங்காப்பியங்களுள் ஒன்று. (சரி/தவறு)
5. 'குஜிலி இலக்கியம்' நாட்டுப்புறப் பாடல் வடிவத்தின் ஒரு வகை ஆகும். (சரி/தவறு)

## 4) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. கல்வியின் சிறப்பைத் தமிழ் இலக்கியங்கள் எவ்வாறு கூறியுள்ளன?
2. உவமைக்கவிஞர் என்று அழைக்கப்படுபவர் யார்?
3. 'மனம் கவர்ந்த நூல்' என்னும் தலைப்பில், உங்களது வலைப்பூவில் பதிவிடுவதற்கு ஏற்ப குறிப்புகள் எழுதுக.
4. பங்குவர்த்தகத் தந்தை 'வாரன் பஃபெட்' பற்றிக் குறிப்பு வரைக.
5. அரங்க அமைப்பில் பயன்படுத்தப்படும் எழினிகள் குறித்து எழுதுக.

## 5) கீழ்க்காணும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'உலக பொம்மலாட்ட நாள்' ________________ அன்று கொண்டாடப்படுகிறது.

   அ) மே 1 ஆ) ஜூன் 20 இ) மார்ச் 21 ஈ) திசம்பர் 3

2. மெகஸ்தனிஸ் எழுதிய நூல் ________________.

   அ) நேச்சுரல் ஹிஸ்டோரியா ஆ) இண்டிகா

   இ) பெரிப்ளூஸ் ஈ) தென்கடல் வாணிபச் செலவு

3. கங்காணி என்றழைக்கப்படுபவர் ________________.

   அ) காவலர் ஆ) கண்காணிப்பாளர் இ) தலைவர் ஈ) தொழிலாளி

4. உலகக் கைத்தறி ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு________________.

   அ) 75% ஆ) 80% இ) 60% ஈ) 95%

5. அரங்கின் ஒரு புறத்திலிருந்து மறுபுறத்திற்குச் செல்லும் எழினி ________________.

   அ) ஒருமுக எழினி ஆ) இருமுக எழினி

   இ) பொருமுக எழினி ஈ) கரந்துவரல் எழினி

## 6) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பகுபத உறுப்புகளுள் 'சந்தி' என்னும் உறுப்பை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. தனிமொழி எவ்வாறு வரும்? எடுத்துக்காட்டு தருக.
3. இயல்பு வழக்கு என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?
4. பொருளாகுபெயரைச் சான்றுடன் விளக்குக.
5. பண்பாகு பெயர் – குறிப்பு வரைக.

7) **கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக.**

1. 'வாழ்ந்தான்' – பகுபத உறுப்பிலக்கணம் தந்து விளக்குக.
2. மூவகை மொழியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. திணை, பால் – விகுதிகள் குறித்து விளக்குக.
4. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கூறுக.
5. தகுதி வழக்கின் வகைகளைக் கூறி விளக்குக.

8) **பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. எழுதுதல் | - | வினைமுற்று |
| 2. விடுவான் | - | முதனிலை திரிந்த தொழிற்பெயர் |
| 3. நடித்தவன் | - | தொழிற்பெயர் |
| 4. கேடு | - | முதனிலைத் தொழிற்பெயர் |
| 5. கொதித்தல் | - | வினையாலணையும் பெயர் |

9) **பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. Gems | - | 6. Fragrance | - |
| 2. Borders | - | 7. Silver coins | - |
| 3. Scholar | - | 8. Harbour | - |
| 4. Ignorance | - | 9. Pioneer | - |
| 5. Innovative | - | 10. Puppet show | - |

10) **கீழ்க்காணும் பழமொழிகளைச் சரியான சொல் கொண்டு நிரப்புக.**

(பணம், பல், கவி, அடங்கும், தூற்றிக்)

1. காற்றுள்ளபோதே ________________ கொள்.
2. சிறு துரும்பும் ________________ குத்த உதவும்.
3. எரிகிறதைப் பிடுங்கினால் கொதிக்கிறது ________________.
4. கனவில் கண்ட ________________ கைச்செலவிற்கு உதவாது.
5. கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் ________________ பாடும்.

**11) கீழ்க்காண்பனவற்றுள் சரியாகப் பொருத்தப்படாத இணை எது?**

| | | |
|---|---|---|
| 1. மல்லிகை சூடினாள் | – | பொருளாகுபெயர் |
| 2. உலகம் வியந்தது | – | இடவாகுபெயர் |
| 3. தலைக்குப் பத்து ரூபாய் கொடு | – | காலவாகுபெயர் |
| 4. வீட்டிற்கு வெள்ளை அடித்தாள் | – | பண்பாகுபெயர் |
| 5. பொங்கல் உண்டான் | – | தொழிலாகுபெயர் |

**12) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சமண சமயத் துறவிகளின் 'பள்ளி' என்ற சொல்லுக்குப் பொருள் தருக.
2. 'பேபிரஸ்' தாளில் எழுதப்பட்ட தமிழர்களின் வணிக ஒப்பந்தம் பற்றிய கையெழுத்துச் சுவடி எந்த நாட்டில் உள்ளது?
3. 'கொடுமணல்' அகழாய்வு- பற்றிக் குறிப்பு வரைக.
4. தப்பாட்டம் என்றால் என்ன?
5. 'குஜிலி இலக்கியம்' குறித்து எழுதுக.

**13) பின்வரும் உரைப்பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதுக.**

1. Libraries often provide quiet areas for studying, and they also often offer common areas to facilitate group study and collaboration. Libraries often provide public facilities for access to their electronic resources and the Internet.
2. An environment variable is a user-definable value that can affect the way running processes will behave on a computer. Environment variables are part of the environment in which a process runs..
3. As the Tamilnadu was surrounded by sea on two sides, Tamils were naturally engaged in seafaring and shipping. Also lived in coastal weaving lands. They lived by going to the sea daily to catch fish: therefore going to the sea was a natural occupation for the Tamils since ancient times.
4. Beginning in the 20th century AD, Pudukavithai appeared in Tamil literature and became a masterpiece. The verse poems written by Bharathi were the forerunners of new poetry in Tamil. The development of Tamil literature and the demand that came with it gave rise to Pudukavithai.
5. Tamil literature has a rich and long literary tradition spanning over two thousand years. The oldest extant works show signs of maturity, suggesting a still longer period of evolution.

14) பின்வரும் விளம்பரத்தைப் படித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.




**வினாக்கள்**

1. விளம்பரத்தில் காணப்படும் நிகழ்ச்சியின் தலைப்பு என்ன?
2. நிகழ்ச்சியில் நடைபெறும் நாடகத்தின் பெயர் என்ன?
3. நிகழ்ச்சி எங்கு, எப்போது நடைபெறுகிறது?
4. நாடகத்தினை நிகழ்த்தும் குழுவின் பெயர் என்ன?

15) பின்வரும் வினாவிற்கு உம் சொந்தக் கற்பனையில் விடை எழுதுக.

அ) 'கும்மிப்பாட்டு' வடிவத்தில் எட்டு அடிகள் கொண்ட நாட்டுப்புறப் பாடல் ஒன்றினை இயற்றுக.

(அல்லது)

ஆ) 'வியத்தகு தகவல்தொழில்நுட்பம்' என்னும் தலைப்பில் ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.

# அடிப்படை மொழித்திறன்கள்
# 1 –14 பாடங்கள், இலக்கணம், மொழிப் பயிற்சிகள்

## கேட்டல்

- கேட்டல் செயல்பாடுகளில் ஆர்வத்துடன் பங்கேற்றல். கேட்டுப் புரிந்துகொண்ட கருத்துகளை ஆராய்ந்து பார்த்தல், பகுத்துணர்தல், புரிந்துகொண்டவற்றைப் பிறருக்குத் தெளிவாகத் தொகுத்துக் கூறுதல்.

- தாம் கேட்கும் புதிய செய்திகளில் இடம்பெற்றுள்ள கருத்துகளை அடையாளம் காணுதல், குறிப்பெடுத்தல், கூடுதல் விவரங்களைக் கேட்க, விருப்பம் கொள்ளுதல்.

- கேட்டுணர்ந்த கருத்துகள் குறித்துப் பிறருடன் கருத்துப் பரிமாற்றம் செய்தல். தம் சொந்த நடையில் திறம்படப் பேசுதல். கதை, கட்டுரை, பாடல் முதலியவற்றைக் கேட்டு, அவற்றின் மையக்கருத்தை ஊகித்தறிதல்.

- இலக்கணக் கருத்துகளைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல் (மொழிமுதல் எழுத்துகள், மொழியிறுதி எழுத்துகள், வல்லினம் மிகும் இடங்கள், வல்லினம் மிகா இடங்கள், பகுபதம், பகாப்பதம், திணை, எண், பால், இடம், வினையாலணையும் பெயர், ஆகுபெயர்).

## பேசுதல்

- வரைபடங்கள், புள்ளி விவரங்கள், விளம்பரங்கள், அறிவிப்புகள் போன்ற கருத்து விளக்கப்படங்களைப் புரிந்துகொள்ளுதல். அவைசார்ந்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை கூறும் திறன் பெறுதல்.

- தாம் படித்துணர்ந்த பாடல், உரைப்பகுதி, கட்டுரை முதலியவற்றைப்பற்றிக் கருத்தாடல் செய்தல்.

- தாம் அறிந்துகொண்ட புதிய செய்திகள், நிகழ்வுகள் குறித்துத் தம் சொந்தநடையில் எடுத்துரைத்தல்.

- பள்ளி நிகழ்வுகள், மன்றச் செயல்பாடுகள் போன்றவற்றில் குறிப்பிட்ட தலைப்புகளில் பேசுவதற்கான குறிப்புகள் தயாரித்தல். திறம்படப் பேசுதல்.

- எளிய இலக்கணக் கூறுகளைப் புரிந்துகொண்டு பேசுதல். (மொழிமுதல் எழுத்துகள், மொழியிறுதி எழுத்துகள், வல்லினம் மிகும் இடங்கள், வல்லினம் மிகா இடங்கள், பகுபதம், பகாப்பதம், திணை, எண், பால், இடம், வினையாலணையும் பெயர், ஆகுபெயர்).

- பிறரோடு தயக்கமின்றித் தமிழில் பேசும் திறன் பெறுதல்.

## படித்தல்

- உரையாடல்கள், உரைப்பகுதிகள் போன்றவற்றைத் தங்குதடையின்றிப் படித்தல். படிக்கும்போது பொருளுணர்வு, குரல் ஏற்ற இறக்கம், ஒலிப்புமுறை, உரிய இடைவெளி போன்றவற்றைக் கவனத்தில் கொள்ளுதல்.

- பாடல்/கவிதை/செய்யுள் வடிவங்களைப் படித்துணர்தல். சிறு உரைப்பகுதிகள், உரையாடல்கள், கட்டுரைகள், நிகழ்வுகள் போன்றவற்றைப் படித்துத் தாம் புரிந்துகொண்ட கருத்துகளை வெளிப்படுத்துதல்.

- தாம் படிக்கும் பகுதிகளில் இடம்பெற்றுள்ள புதிய சொற்களுக்குரிய பொருளை அறிந்துகொண்டு, தம் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்.

- இலக்கணக் கருத்துகளைப் படித்துத் தெரிந்துகொள்ளுதல். (மொழிமுதல் எழுத்துகள், மொழியிறுதி எழுத்துகள், வல்லினம் மிகும் இடங்கள், வல்லினம் மிகா இடங்கள், பகுபதம், பகாப்பதம், திணை, எண், பால், இடம், வினையாலணையும் பெயர், ஆகுபெயர்).

- பாடநூலுக்கு அப்பாற்பட்டும் தமிழ் நாளிதழ்கள், வார, மாத இதழ்கள், கதைகள், கவிதைகள், இலக்கிய நூல்கள் ஆகியவற்றைப் படிப்பதற்கு ஆர்வம் கொள்ளுதல்.

## எழுதுதல்

- பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள மொழிப் பயிற்சிகளைப் பிறர் உதவியின்றித் தானே செய்தல். மொழி விளையாட்டுப் பயிற்சிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு, அவற்றிற்குரிய விடைகளைக் கண்டறிந்து எழுதுதல்.

- கருத்து விளக்கப்படங்களைப் புரிந்துகொண்டு, அவற்றிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுத முயலுதல்.

- பாடல்/ கவிதை, உரைநடை, கட்டுரை, கடிதம் ஆகியவற்றின் வடிவங்களைப் புரிந்துகொண்டு, குறிப்பிட்ட தலைப்புகளில் அவற்றை எழுதப் பழகுதல்.

- இலக்கணக் கருத்துகளைப் புரிந்துகொண்டு பொருத்தமாக எழுதிப் பழகுதல். (மொழிமுதல் எழுத்துகள், மொழியிறுதி எழுத்துகள், வல்லினம் மிகும் இடங்கள், வல்லினம் மிகா இடங்கள், பகுபதம், பகாப்பதம், திணை, எண், பால், இடம், வினையாலணையும் பெயர், ஆகுபெயர்).

- விடுகதை/ புதிர் போன்றவற்றைப் படித்து விடை எழுதுதல்.

- உரைநடைப்பகுதியைப் படித்துப் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடை எழுதுதல்.

- ஆங்கிலத்திற்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுதல்.

- சிந்தனைக்கு விருந்து அளிக்கும் படைப்பாற்றல் வளர்செயல்களில் ஆர்வத்துடன் ஈடுபடுதல்.

- சொற்கள், எளிய தொடர்கள், சிறு உரைப்பகுதி ஆகியவற்றை மொழிபெயர்த்து எழுதுதல்.

- எளிய செயல்திட்டங்களை மேற்கொள்ளுதல்.

## மேலாய்வாளர் குழு

**முனைவர் மருதூர் அரங்கராசன்,**
பேராசிரியர் (ஓய்வு). சென்னை.

**முனைவர் மு. சுதந்திரமுத்து,**
பேராசிரியர் (ஓய்வு). சென்னை.

**திரு. ச. தமிழ்ச்செல்வன்,**
எழுத்தாளர், சிவகாசி.

## பாடத்திட்ட வல்லுநர் குழு

**முனைவர் ந. நடராச பிள்ளை,**
மேனாள் இயக்குநர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூரு.

**முனைவர் ப. டேவிட் பிரபாகர்,**
தமிழ்த்துறைத் தலைவர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி, சென்னை.

**முனைவர் வ. தனலட்சுமி,**
இணைப்பேராசிரியர், சுப்பிரமணிய பாரதி தமிழ் மொழி & இலக்கியப் புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி – 605014.

**திருமதி பா. மலர்விழி,**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருவூர் - 602025, திருவள்ளூர் மாவட்டம்.

## பாட ஒருங்கிணைப்பாளர் குழு

**திரு. கோ. சிவகுமார்,**
முதுகலைத் தமிழாசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, வடமதுரை, திண்டுக்கல் மாவட்டம் - 624802

**முனைவர் இரா. சிங்காரவேலன்,**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**திரு. த.ராஜன்**
உள்ளடக்க மேலாண்மை வல்லுநர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**செல்வி த. திலகவதி**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**முனைவர். ரூபாதேவி. கோ**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

## மெய்ப்புத் திருத்துநர்

**திரு. ம. அமல்ராஜ்,**
பட்டதாரி ஆசிரியர், பல்லவபுரம் நகராட்சி மேல்நிலைப் பள்ளி, ஜமீன் இராயப்பபேட்டடை , செங்கல்பட்டு மாவட்டம்.

## புத்தக வடிவமைப்பாளர்

**திரு. ச. அசோக் குமார்,**
68, வடக்கு தெரு, எக்கியர்குப்பம், மரக்காணம் 604 303

**திரு. வே.வெண்மணிவேலன்,**
நிரலர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**திரு. வே.சந்தோஷ்,**
நிரலர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

## பாட ஆசிரியர் குழு

**திரு. ஏ. சக்திகுமார்,**
முதுகலைத் தமிழாசிரியர். அரசு மேல்நிலைப் பள்ளி, வழுதாவூர், விழுப்புரம் மாவட்டம் - 605502

**திரு. இரா. பிரபாகரன்,**
முதுகலைத் தமிழாசிரியர். அரசு மேல்நிலைப் பள்ளி, பொட்டிரெட்டிபட்டி, நாமக்கல் மாவட்டம்

**முனைவர் த. சாவித்ரி,**
முதுகலைத் தமிழாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, முத்தூர், திருப்பூர்.

**திரு. தே. சிவகணேஷ்,**
முதுகலைத் தமிழாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, மிட்டூர், திருப்பத்தூர் மாவட்டம்.

**முனைவர் வ. சேகர்,**
முதுகலைத் தமிழாசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, வீரகனூர், சேலம் மாவட்டம்5.

**முனைவர் பெ. குணசேகரன்,**
முதுகலைத் தமிழாசிரியர், அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி, கொல்லிமலை - 637 411. நாமக்கல் மாவட்டம்.

**திரு. இரா. இராஜசேகர்,**
முதுகலைத் தமிழாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, ந.சுப்பையாபுரம், விருதுநகர் மாவட்டம்.

**முனைவர் ப. மெய்யப்பன்,**
ஆசிரியப் பயிற்றுநர், வட்டார வளமையம், நம்பியூர், ஈரோடு மாவட்டம்

**திரு. செ. முத்தரசப்பன்,**
முதுகலையாசிரியர் (தமிழ்), அரசு மேனிலைப்பள்ளி, வடுகபட்டி-625603, தேனி மாவட்டம்.

**திரு. சே. இராமநாதன்,**
தமிழாசிரியர், தி.ஜ.பள்ளி, அம்பத்தூர், சென்னை.

## தட்டச்சுக் குழு

**திருமதி சோ. ஜோதி,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**திருமதி கோ. கல்விக்கரசி,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

## ஓவியங்கள்

**திரு. கா. தனஸ் தீபக் ராஜன்,**
ஓவியர், நலன் தனஸ் ஸ்டுடியோஸ், சேலம் மாவட்டம்.

**ஜின்கேடு (GINKAD) டெக் ஆர்ட் பிரைவேட் லிமிடெட்,**
எண். 348, கம்மாளர் தெரு, கொரட்டூர், சென்னை-600080

**திரு. ரா. ராஜேஷ்,**
42/2, கண்ணகி தெரு, தலைமேடு, சென்னை-600094

# தமிழ் இணையக் கல்விக்கழகம்

சென்னை – 600025.

www.tamilvu.org

978-81-977380-0-5

